எஸ். தாயப்பன்

கிறிஸ்தவர்களுடைய 100 சந்தேகங்களுக்கு பதில்

ஐயோ...இதுவரைக்கும் நாம செஞ்சதுதான் சரின்னு நெனச்சிட்டு இருந்தோமே....

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்கு பதில்

எஸ். தாயப்பன்

நன்கொடை ரூ.10/-

கிறிஸ்தவர்களின் 100
சந்தேகங்களுக்கு பதில் - மே 2011 – 10,000
ஜூலை 2011 – 10,000
பிப்ரவரி 2012 – 5,000
மே 2017 - 3,000

கண்ணீர் விடும் கங்கை – பிப்ரவரி, 5000 பிரதிகள்

பதிப்பாசிரியரின் பிற நூல்கள்

		On Circulation	Rs.
1.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு, இந்தி, ஒரிசா)	12,00,000	10/-
2.	My Cry & Joyful Life (English)	75,000	10/-
3.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	1,20,000	10/-
4.	பாவத்தின் சம்பளம் நரகம் (தமிழ், கன்னடம், ஆங்கிலம்)	2,60,000	10/-
5.	இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார்	50,000	10/-
6.	என் ஊழியக்காரனே!?	20,000	10/-
7.	இந்தியாவுக்கு இயேசு தேவை, ஏன்?	40,000	10/-
8.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே!	60,000	10/-
9.	நீங்களே எனக்கு சாட்சிகள்	30,000	10/-
10.	உண்மையான கடவுள் யார்?	60,000	10/-
11.	அற்புத சுகமளிக்கும் வைதீஸ்வரர் இயேசு	30,000	10/-
12.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை?	15,000	10/-
13.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு (பாகம் 1, 2)	25,000	10/-
14.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் (பாகம் 1, 2, 3)	30,000	10/-
15.	தானியேல் தீர்க்கதரிசனம்	3,000	10/-
16.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு (தமிழ், கன்னடம்)	20,000	10/-
17.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி - கிறிஸ்டோபர்	25,000	10/-
18.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - சுந்தர் ஏசுவடியான்	20,000	10/-
19.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 1)	10,000	10/-
20.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 2)	10,000	10/-
21.	பரலோகம் செல்ல எளிதான வழி	10,000	10/
22.	அரிய வேதம் அறிய வேண்டிய வேதம்	10,000	10/-
23.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து (பாகம் 1, 2)	20,000	10/-
24.	விவிலியமும் விஞ்ஞானமும்	20,000	10/-
25.	இந்துக்களின் கேள்வியும் பதிலும் (பாகம் 1, 2)	20,000	10/-
26.	ஜெகோவா விட்னஸின் உபதேசமும் பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 1, 2, 3)	15,000	10/-
27.	ஜெகோவா சாட்சிக்கு சத்தியத்தை அறிவிப்பது எப்படி.(பாகம் 1,2)	10,000	10/-
28.	சிலை வணக்கம் சின்னாபின்னப்படுத்தியதே	10,000	10/-
29.	கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விளைவு	10,000	10/-
30.	தெய்வீக சுகம் உண்டா?- எபி சுந்தர்ராஜ்	20,000	10/-
31.	கிறிஸ்துவின் இரண்டாம் வருகை - சிஸ்டர் மரியா	20,000	10/-
32.	தமசோமா ஜோதிர்கமய	10,000	10/-
33.	வேதமா? விஞ்ஞானமா? - Rev. பால்ராஜ்துரை	10,000	10/-
34.	மனிதனே நீ யார்? - Rev. பால்ராஜ்துரை	10,000	10/-
35.	சீரழிய சினிமா பாருங்கள் - Rev. பால்ராஜ்துரை	10,000	10/-
36.	தெய்வத்தை தேடுவோம் வாருங்கள் - Rev. பால்ராஜ்துரை	10,000	10/-
37.	இந்து மதம், இந்திய மதமா? - உறையூர் வளவன்	10,000	10/-
38.	ஆரோக்கிய வாழ்வுக்கு ஒரு தெய்வீக அழைப்பு	10,000	10/-
39.	கிறிஸ்தவர்களின் பொதுவான 100 சந்தேகங்கள்	15,000	10/-
	கலக்கலான கைப்பிரதிகள் - டாக்டர் உறையூர் வளவன்	10,000	10/-
40.	பரலோகம் செல்ல 500 ஸ்தோத்திர பலிகள் - சிஸ்டர் மரியா	3,000	10/-
41.	என் கண்கள் கண்டவை - டாக்டர் கிளிப்போர்டு குமார்	3,000	10/-
42.	உங்கள் செவிகள் கேட்க - டாக்டர் கிளிப்போர்டு குமார்	3,000	10/-
43.	மதமாற்றம் ஒரு பார்வை - M. டேவிட் டேனியல்	3,000	10/-

44.	இயேசுவே மெய்யான தேவன் - நசீலா பீவி (தமிழ், ஆங்கிலம்)	3,000	10/-
45.	சவாலை சமாளிப்பது எப்படி? - செலின் சாமுவேல் பால்ராஜ்	3,000	10/-
46.	ஒரே வழி இயேசுவின் உன்னதப் படைப்புகள் - Rev.ஜேக்கப் மனோகரன்	3,000	10/-
47.	இராம ஜென்ம பூமி - டாக்டர் உறையூர் வளவன்	5,000	5/-
48.	மதமாற்றமல்ல, மனமாற்றமே தேவை - R. ஸ்டான்லி	5,000	5/-
49.	மனமாற்றத்தை பெருக்குவது எப்படி? - R. ஸ்டான்லி	5,000	5/-
50.	வாழ்க்கையைவளப்படுத்தும் வார்த்தைகள்	10,000	5/-
51.	நாலு வேதங்களின் நாயகா இயேசு	10,000	5/-
52.	ஓர் அவசர அறைகூவல்	10,000	5/-
53.	கல்வாரி ஜெபக் குழுவும் இராணுவ சகோதரர்களும் (தமிழ், கன்னடம்)	10,000	5/-
54.	திரித்துவம் - பாஸ்டர் சாலமோன் ராஜா	10,000	5/-
55.	இஸ்லாமியர்களின் கேள்விகளுக்குப் பதில் - சாலமோன் ராஜா	10,000	5/-
56.	இந்திய ஊழிய உயர்வுக்கு ஒரு புதிய பார்வை	10,000	5/-
57.	ஆனந்த புதுவாழ்வு கண்டேன்	60,000	5/-
58.	திரும்பிப் பார்க்கிறேன் - டாக்டர் புஷ்பராஜ்	3,000	5/-
59.	ஒரு சரஸ்வதியின் கதை - டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/-
60.	திருமறை தரிசனங்கள் - டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/-
61.	திருமறை துணுக்குகள் - டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/-
62.	கள்ள உபதேசம் உருவாகக் காரணம் - திருப்பூர் சாலமோன்	3,000	5/-
63.	இந்தியாவின் சாதனை படைத்த யூதர்கள்	3,000	5/-
64.	இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சனைகள்	3,000	5/-
65.	இஸ்ரேல் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட தேசம்	3,000	5/-
66.	பாவம் பலவிதம் - Rev. ராபர்ட் டேனியல்	3,000	5/-
67.	யெகோவா தேவன் - Rev. ராபர்ட் டேனியல்	3,000	5/-
68.	இப்படி செய்தால் நீங்கள் பாக்கியவான்கள் - Rev. ராபர்ட் டேனியல்	3,000	5/-
69.	666 பயோசிப் எச்சரிக்கை! - சிஸ்டர் மரியா	10,000	5/-
70.	இல்லவே இல்லாத இந்து மதம் - பீட்டர் அலெக்சாண்டர்	3,000	5/-
71.	கர்வாப்சி - பீட்டர் அலெக்சாண்டர் (தமிழ், ஆங்கிலம்)	6,000	5/-
72.	மந்தை பெருக மகத்தான மாற்றங்கள்	5,000	5/-
73.	இது உங்கள் உயிர் காக்கும் முயற்சி - சாந்திதேவி	15,000	2.50
74.	மோட்ச வாழ்வுக்கு வழி என்ன- சாந்திதேவி	10,000	2.50
75.	இறைய பெற்றோரின் பாவம் நாளை பிள்ளைகளுக்குச் சாபம் - செலின் சாமுவேல்	5,000	2.50
76.	திருமறையும் ஜாதிகளும் - டாக்டர் உறையூர் வளவன்	3,000	2.50
77.	எப்படி ஜெபிக்கணும்? - டாக்டர் கிளிஃபோர்டு குமார்	3,000	2.50
78.	ஞானஸ்நானமும், பரிசுத்தவ ஆவியும் அபிஷேகமும் - Rev. ராபர்ட் டேனியல்	3,000	2.50
79.	உன் தேவனை சந்திக்க நீ ஆயத்தமா? - R. ஸ்டான்லி (தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம்)		2.50
80.	இரண்டு கேள்விகள் - Dr. சாம் ஏசுதாஸ்	5,000	2.50
81.	DVD ஆனந்த புதுவாழ்வு (Telefilm)		100
82.	DVD அமாவாசை (Telefilm)		100
83.	DVD சவால் - ஆரோன்		50
84.	DVD ஜீவராகம் - V. ராஜா		50
85.	VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (தமிழ், கன்னடம், ஹிந்தி, மலையாளம்)	10,50,000	10/-
86.	VCD எழுந்து காட்டுவோம் (தமிழ்)	20,000	10/-
87.	VCD முக்திக்கு வழி கிறிஸ்தவமே (தமிழ்)	20,000	10/-
88.	VCD கதாகாலட்சேபம் (தமிழ	25,000	10/-
89.	VCD தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே (தமிழ்)	15,000	10/

சுவி. டாக்டர் எஸ்.தாயப்பன் வெளியிட்டுள்ள புத்தகங்கள் / விசிடிக்கள் செட்டாக வாங்க பட்டியல்

S-1 **இறைவன் ஆசீர்வதித்த இஸ்ரேல் தேசம் (ரூ.15 + தபால் செலவு ரூ.5) (3 புத்தகங்கள்)** (1) இந்தியாவில் சாதனை படைத்த யூதர்கள் (2) இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சினை (3) இஸ்ரேல் ஆசீர்வதிக்கப்பட்ட தேசம்

S-2 **அறிவிப்போம் சுவிசேஷம் (ரூ.20 + தபால் செலவு ரூ.5) (8 புத்தகங்கள்)** (1) இது உயிர் காக்கும் முயற்சி (2) மோட்சம் செல்லும் வழி (3) இரண்டு கேள்விகள். (4) இன்றைய பெற்றோரின் பாவம் நாளை பிள்ளைகளுக்குச் சாபம் (5) இயேசு இணையற்றவரா? (6) மருத்துவத்தை வென்ற சாட்சிகள் (7) எப்படி ஜெபிக்க வேண்டும் (8) ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியும், அபிஷேகமும்

S-3 **இயேசுவின் இரண்டாம் வருகை (ரூ.25 + தபால் செலவு ரூ.5) (5 புத்தகங்கள்)** (1) ஓர் அவசர அறைகூவல் (2) இயேசுவின் இரண்டாம் வருகை (3) 666 எச்சரிக்கை (4) உன் தேவனை சந்திக்க நீ ஆயத்தமா? (5) இயேசு இணையற்ற தேவன்

S-4 **ஈடு இணையில்லா சத்திய வேதம் (ரூ.30 + தபால் செலவு ரூ.5) (4 புத்தகங்கள்)** (1) அரிய வேதம், அறிய வேண்டிய வேதம் (2) ஒரே வழி இயேசுவின் உன்னதப் படைப்புகள் (3) திருமறை துணுக்குகள் (4) திருமறை தரிசனங்கள்.

S-5 **மனமாற்றமே தேவை (ரூ.30 + தபால் செலவு ரூ.5) (4 புத்தகங்கள்)** (1) கர்வாப்சி (2) மதமாற்றம் ஒரு பார்வை (3) மதமாற்றமல்ல, மனமாற்றமே தேவை (4) மனமாற்றத்தை பெருக்குவது எப்படி?

S-6 **வேதமும் விஞ்ஞானமும் (ரூ.30 + தபால் செலவு ரூ.5) (3 புத்தகங்கள்)** (1) விவிலியமும் விஞ்ஞானமும் (2) வேதமா? விஞ்ஞானமா? (3) மனிதனே நீ யார்?

S-7 **நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் (ரூ.40 + தபால் செலவு ரூ.5) (4 புத்தகங்கள்)** (1–3) நிறைவேறிய தீர்க்க தரிசனங்கள் – பாகம் 1, 2, 3. (4) தானியேலின் தீர்க்கதரிசனம்

S-8 **கிறிஸ்தவத்தை எதிர்க்காதே (ரூ.40 + தபால் செலவு ரூ.5) (5 புத்தகங்கள்)** (1) கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு (2) கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விள்ளவு (3) ராமஜென்ம பூமி. (4) ஒரு சரஸ்வதியின் கதை (5) சிலை வணக்கம் சின்னாபின்னப்படுத்தியதே.

S-9 **எது பாவம்? (ரூ.50 + தபால் செலவு ரூ.10) (7 புத்தகங்கள்)** (1) பாவத்தின் சம்பளம் நரகம் (2) பாவம் பலவிதம் (3) சீரழிய சினிமா பாருங்கள் (4) திரும்பிப் பார்க்கிறேன் (5) பாவப் பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் – பாகம் 1 (6) பாவப் பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் – பாகம் 2 (7) இன்றைய பெற்றோரின் பாவம் நாளை பிள்ளைகளுக்கு சாபம்

S-10 **விசுவாசம் வளர்க்கும் வீசிடிக்கள் (ரூ.60 + பதிவு தபால் செலவு ரூ.35) (6 வீசிடிக்கள்)** (1) என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (2) முக்திக்கு வழி கிறிஸ்தவமே (3) சைவமும் வைணவமும் கிறிஸ்தவமும் (4) தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே (5) எழுந்து கட்டுவோம் (6) நிம்மதியைத் தேடி

S-11 **தேசம் சந்திக்கப்பட (ரூ.70 + தபால் செலவு ரூ.10) (10 புத்தகங்கள்)** (1) என் ஊழியக்காரனே (2) இந்தியாவில் ஏன் சுவிசேஷம் பரவவில்லை? (3) இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு (4) பரலோகம் செல்ல எளிதான வழி (5) கலக்கலான கைப்பிரதிகள் (6) கல்வாரி ஜெபக்குழுவும் இராணுவ சகோதரர்களும் (7) இந்திய ஊழிய உயர்வுக்கு ஒரு புதிய பார்வை (8) மந்தை பெருக மகத்தான மாற்றம் (9) இரண்டு கேள்விகள். (10) ஆனந்த புது வாழ்வு கண்டேன்

S-12 **மெய்சிலிர்க்க வைக்கும் அற்புத சாட்சிகள் (ரூ.70 + தபால் செலவு ரூ.8) (8 புத்தகங்கள்)** (1) என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (2) நீங்களே எனக்கு சாட்சிகள் (3) இந்தியாவுக்கு இயேசு தேவை ஏன்? (4) உயிர் கொடுத்து உயர்த்தும் உன்னதர் இயேசு (5) தெய்வீக சுகம் உண்டா? (6) அற்புத சுகம் அளிக்கும் வைத்தீஸ்வரர் இயேசு (7) மருத்துவத்தை வென்ற சாட்சிகள் (8) நசீலா பீவியின் சாட்சி

S-13 **கிறிஸ்துவுக்குள் வளர்ச்சி (ரூ.70 + தபால் செலவு ரூ.8) (8 புத்தகங்கள்)** (1) இயேசு உன்னோடு பேசுகிறார் (2) என் கண்கள் கண்டவை (3) உங்கள் செவிகள் கேட்க (4) சவாலை சமாளிப்பது எப்படி? (5) திரித்துவம். (6) பரலோகம் செல்ல 500 ஸ்தோத்திர பலிகள் (7) யகோவா தேவன் (8) கள்ள உபதேசம் உருவாக காரணம் என்ன?

S-14 **இந்து வேதம் கூறும் இயேசு கிறிஸ்து (ரூ.70 + தபால் செலவு ரூ.8) (8 புத்தகங்கள்)** (1) சித்தர்கள் கண்ட மெய்பொருள் (2) உண்மையான கடவுள் யார்? (3) திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி (4) நாலு வேதங்களின் நாயகர் இயேசு (5) இல்லவே இல்லாத இந்து மதம் (6) சைவமும் வைணவமும் கிறிஸ்தவமும் (7–8) இந்திய வேதங்களில் இயேசு பாகம் 1, 2

S-15 **எக்கேள்விகளுக்கும் பதில் (ரூ.130 + தபால் செலவு ரூ.15) (14 புத்தகங்கள்)** (1) கத்தோலிக் கர்களின் கனிவான கவனத்திற்கு பாகம் 1, 2. (3–4 இந்துக்களின் கேள்விகளுக்குப் பதில் – பாகம் 1, 2 (5–7) ஜெகோவா சாட்சியின் கேள்விகளுக்கு பதில் பாகம் – 1, 2, 3 (8–9) ஜெகோவா சாட்சிக்கு சத்தியத்தை எப்படி அறிவிப்பது? – பாகம் 1, 2 (10) தமசோமா ஜோதிர்கமய (11) இஸ்லாமியரின் கேள்விகளுக்குப் பதில் (12) கிறிஸ்தவர்களின் கேள்விகளுக்குப் பதில் (13) இந்து மதம் இந்திய மதமா? (14) கத்தோலிக்கர்களின் 50 கேள்விகளுக்குப் பதில்

S-16 **சுவிசேஷம் அறிவிக்க சினிமா படங்கள்** (1) அமாவாசை (ரூ.100/–), (2) ஆனந்தப் புதுவாழ்வு (ரூ.100/–) **+ பதிவு தபால் செலவு ரூ.35**

FOR FURTHER DETAILS / CONTACT

EVA. DR. S. THAYAPPAN, 12, G.D. NAIDU STREET, BALAJI AVENUE - 1
CHITLAPAKKAM MAIN ROAD, SELAIYUR - P.O. CHENNAI - 600 073
E-MAIL: sakthiprabha@yahoo.com
TELE: 044 - 22234626, 4355 2899 / CELL: 8680859894

BANK DETAILS: CITY UNION BANK, CHITLAPAKKAM, CHENNAI
S.THAYAPPAN A/C No. 295001001980044
IFS CODE: CIUB 0000295

என்னுரை

16.3.2010 அன்று வாழப்பாடியிலும், சேலத்திலும் எனது சாட்சியையும், செய்தியையும் கொடுக்கும்படி சுவி.M.ஜான்வெஸ்லி அவர்கள் என்னைக் கூப்பிட்டு இருந்தாரு. வாழப்பாடி கூட்டத்துக்காக கிளம்பிக்கிட்டு இருக்கும் போது அவரோட சகோதரியும், அவருடைய கணவரும் என்னைப் பாக்க சேலத்துக்கு வந்தாங்க. அவங்களுக்கு ஜெபம் பண்றதுக்கு முன்னாடி "முழுகி ஞானஸ்நானம் எடுத்துட்டீங்களா?"ன்னு கேட்டேன். அவர் ஆற்காடு லூத்தரன் சபைப் பிரிவைச் (ALC) சேர்ந்தவர். "முழுகி ஞானஸ்நானம் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. எங்களுக்கு அதில எல்லாம் நம்பிக்கை கிடையாது. இயேசுவோட சிலுவையில அறையப்பட்ட கள்ளன் ஞானஸ்நானம் எடுக்காமலேயே பரதேஸ் போனானே"ன்னு வாதம் பண்ண ஆரம்பிச்சுட்டாரு. எனக்கு ஒரு சில நிமிடங்களே பேசுறதுக்கு நேரம் இருந்துச்சு. முழுக்கு ஞானஸ்நானத்தைக் குறிச்சு சில வசனங்களை சொன்னேன். அதை ஏத்துக்கிடாம எதிர்வாதம் பண்ண ஆரம்பிச்சாரு. நேரம் இல்லாததுனால அவங்களுக்காக ஜெபிச்சுட்டு உடனே வாழப்பாடி மீட்டிங்கிற்கு கிளம்பிட்டேன்.

கார்ல போகும் போது ஆவியானவர் இடைப்பட்டார். கிறிஸ்தவங்களா இருந்தும் இப்படி வசனத்தை புரிஞ்சுகிகிடாதவங்க எத்தனை பேரு இருக்கிறாங்க பாத்தியா? வசனத்தை தவறா புரிஞ்சுக்கிட்டவங்க, ஏதோ ஒரு வசனம், சம்பவத்தை மட்டும் கெட்டியா பிடிச்சுக்கிட்டு தவறா உபதேசம் செய்யுறவங்கன்னு இப்படி எத்தனை பேர் இருக்கிறாங்க பாரு. இவங்களுக்காக என்ன செய்யப் போறே? அவங்களோட தவறுகளை சுட்டிக் காட்டி, சந்தேகங்களை போக்கி, அவங்களின் நியாயமான கேள்விகளுக்கு, புதுசா கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறவர்களுடைய சந்தேகங்களுக்கு பதில் கொடுக்க வேண்டாமா? ஆவியானவர் டிக்டேஷன் மாதிரி கொடுக்க, கடகடன்னு கேள்விகளை கார்லேயே எழுத ஆரம்பிச்சேன். 60க்கும் மேற்பட்ட கேள்விகளை வாழப்பாடி போறதுக்குள்ள எழுதியாச்சு. சில நண்பர்களின் சந்தேகங்கள், கேள்விகளையும் சேர்த்தேன். 100 கேள்விகள் தயாராயிடுச்சு. கேள்விகளை எழுதி முடிச்சாப் பிறகு ஒருதடவை அவைகளை படிச்சுப் பார்த்தேன். அப்படியே எனக்கு தலை சுத்திடுச்சு. ஏகப்பட்ட எடக்கு மடக்கான கேள்விகள்! அம்மாடி, நம்மால இது முடியாதுப்பா சாமின்னு அப்படியே தள்ளி வச்சுட்டு சோர்ந்து போயிட்டேன்.

ஆவியானவர் மீண்டும் பேச ஆரம்பிச்சாரு. *'பெறச் செய்கிற நான் உன்னை பெறச் செய்யாமல் இருப்பேனோ?'* (ஏசா 66:6). *'உனக்கிருக்கும் பெலத்தோட நீ போ. உன்னை அனுப்புகிறவன் நானல்லவா?'* (நியா 6:14). *'என்னை நோக்கிக் கூப்பிடு. அப்பொழுது நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய விஷயங்களை உனக்கு நான் வெளிப்படுத்துவேன்'*னு எரே 33:3ஐ சொல்லி தட்டிக் கொடுத்தாரு.

முழங்கால் போட்டு கண்ணீரோடு ஜெபிச்சேன். 'ஆண்டவரே, நானே அரைகுறை! என்னைக் கொண்டு எதுக்குப்பா இந்த விஷப் பரீட்சை? என்னை ஆளை விடும்'னு கெஞ்சினேன். 'நீ தான் எழுதுற. போயி எழுது. **பிளஸ்சிங் யூத் மிஷன் சகோ.ஸ்டான்லி** அவர்கள் எழுதின '***கிறிஸ்தவர்களின் கேள்விகளுக்கு தெளிவான பதில்கள்*** – தொகுப்பு ஒன்று, இரண்டு' என்ற இரண்டு புத்தகங்களையும் AG சர்ச் பெரியவர் **பாஸ்டர் பி.எஸ். ராஜமணி** அவர்கள் எழுதின '**உங்கள் கேள்விகளுக்குப் பதில்கள் – பாகம் I & II**' ஆகிய இரண்டு புத்தகங்களும் எனக்கு கிடைக்கும்படி தேவன் கிருபை பாராட்டினாரு. ஜெபத்தோட அவைகளைப் படிச்சு முடிச்சேன்.

அப்படியே ஆடிப் போயிட்டேன். எவ்வளவு ஆழமான, கருகலான சத்தியங்களையும் எவ்வளவு எளிதா, அழகா, அருமையா விளக்கி இருக்காங்க. இந்த இருவருக்காகவும் நான் கர்த்தரைத் துதிக்கிறேன். அவர்களை கர்த்தர் மென்மேலும் ஆசீர்வதித்து இன்னும் அதிகமான ஆவிக்குரிய புத்தகங்களை எழுத வைப்பாராக! ஆவியானவர் கிட்ட கேட்டேன். 'ஏன் ஆண்டவரே, விஷயம் நல்லா தெரிஞ்ச இரண்டு பேரு இது பற்றி ஏற்கனவே எழுதியிருக்காங்களே. அவைகள் போதாதா? இன்னும் எதுக்கு நானும் எழுதணும்?'னு கேட்டேன். 'இவங்க எழுதினதை எத்தனை பேரு படிச்சிருங்காங்க? இன்னும் படிக்காதவங்க, தெளிவு இல்லாம இருக்கிறவங்க எத்தனையோ பேரு இருக்கிறாங்களே. பேசாம எழுது'ன்னாரு. 'அப்போ எழுதப் போறது நானல்ல. நீர் தான் எழுதணும். என்னால முடியாது. ஞான சூன்யமான எனக்கு எழுத நீர் தான் அதற்குரிய ஞானத்தையும், வார்த்தைகளையும் தரணும். எந்த உபதேசக் குழப்பமும், குளறுபடியும் வராதபடிக்கு நீர் தான் பாத்துக்கிடணும்'னு ஜெபத்தோட பதில் எழுத ஆரம்பிச்சேன்.

இரவும் பகலும் இதே சிந்தனை. பல ரெஃபரென்ஸ் புக்ஸ், விளக்க உரைகளை தேடித் தேடி கண்டுபிடிச்சு படிச்சேன். ஒரே மாசத்தில நூறு கேள்விகளுக்கு பதில் எழுதி முடிக்க தேவன் கிருபை தந்தாரு. நான் என்ன எழுதினாலும் முதல்ல அதை என்னுடைய ஆவிக்குரிய நண்பர் சகோ. என். சஞ்சீவியிடமும், என்னை ஊழியத்தில் உற்சாகப்படுத்தும் பாஸ்டர் அலெக்ஸ் (மதுரை நாகமலை புதுக்கோட்டை AG சர்ச்) அவரிடமும் கொடுப்பேன். அவங்க அதை வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை நோண்டி நுருவி படிச்சுப் பார்த்திட்டு பல நல்ல கருத்துக்களை எனக்கு சொல்லுவாங்க. இதை நான் பெரிதும் மதிக்கும் பெரியவர் பாஸ்டர். பி.எஸ். ராஜமணி அவர்களிடமும் அனுப்பினேன். சில திருத்தங்களைக் கூறினார். அணிந்துரையையும் அன்போடு அளித்தார், அவருக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஒரு வேதாகமவல்லுனன் அல்ல. கிறிஸ்துவுக்குள் நான் ஒரு குழந்தை தான். கற்றது கை மண்ணளவு. இன்னும் கல்லாதது உலக அளவு இருக்கு. எனக்கு இப்போ இது தேவை இல்லாதது தான். இருந்தாலும்

கிறிஸ்தவர்களின் பல சந்தேகங்கள் தீர்க்கப்படணும். அனைவரும் ஆவியில் அனலாக மாறணும். வேத வசனங்களில் பலப்படணும், சத்தியத்தை சரியா புரிஞ்சுக்கிடணும்கிற ஒரு ஆதங்கத்தில, நல்ல நோக்கத்தோட, தயக்கத்தோட இதை எழுதியுள்ளேன்.

இதைப் படிச்சுப் பாத்துட்டு ஒரு சிலரின் கண்கள் திறக்கப்பட்டாலும், மகிமை எல்லாமே கர்த்தருக்கே உரியது. இந்த அடிமைக்கு ஒண்ணுமே வேண்டாம். இந்த நூல் பற்றி உங்கள் கருத்துக்களை தாராளமா எனக்கு எழுதி அனுப்புங்க. நான் கற்றுக் கொள்ள வேண்டியது இன்னும் நெறைய இருக்கு.

இந்த நூலை வாசிக்கும் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

சென்னை – 73
1.7.2010

கிறிஸ்துவின் பணியில்
அன்பு சகோதரன்

எஸ். தாயப்பன்

Rev. **Dr. P.S. RAJAMONI**
General Superintendent of SIAG
Asst. Gen. Superintendent of A.G., India
Missions Director - A.G., India.

அணிந்துரை

திரு தாயப்பன் அவர்களை கர்த்தர் அற்புதமாய் இரட்சித்து வல்லமையாய்ப் பயன்படுத்தி வருகின்றார்.

"கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில்"

என்றபுத்தகத்தைஎழுதியுள்ளார்கள். பெரும்பான்மையான கேள்விகள் அனுபவரீதியானவை. அவைகளுக்கான பதில்களை தன் பாணியில் எழுதியுள்ளார்கள் பலர் ஏற்றுக்கொள்ளலாம், சிலர் எதிர்க்கலாம். ஆகிலும் தன் கருத்தைத் தெளிவாக எழுதியுள்ளார்கள்.

கிறிஸ்தவர்கள் கேட்கும் பல கேள்விகளுக்கு பரிசுத்த வேதாகமத்தில் நேரடியான பதில்களைக் காண முடியாவிட்டாலும் வேதாகம அடிப்படை சத்தியங்களை மனதில் பதில் எழுத முயற்சித்துள்ளார்கள்.

வாசித்துப் பயனடைய வாழ்த்துகிறேன்.

இரட்சகர் இயேசுவின் பணியில்,

சங்கை **P.S. ராஜமணி**
பொதுத்தலைவர் – தென்னிந்திய தேவ சங்கம்.

Resi : 100, Navalar Nagar, Bye-Pass Road, MADURAI-625 016.
H.O. : Navalar Nagar, MADURAI -16.
Ph : 0452 - 2301165

பொருளடக்கம்

A. உபதேசம் 14

கே 1. கிறிஸ்துவை மையமாகக் கொண்ட கிறிஸ்தவத்தில் ஏன் இத்தனை பிரிவுகள்? 14

கே 2. எல்லா பிரிவுகளுக்குமே பைபிள் ஒண்ணு தான். பின் ஏன் இத்தனை உபதேசக் குழப்பங்கள்? 15

கே 3. சில சபைகளில மூச்சுக்கு முன்னூறு தடவை அல்லேலூயா சொல்றாங்களே. இது தேவையா? 16

கே 4. இரண்டு சபைகளிலே நான் மெம்பரா இருக்கலாமா? 17

கே 5. உண்மையில யார் தான் தெய்வம்? பிதாவா? குமாரன் இயேசுவா? பரிசுத்த ஆவியானவரா? 18

கே 6. மேரி இல்லாமலா இயேசு கிறிஸ்து பிறந்தாரு? பிறகு ஏன் அவரைக் கும்பிடக் கூடாது? 18

கே 7. மேரியைக் கும்பிட்டாலும் அற்புதம் நடக்குதே. வேளாங்கண்ணியிலும் அதிசயம் நடக்குதே. 19

கே 8. அற்புதங்களை செய்த அந்தோணியார், பவுல், சவேரியாரைக் கும்பிடலாமா? கூடாதா? ஏன்? 19

கே 9. இயேசுவின் சிலை, சிலுவை, சிலுவையில் தொங்கும் இயேசுவின் சிலை, அவரின் படம் இவைகளை கும்பிடலாமா? 20

கே 10. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, இந்த மூவரில் யாரைக் கும்பிடணும்? 20

கே 11. குழந்தை இயேசுவைக் கும்பிடலாமா? 21

கே 12. சத்தமாய் எதுக்கு ஆராதிக்கணும்? அமைதியா ஆராதிக்கக் கூடாதா? 21

கே 13. பைபிள் மட்டும் தான் படிக்கணுமா? நல்ல ஆவிக்குரிய புத்தகங்களை படிக்கக் கூடாதா? 22

கே 14. பாண்டிச்சேரியில் இம்மாகுலேட் சுஜ சென்ட்ரில் பைபிளையும், குரானையும், பகவத் கீதையையும் ஒண்ணா வச்சு தியானம் சொல்லிக் கொடுக்குறாங்க. இது சரியா? 23

கே 15. அதே சுஜ சென்ட்ரில் தியானத்தின் முடிவில் 'ஓம் சாந்தி' என்று சொல்கிறார்கள். கேட்டால் 'ஆமேன்'னும் 'ஓம்'மும் ஒண்ணுதான்னு சொல்றாங்க. ... 24

கே 16. இந்த ஜெகோவா விட்னஸ், ஒன்லி ஜீஸஸ்காரங்க அடிக்கடி வீட்டுக்கு வந்து குழப்புறாங்களே. 25

கே 17. என்ன தான் ஜெபிச்சாலும், எத்தனை பேர் ஜெபிச்சாலும், சுகமளிக்கும் வரங்களைப் பெற்ற ஊழியர்கள் ஜெபிச்சும் சிலருக்கு நோயிலிருந்து பூரண சுகம் கிடைக்கிறதில்லையே. ஏன்? 26

கே 18. உடம்புக்கு சுகமில்லைன்னா டாக்டர்கிட்ட போறது தப்பா? 26

கே 19. குடும்பத்தின் மேல உள்ள சாபங்களை முறித்தல் (கர்ஸ் பிரேக்கிங்)ன்னு சில பேரு இப்போ கிளம்பி இருக்காங்களே. 27
கே 20. நம்மோட பிரச்சனைகளுக்காக ஜெப மையங்கள், ஜெப கோபுரங்கள், ஜெபத் தோட்டங்களை அணுகலாமா? 28
கே 21. வேதத்தில சொல்லப்பட்டுள்ள வாக்குத் தத்தங்கள் எல்லாமும் நமக்குத் தானே கொடுக்கப்பட்டு இருக்கின்றன? 28
கே 22. எங்க சபைக்கு வருகிற ஒரு விசுவாசிக்கு பிசாசு பிடிச்சிருக்கு. சபையில ஜெபிக்கும் போது அது பயங்கரமா ஆட்டம் போடுது. 29
கே 23. பெண்கள் முக்காடு போட்டுக் கொள்ளணுமா? 30

B. அபிஷேகம் 31
கே 24. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஏன் எல்லாருக்கும் கிடைக்கலை? 31
கே 25. அந்நிய பாஷை பேசினாத் தான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இருக்குதுன்னு அர்த்தமா? 32
கே 26. அந்நிய பாஷை சொல்லித் தான் ஜெபிக்கணுமா? 32
கே 27. சபையில, பொது இடத்தில அந்நிய பாஷை பேசி ஜெபிக்கலாமா? 32
கே 28. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாம ஒருத்தன் பரலோகம் போக முடியாதா? 33

C. ஞானஸ்நானம் 35
கே 29. முழுக்கு ஞானஸ்நானம் அவசியமா? 35
கே 30. முழுகி ஞானஸ்நானம் எடுக்காதவர்கள் பரலோகம் போக முடியாதா? 36
கே 31. சிலுவையில அறையப்பட்ட கள்ளன் ஞானஸ்நானம் இல்லாமலேயே பரலோகம் போனானே? 36
கே 32. முழுகி ஞானஸ்நானம் எடுத்தவங்களும் பாவம் செய்யுறாங்களே. அவங்க கதி? 36
கே 33. முழுகி ஞானஸ்நானம் எடுக்காத கிறிஸ்தவர்கள் எத்தனையோ பேர் எந்த பாவமுமே செய்யாம இருக்காங்களே அவங்க நிலை என்ன? 37
கே 34. நான் ஒரு கஸா கிறிஸ்தவன். முழுகி ஞானஸ்நானம் எடுக்க சுஸாயில வாய்ப்பு இல்லையே. என்ன செய்ய? 38
கே 35. குழந்தையை பிரதிஷ்டை செய்யணுமா? பிரதிஷ்டை செய்யப்பட்ட குழந்தைக்கு முழுக்கு ஞானஸ்நானம் அவசியமா? 38
கே 36. நான் ஞானஸ்நானம் எடுக்க விரும்புகிறேன். என் அப்பா அம்மா வச்ச பேரை மாத்திக்கிடணுமா? 39
கே 37. ஞானஸ்நானம் கொடுக்கிற சில போதகர்களே ரொம்ப மோசமா, கேவலமா நடந்துக்கிடுறாங்களே? 40

D. பாவமன்னிப்பு 41
கே 38. பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இயேசுவுக்கு மாத்திரம் தான் இருக்கா? 41
கே 39. மேரி மாதாவுக்கு பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இருக்கா? 42
கே 40. பவுல், அந்தோணியார், சவேரியார் இவங்களுக்கு நம் பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இருக்கா? 42
கே 41. சபைப் போதகர்கள், குருமார்கள், பிஷப்புகளுக்கு பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இருக்கா? 42
கே 42. இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் பாவமே செய்யாம இருக்க முடியுமா? 43

E. பரலோகம், நரகம் 43
கே 43. சில பிரிவைச் சேர்ந்தவங்க 'நாங்க மட்டும் தான் பரலோகம் போவோம்'னு சொல்றாங்களே. 43
கே 44. ஐசுவரியவான் பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்வது இல்லைன்னா, பணக்காரர்கள் யாருமே பரலோகம் போக முடியாதா? 44
கே 45. நரகத்தில் தள்ள இயேசு ஒரு இடி அமின் அல்ல என சிலர் சொல்றாங்களே.. 45
கே 46. நரகம்னு ஒண்ணு இல்லவே இல்லைன்னு சில பேரு சொல்றாங்களே? 45
கே 47. பெந்தகோஸ்தே சபையை சேராத மற்ற பிரிவுக்காரங்க பரலோகம் போக மாட்டாங்களா? 46
கே 48. திருமணம் ஆனவங்க பரலோகம் போக மாட்டாங்க. மறுரூபம் ஆக்கப்பட மாட்டாங்கன்னு சில பேரு சொல்றாங்களே. அது உண்மையா? 46
கே 49. நான் பரலோகம் கண்டிப்பா போகணும். அதுக்கு நான் என்ன செய்யணும்? .. 47

F. ஊழியம் 48
கே 50. நான் ஊழியம் செய்ய விரும்புகிறேன். அழைப்பு இருந்தாத் தான் செய்யணும்னு சிலர் சொல்றாங்களே. 48
கே 51. நான் வேலை பார்த்துக்கிட்டே ஊழியம் செய்யலாமா? 50
கே 52. எனக்கு வயசாயிடுச்சு. என்னால ஓடியாடி எல்லாம் வேலை செய்ய முடியாது. நான் என்ன செய்யலாம்? 50
கே 53. மிஷனெரி ஊழியங்களை நான் தனிப்பட்ட முறையில காணிக்கையினால தாங்கலாமா? 51
கே 54. நான் ஒரு ஊழியக்காரன், திருவிருந்து எடுக்க நான் திருமுழுக்கு எடுத்த சபைக்கு போக முடியாதபடிக்கு வெளியூரில இருப்பேன். ஊழியம் செய்யும்

சபையிலேயே நான் பந்தி எடுக்கலாமா? 52
கே 55. ஆதிகாலத்தில நடந்த அற்புதங்கள் இன்னிக்கு நடக்க மாட்டேங்குதே. ஏன்? .. 52
கே 56. சிலருக்கு அற்புதம் நடக்குது. சிலருக்கு நடக்க மாட்டேங்குது. ஏன்? 54
கே 57. பரிசுத்தவான்களில் பலர் அகால மரணம் அடைகின்றனரே, இல்லையேல் வியாதியில் கஷ்டப்படுகின்றனரே. ஏன்? 54

G. திருமணம் 55
கே 58. கிறிஸ்துவுக்குள்ள இன்னும் ஜாதி பார்த்து திருமணம் செய்யுறாங்களே. 55
கே 59. காதல் திருமணம் தவறா? கிறிஸ்துவர்கள் காதலிக்கக் கூடாதா? 56
கே 60. ஒரு விசுவாசி அவிசுவாசியை திருமணம் செய்யலாமா? 58
கே 61. ஒரு கிறிஸ்தவன் தன் அக்கா மகளை, மாமன் மகளை, நெருங்கிய உறவில் திருமணம் செய்து கொள்ளலாமா? 59
கே 62. கிறிஸ்தவங்க அதிக குழந்தைகளைப் பெற்றுக்கிடலாமா? 59
கே 63. கருக்கலைப்பு செய்யுறது பாவமா? 61
கே 64. குழந்தை பிறப்பதை தள்ளிப் போட இயற்கை வழிகளை கையாளலாமா? 61
கே 65. கிறிஸ்துவுக்குள் நாம் அனைவரும் ஒன்றாக, ஒரே குடும்பமாக இருக்கிறோம் என்பதற்காக ஒரு சபைக்குள்ளேயே இருக்கும் விசுவாசிகள் திருமணம் செய்து கொள்ளக் கூடாதா? 62
கே 66. ஒரு சபைப் பிரிவைச் சேர்ந்தவங்க அந்த சபைப் பிரிவுக்குள்ளேயே தான் திருமணம் செய்யணுமா? மற்ற பிரிவுகளிலும் செய்து கொள்ளலாமா? 62
கே 67. அபிஷேகம் பெற்றவர்கள் அபிஷேகம் பெற்றவர்களையே திருமணம் செய்து கொள்ளணுமா? 63
கே 68. ஒரு இந்துவுக்கு என்னைத் திருமணம் செஞ்சு வைக்க என்னை வற்புறுத்துகின்றனர் என்ன செய்ய? 63

H. கிறிஸ்தவ வாழ்வு 63
கே 69. இறந்த நம் தாய் தந்தை, கணவன், மனைவியின் படத்தை வச்சு கும்பிடலாமா? 63
கே 70. அவர்களின் இறந்த நாளைக் கொண்டாடலாமா? 64
கே 71. அப்பா, அம்மா, கணவர், மனைவியின் கல்லறைக்குப் போகலாமா? அதை அழகுபடுத்தலாமா? 65
கே 72. இறந்த பரிசுத்தவான்கள் நம்மை ஆசீர்வதிக்க முடியுமா? 66
கே 73. சுய புணர்ச்சியில் ஈடுபடுகிறேன். தப்புன்னு தெரியுது. ஆனாலும் என்னாலே அதை விட முடியலை. 66

கே 74. சொத்து சேர்ப்பது, வீடுகட்டுவது தவறா? 67
கே 75. பிள்ளைகளின் படிப்பு, எதிர்காலம், திருமணத்திற்காக பணம் சேர்த்து வைக்கலாமா? 67
கே 76. ஓய்வு நாளான ஞாயிற்றுகிழமையில வியாபாரம் செய்யலாமா? வேலைக்கு போகலாமா? 68
கே 77. கிறிஸ்தவர்கள் ஒரு அவசரத் தேவைக்காக கடன் வாங்கலாமா? 69
கே 78. கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களுக்கு கடன் கொடுக்கலாமா? 69
கே 79. கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கு வட்டிக்கு கடன் கொடுக்கலாமா? 70
கே 80. பொழுது போக்கிற்காக, நட்புக்காக, காசு இல்லாம சீட்டு ஆடலாமா? 70
கே 81. கூஎ பார்ப்பது தப்பா? கிறிஸ்தவமல்லாத நல்ல புத்தகங்களைப் படிக்கலாமா? . 70
கே 82 கூட்டுக் குடும்பத்தில் நான் மட்டும் தான் இரட்சிக்கப்பட்டு இருக்கேன். குத்துவிளக்கு ஏற்றணும், சாமி படத்துக்கு பூப்போடணும், பொட்டு வைக்கணும்னு சொல்றாங்க. என்ன பண்ண? 71
கே 83. கிறிஸ்தவர்கள் நகை போட்டுக்கலாமா? 73
கே 84. என் கணவர் இன்னும் இரட்சிக்கப்படலை. எவ்வளவோ ஜெபம் பண்ணிட்டேன். என்ன செய்ய? 74
கே 85. வியாதியில கஷ்டப்படுறதுக்காகவா ஆண்டவர் நம்மைப் படைச்சாரு? 75
86. பிள்ளைகள் சொன்னபடி கேக்க மாட்டேங்குதுங்க. பயங்கர டென்ஷன் ஆகுறேன். என்ன செய்ய? 76

I. சமூக வாழ்வு 77
கே 87. கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களோடு பழகலாமா? 77
கே 88. இந்து நண்பர்கள், உறவினர்கள் தீபாவளி பலகாரம் கொடுத்தால் சாப்பிடலாமா? 78
கே 89. பொங்கல், உழவர் திருநாளைக் கொண்டாடலாமா? 80
கே 90. கிறிஸ்தவர்கள் நல்லநாள், நல்ல நேரம் எல்லாம் பாக்கலாமா? 80
கே 91. சகுனம் பார்க்கலாமா? 80
கே 92. 'மணி பிளாண்ட்' செடியை வீட்டில வளர்த்தா பணம் நிறைய வரும்னு சில பேரு வச்சிருக்காங்களே. 81
கே 93. திருமணத்திற்கு சபையின் சிறப்புக் கூட்டங்களுக்கு வாழை மரம், மாவிலை தோரணம் கட்டலாமா? கோலம் போடலாமா? 81
கே 94. உள்ளூர் இந்துக் கோயில் திருவிழாக்களுக்கு நன்கொடையை கட்டாயமாக கேக்கிறார்கள். என்ன செய்ய? 83

[illegible] — [illegible]
[illegible]
[illegible] — [illegible]
[illegible] — [illegible]
[illegible] — [illegible]
[illegible]
[illegible]
[illegible] — [illegible]
[illegible] — [illegible]

[illegible] — [illegible]

கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்கு பதில்

A. உபதேசம்

கே 1. கிறிஸ்துவை மையமாகக் கொண்ட கிறிஸ்தவத்தில் ஏன் இத்தனை பிரிவுகள்?

என்ன பண்ணித் தொலைய? அது தான் நம்ம டிராஜெடி! நம்ம தேவன் என்ன செஞ்சாலும் அதை சாத்தான் சில மனுஷங்க மூலமா அவைகளை கெடுத்துடுவான். ஆதாம் ஏவாள் தொடங்கி இது தான் தொடர்கதையா நடந்துக்கிட்டு இருக்கு. பணம், பதவி, பவர், சுயநலம், போட்டி, பொறாமை, பொறுமை இல்லாமை, விட்டுக் கொடுக்காமை, மன்னிக்கின்ற சுபாவம் இல்லாமை என இப்படி மனுஷர்களின் பலவிதமான பலவீனங்களை அவன் பயன்படுத்தி நம்மை பிரிச்சுட்டான். ஆண்டவர் நெனைச்சா இதை தடுத்து நிறுத்தி இருக்க முடியாதா? முடியும். பிறகு ஏன் இதை அலொவ் பண்ணினாரு? தேவன் நமக்கு எல்லாத்தையும் பகுத்து அறியக் கூடிய நல்ல புத்தியைக் கொடுத்து இருக்காரு. நாம எப்படி இருக்கணும், எப்படி நடக்கணும், எது நல்லது, எது தேவையில்லாதது, நாம என்ன செஞ்சா என்ன நடக்கும்னு திருஷ்டாந்தமா எல்லா விஷயத்துக்குமே வேதத்தில பல சம்பவங்களை, உபதேசங்களை சொல்லி வச்சிருக்காரு. நாம வேதத்தையும் ஒழுங்கா படிக்க மாட்டோம். அதை சரியா புரிஞ்சுக்கிடவும் மாட்டோம். சரியா விளக்கிச் சொல்லவும் மாட்டோம். அதுனால தான் இத்தனை பிரிவு, குளறுபடி எல்லாம்.

எது எப்படி இருந்தாலும் ஆண்டவர் அதையும் நன்மைக்கு ஏதுவாகவே மாத்துகிறாரு. பிரிவுகள் ஏற்பட்டாலும் அவைகளையும் கர்த்தர் ஆசீர்வதிச்சு எல்லா பிரிவுகளின் மூலமாகவும் சுவிசேஷம் பரவும் படி செய்யுறாரே. எல்லா

பிரிவுகளிலேயும் சில குறைகளும் இருக்கு. நிறைவுகளும் இருக்கு. யாரையும் குறையா பார்க்க வேண்டாம். ஆண்டவர் அனுமதிக்காம இந்த உலகத்தில எதுவுமே நடக்காது. சகலத்தையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்.

கே 2. எல்லா பிரிவுகளுக்குமே பைபிள் ஒண்ணு தான். பின் ஏன் இத்தனை உபதேசக் குழப்பங்கள்?

அநேகமாக எல்லாப் பிரிவுகளுமே 66 புத்தகங்களைக் கொண்ட வேதாகமத்தையே ஏற்றுக் கொண்டு பயன்படுத்துகின்றன. ஆனால் ரோமன் கத்தோலிக்கத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட சில புத்தகங்களையும் சேர்த்துக் கொண்டு பயன்படுத்துகின்றனர். வேதப் புத்தகம் மிகமிகப் பழமையான ஒரு புத்தகம். அதில முதல் ஐந்து புத்தகங்கள் கி.மு. 1400லிலும், கடைசிப் புத்தகம் கி.பி. 90லிலும் எழுதப்பட்டன. கணக்குப் போட்டுப் பாத்தீங்கன்னா சில புத்தகங்கள் இன்னிக்கு தேதிக்கு 3400 வருஷங்களுக்கு முன்னாடியும், கடைசிப் புத்தகம் 1900 வருஷத்துக்கு முன்னாடியும் எழுதப்பட்டு இருக்கிறது. இவைகள் எழுதப்பட்ட காலத்துக்கும், இவைகளை விளக்கப்படும் இன்றைய காலத்துக்கும் உள்ள கால இடைவெளி ஏறத்தாழ 3000 வருஷங்கள். இந்த நீண்ட கால இடைவெளியில எத்தனை நாகரீக, கலாச்சார மாற்றங்கள், மொழி நடை மாற்றங்கள், பூலோக மாற்றங்கள், மொழி பெயர்ப்பு மாற்றங்கள். இந்த் இடைவெளி, மாற்றங்களை கவனத்தில் கொள்ளாமல் கொடுக்கப்படும் விளக்கங்கள் நம்மைக் கொஞ்சம் குழப்பவே செய்யும்.

சத்திய வேதம் எழுதப்பட்டது முதல்ல எபிரேய, கிரேக்க மொழிகளில் மாத்திரமே. நீண்ட இடைவெளி, பயங்கரமான எதிர்ப்பு, தடைகளுக்கு மத்தியில வேதம் இதன் 'நகல்களை' வைத்தே மற்ற மொழிகளுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டது. இதுல இன்னொரு கொடுமை, ஷாக்கிங் நியூஸ் என்ன தெரியுமா? வேத மொழி பெயர்ப்பாளர்கள் யாருக்குமே வேதத்தின் ஒரிஜினல் மூலப் பிரதி எதுவுமே கிடைக்கலைங்கிறது தான்! ஏன்னா இவங்க மொழி பெயர்க்க பயன்படுத்திய மூலப் பிரதிகளை விட மிகப் பழமையானதும், மிக நம்பகமானதுமான வேதப் பிரதிகள் ரொம்ப காலத்துக்கு பின்னாடியே கண்டுபிடிக்கப்பட்டன என வேத வல்லுனர்கள் கூறுகின்றனர். காலங்காலமாக வேத மொழி ஆக்கங்கள் எல்லாமே எபிரேய, கிரேக்க் 'நகல்களை' வச்சுத் தான் செய்யப்பட்டன. இதன்படி பார்த்தா புதிய ஏற்பாட்டு நகல்களில் மாத்திரமே நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன என வேத வல்லுனர்கள், ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

வேதாகமம் ஒரு தெய்வ நூலாகவும், மானிட நூலாகவும் இருக்கிறதுனால அந்த அவ்வளவு லேசுல விளங்கிக் கொள்ள முடியாது. நம்மோட அறிவும் குறைவுள்ளது. ஆவிக்குரியவைகளை புரிந்து கொள்ள பரிசுத்த ஆவியானவர்

உதவி செய்கிறார். பரிசுத்த ஆவியின் நிறைவோடு வேதத்தை வாசிக்கணும். நம்ம சுய அறிவு, புரிந்து கொள்ளுதலில் வேதத்தை வாசிக்கக் கூடாது. சில பேரு அப்படி வாசிக்கிறாங்க அதுனால அவங்க அவங்க புரிந்து கொண்ட அளவுக்கு அவைகளை விளக்குகின்றனர். நாமும் நம்ம கப்பாசிட்டிக்கு தகுந்த மாதிரி அவைகளை புரிஞ்சுக்கிடுறோம். இதை நிறையப் பேரு ஒத்துக்கிட மாட்டாங்க. அவங்களைக் கேட்டா 'ஆண்டவரே எனக்கு எல்லாத்தையும் வெளிப்படுத்துகிறார்'னு சொல்லி மார் தட்டுவாங்க. பவுலுக்கு கர்த்தர் எல்லாத்தையும் நேரடியா வெளிப்படுத்தினாரு. தீமோத்தேயுவும், தீத்துவும் பவுல் கிட்ட இருந்து தான் கத்துக்கிட்டாங்க (கலா 1:12, 2 தீமோ 2:27).

தனக்கு எல்லாமே தெரியும்னு ஒரு காலத்திலே நெனச்சுக்கிட்டு இருந்த பேதுருவே முதிர்ச்சி அடைஞ்ச போது அவனே இதை ஒத்துக் கொண்டான் (2 பேதுரு 3:15,16). பிரசங்கிமார்களில் பலர் பைபிள் காலேஜில் படிக்காமலும், அல்லது மற்றும் சொந்த முயற்சியில் கிரமமாய் படிக்காமலும், வேத ஆராய்ச்சி நூல்களை பயன்படுத்தி சரியான விளக்கங்களை தெரிஞ்சுக்கிடாமலும் வேதத்தை பிரசிங்கிக்கிறதுனாலேயே இத்தனை உபதேசக் குழப்பங்களும் வருகின்றன. இது சாத்தானுக்கு கொண்டாட்டம். கிடைச்சதுடா சான்ஸுன்னு அவன் இன்னும் கொஞ்சம் குழப்பி, பிரிச்சு, எரிகிற தீயில எண்ணையை ஊத்துறான்.

கே 3. சில சபைகளில மூச்சுக்கு முன்னூறு தடவை அல்லேலுயா சொல்றாங்களே. இது தேவையா?

ஏன், சொன்னா என்ன தப்பு? அல்லேலுயாங்கிறது ஒண்ணும் கெட்ட வார்த்தை இல்லையே. ஆண்டவரோட நாமத்தை மகிமைப்படுத்தும் ஒரு வார்த்தை அது. வேதத்திலேயே பல இடங்களிலே பல தடவை சொல்லப்பட்டு இருக்கே. *'இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்படத் தக்கவர். ஜனங்கள் எல்லோரும் ஆமேன், அல்லேலுயா என்பார்களாக'*னு சங்கீதக்காரன் 106:48ல சொல்றானே. எத்தனையோ சங்கீதங்களிலேயும், மற்ற இடங்களிலும் அது சொல்லப்பட்டு இருக்கே. பரலோகத்திலேயும் சொல்லப்படுகின்ற ஒரே வார்த்தை இது தானே. இந்த உலகத்திலுள்ள அத்தனை மொழிகளிலேயும் அப்படியே எந்த மாற்றமும் இல்லாம சொல்லக் கூடிய ஒரே வார்த்தை அது ஒன்று மட்டும் தான்.

சில பிரிவுகளில் உள்ள ஆண்டவரோட புள்ளைங்க எத்தனை தான் தார்கோல் போட்டாலும் இடிச்ச புளியாட்டம் அப்படியே கல்லுப் போல உட்கார்ந்துகிட்டு இருப்பாங்க. இவங்கள்லாம் எதுக்குத் தான் திருச்சபைகளுக்கு வர்றாங்களோ தெரியலை. சில பேருக்கு சபைக்கு வந்து பிரசங்கத்தை கேட்க ஆரம்பிச்ச உடனேயே அப்படியே கண்ணு சொக்கி உள்ளே சொருகும். அடிக்கடி அல்லேலுயா சொல்லும் போது அது அவர்களை தட்டியும் எழுப்பும்!

ஆண்டவரை மகிமைப்படுத்தும் வார்த்தையான அல்லேலுயாவை அர்த்தத்தோடு அடிக்கடி சொல்லுங்க. அது உங்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கும்.

கே 4. இரண்டு சபைகளிலே நான் மெம்பரா இருக்கலாமா?

இருக்கக் கூடாது. பாரம்பரிய சபை, பெந்தகோஸ்தே சபை இரண்டுலேயுமே சில நல்ல அம்சங்கள் இருக்கு. சில பலவீனங்களும் இருக்கு. பெரும்பாலும் இன்றைய பெந்தகோஸ்தே சபையில இருக்கிறவங்கள்ல ரொம்பப் பேரு பாரம்பரிய சபைகளில இருந்து வந்தவங்க தான். சில பேரு அவங்களோட தாய் சபையை டோட்டலா விட்டுட்டு வந்திடுவாங்க. சில பேரு அங்கேயும் இங்கேயுமா இருப்பாங்க. சில சபைகளில மெசேஜுக்கு இம்ப்பார்ட்டென்ஸ் கொடுப்பாங்க. சில சபைகளில ஏதோ பட்டும் படாமலும், யார் மனசும் புண்படாமலும் சில ஆசீர்வாதமான செய்திகளை மாத்திரமே சொல்லுவாங்க. பல சபைகளிலே வெளியில இருந்து நல்ல பிரசங்கிமார்களை கொண்டு வந்து செய்திகளைக் கொடுப்பாங்க.

நம்ம புள்ளைங்களை எதுக்காக கவர்மெண்ட் ஸ்கூல்ல சேர்க்காம, பிரைவேட் ஸ்கூல்ல அல்லது கான்வெண்ட்ல சேக்குறோம்? புள்ளைங்க நல்லா படிக்கணும். பிரைவேட் ஸ்கூல்ல நல்லா கன்டிஷனா சொல்லிக் கொடுப்பாங்க. அடிக்கடி டெஸ்ட், தினம் ஹோம் வொர்க் எல்லாம் கொடுப்பாங்க. மார்க் கம்மி ஆச்சுன்னா பேரன்ஸ்சைக் கூட்டிக்கிட்டு வான்னு சொல்லி அனுப்புவாங்க. கவர்மெண்ட் ஸ்கூல்ல நீ படிச்சாப் படி, படிக்காட்டி எக்கேடு வேணா கெட்டுப் போன்னு விட்டுடுவாங்க. ஆவிக்குரிய சபைகனிலே பாவம், பரிசுத்தம், வேதத்தை வாசித்தல், ஆண்டவருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்துதல் போன்ற விஷயங்களை அழுத்தம் திருத்தமாக சொல்லுவாங்க.

என்னைக் கேட்டா நாம எங்கே இருக்கிறோமோ அங்கேயே இருக்கணும். சபை என்பது ஒருவருக்கு ஆவிக்குரிய குடும்பமாகும். ஒரு நபருக்கு ஒரு குடும்பம் இருப்பது தான் ஒழுங்கு. பிற சபையாரோடு ஐக்கியமாய் இருக்கணும். அதே நேரத்தில ஒரு சபையில் உங்கள் தசமபாகங்களை கொடுப்பதும் அந்த சபைப் போதகரின் வழிநடத்துதலுக்குட்பட்டு ஊழியங்களில் ஈடுபடுவதும் சிறந்தது. சபை பாகுபாடு இல்லாத சில கூடுகைகள் உங்க ஏரியாவில இருந்தா அதில கலந்துக்கிடலாம். பவுலும், மற்ற அப்போஸ்தலர்களும் வீடுகளில் புதிய சபைகளை துவக்கினாலும் யூத சபைகளோடு இருந்த தொடர்புகளை அவங்க முற்றிலும் கட் பண்ணிடலை (அப் 2:46, 3:1, 13:14–16, 14:1, 17:1–3, 18:4).

வேலை மாற்றல், பெண் பிள்ளைகளை திருமணம் செய்து கொடுத்தல், ஒரு CSI பெண் ஒரு லுத்தரன் சபை மாப்பிள்ளையை திருமணம் செய்தல் போன்ற காரணங்களினாலே சிலர் இரண்டு சபைகளில் மெம்பரா இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் ஏற்படலாம். சந்தர்ப்ப சூழ்நிலைகளினாலோ, ஆவிக்குரிய

நிலையில் வளரணும்கிறதுக்காகவோ, சுவிசேஷத்தின் நிமித்தமோ இரண்டு சபைகளில மெம்பராய் இருந்தாலும் நாம் ***'ஒரே சரீரத்தில் அங்கமாயும்' 'ஒரே மேய்ப்பனின் ஆடுகளாயும் தான் இருக்கிறோம்'*** (1கொரி 12:12, 13,20,27,1 பேதுரு 2:25, எபி 13:20,21,யோ 10:16). இருந்தாலும் இதை ஒரு ஜெனரல் ரூலாக எடுத்துக் கொள்ளக் கூடாது. உலகப் பிரகாரமான ஆதாயங்களுக்காகவோ, மனுஷரைப் பிரியப்படுத்துவதற்காகவோ 'Spiritual Compromise' பண்ணக் கூடாது. அது ஆரோக்கியமல்ல.

கே 5. உண்மையில யார் தான் தெய்வம்? பிதாவா? குமாரன் இயேசுவா? பரிசுத்த ஆவியானவரா?

தேவன் ஒருவரே. அவர் திரியேக தேவனாக – பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாக தம்மை வெளிப்படுத்தி இருக்கிறார். இந்த மூணு பேருமே ஒண்ணா இருந்தாலும் ஆள் தத்துவத்திலும் செயலிலும் இவங்க தனிச்சு இருக்கிறாங்க. உதாரணத்துக்கு சொல்லணும்னா நான் என்னோட அம்மாவுக்கு புள்ளை,,என் மனைவிக்கு கணவன், என் புள்ளைகளுக்கு தகப்பன். நானே பிள்ளையாகவும், கணவனாகவும், தகப்பனாகவும் மூன்று விதத்தில இருக்கேன். இல்லையா? ஆனா அது அத்தனையும் நான் ஒருத்தன் தானே. ஆனா ரோல்கள் தான் வேற வேற. அது போலத் தான் இந்த மூவரும் ஒருவரே.

மூன்று பேரா எப்படி இருக்கிறாங்க? ***'ஞானஸ்நானம் பெற்று இயேசு கரையேறுகின்ற போது பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல அவர் மீது இறங்கினார். வானத்திலிருந்து நீர் என் நேசக்குமாரன். உம்மில் நான் பிரியமாய் இருக்கிறேன்'***னு பிதா சாட்சியிட்டாரு (மத் 3:16,17). ***'பிதாவானவர் தமது குமாரனுக்கு ஆவியை அளவில்லாமல் கொடுத்தார்'*** – யோ 3:34–36). இப்படி எத்தனையோ வசனங்களை சொல்லிக்கிட்டே போக முடியும். இப்படி தேவன் தமது திரித்துவத்தில், திரியேகத்தில் ஒருவராகவே இருக்கிறார். ஆக இந்த மூணு பேருமே ஒருத்தர் தான். குழப்பம் வேண்டாம்.

கே 6. மேரி இல்லாமலா இயேசு கிறிஸ்து பிறந்தாரு? பிறகு ஏன் அவரைக் கும்பிடக் கூடாது?

இந்த உலகத் தோற்றத்துக்கு முன்னாடியே முன் குறிக்கப்பட்ட மீட்புத் திட்டத்தின் படி பிறந்தவர் தான் இயேசு கிறிஸ்து. அவர் மனுஷனாப் பிறந்து, பாவமே இல்லாம வாழ்ந்து வாழ வேண்டிய வழியை நமக்கு போதித்து, ஒரு முன் மாதிரியா நடந்து இந்த உலகத்தின் பாவங்களுக்காக, பாவ விமோசனங்களுக்காக பாவமே இல்லாத தன் இரத்தத்தை சிந்த வேண்டி இருந்தது. அப்படி தேவனே மனுஷனாப் பிறக்க ஒரு பரிசுத்தமான கன்னியின் கர்ப்பப்பை தேவைப்பட்டுச்சு. அதுக்கு தேவன் மரியாளை தேர்ந்தெடுத்தார். ஸ்திரிகளுக்குள்ளேயே மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர் மரியாள். ஆனா

வணக்கத்திற்குரியவர்கள் பிதா குமாரன், பரிசுத்த ஆவியானவர் மட்டுமே. வேற யாரையும் நாம ஆராதிக்கவோ, கும்பிடவோ கூடாது. ஆண்டவருக்குரிய கனத்தை, இடத்தை அவருக்கு மட்டுமே கொடுக்கணும். வேற யாருக்கும் கொடுக்கக் கூடாது. *'நானே வழியும், சத்தியமும், ஜீவனும் என்னாலேயல்லாமல் ஒருவரும் தேவனிடத்தில் வரான்'*னு யோ 14:6ல இயேசு சொல்லியிருக்காரே. *'தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே'* I தீமோ 2:5,6. அவர் இயேசு மாத்திரந்தான். வேற யாரும் கிடையாது.

கே 7. மேரியைக் கும்பிட்டாலும் அற்புதம் நடக்குதே. வேளாங்கண்ணியிலும் அதிசயம் நடக்குதே.

நடக்கும். நீ திருப்பதிக்கு போனாலும் நடக்கும். திருவண்ணாமலைக்குப் போனாலும், திருச்செந்தூருக்குப் போனாலும் அற்புதம் நடக்கும். சாத்தானும் அற்புதம் செய்வான். அப்படித்தான் வேளாங்கண்ணியிலும் நடக்குது. உங்களை பரலோகம் போக விடாதபடிக்கு தடம் புரள வைக்க சாத்தான் செய்யும் தந்திரங்களில் இதுவும் ஒண்ணு. ஏமாந்து போகாதீங்க. வேதம் தெளிவாச் brhlY nj. *'என்னை அன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்'* கிறது தானே ஆண்டவரோட முதல் கட்டளையே (யாத் 20:2–6). பிறகு எதுக்குப் போட்டு குழம்புறீங்க?

கே 8. அற்புதங்களை செய்த அந்தோணியார், பவுல், சவேரியாரைக் கும்பிடலாமா? கூடாதா? ஏன்?

அற்புதங்களைச் செய்கிறவர் தேவன் மாத்திரமே. இவர்களை கர்த்தர் ஒரு கருவியாக பயன்படுத்தினார். அவ்வளவு தான். இவங்க எல்லாருமே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள். அவங்க இந்த பூமியில எதுக்காக பிறந்தாங்களோ அது முடிஞ்சு போச்சு. அவங்க சொன்ன உபதேசம் இன்னும் இருக்கலாம். அதை நாம ஃபாலோ பண்ணலாம். அவங்களோட உபதேசத்தை மாத்திரம் தான் நாம ஃபாலோ பண்ணணும். அவங்களை அல்ல.

எலிசாவினுடைய எலும்பு பட்டு இறந்தவன் ஒருத்தன் உயிரோட எழுந்தானே அப்படீங்கறதுக்காக பரிசுத்தவான்களின் கல்லறைக்குப் போயி கும்பிடறதோ, அவங்களை அடக்கம் பண்ணின இடத்தையோ தோண்டி எலும்பை எடுக்க கூடாது. தேவன் சமயத்தில இப்படி எப்பவாவது வித்தியாசமா சில அற்புதங்களையும் செய்வாரு. அப்படியே எப்பவுமே செய்வாருன்னு சொல்ல முடியாது. தேவனுக்குரிய கனத்தை அவருக்கு மட்டும் தான் கொடுக்கணும். நம்ம சபைப் போதகர்கள், ஊழியக்காரங்க ஜெபிச்சு சில அற்புதங்கள் நடக்குது. அதுக்காக அவங்களுக்கு ஒரு தேவாலயம் கட்டி கும்பிடப் போறீங்களா? அது பைத்தியக்காரத்தனம். இல்லையா? அதுமாதிரித்தான் அந்தோணியர், பவுலைக் கும்பிடுறதும்.

கே 9. இயேசுவின் சிலை, சிலுவை, சிலுவையில் தொங்கும் இயேசுவின் சிலை, அவரின் படம் இவைகளை கும்பிடலாமா?

கூடாது. அப்படி செஞ்சா அதுவும் ஒரு விக்கிரஹ ஆராதனை தான். தேவன் தம்மோட பத்துக் கட்டளைகளிலே இரண்டாம் கட்டளையா என்ன சொன்னாரு. *'ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரஹத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்'*னு தானே சொல்லியிருக்காரு (யாத் 20:2–6). அப்படி சொன்னவருக்கே ஒரு சொரூபத்தை உண்டாக்குவீங்களா? அப்படி சொன்னவரோட அப்பா, அம்மா, சீஷர்கள் அத்தனை பேருக்குமே ஒரு சிலையா? விக்கிரஹங்களை உண்டாக்க வேண்டாம். வணங்க வேண்டாம். சேவிக்க வேண்டாம்னு தெள்ளத் தெளிவா சொல்லி இருக்காரே. *'தேவன் ஆவியாக இருக்கிறார்'* (யோ 4:24). இதை தெளிவா, அழுத்தம் திருத்தமா மோசே எப்படிச் சொல்றான் பாருங்க. *'அந்த அக்கினியின் நடுவில் இருந்து கர்த்தர் உங்களோடு பேசினார்... அந்த சத்தத்தை நீங்கள் கேட்டதே அன்றி ஒரு ரூபத்தையும் காணவில்லை... ஆகையால்... யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரஹத்தையும் உண்டாக்காதபடி ... மிகவும் எச்சரிக்கையாக இருங்கள்'* (உபா 4:12–19). படங்களுக்கும் சிலைகளுக்கும் வேறபாடு எதுவுமே இல்லை. படம் இரு பரிமாணம் உள்ளது. சிலை முப்பரிமாணம் உள்ளது. அவ்வளவு தான்.

உடல் தோற்றத்தில் நேரடியா இயேசுவைக் கண்ணால பார்த்து, பேசிப் பழகின அப்போஸ்தலர்களே என்ன சொல்லியிருக்காங்க? *'நாங்க கிறிஸ்துவை மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒரு போதும் அவரை மாம்சத்தின் படி அறியோம்'*னு 2 கொரி 5:16ல சொல்லிட்டாங்களே. தேவனை நாம ஆவியில உணர்ந்து ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளணும். சிலை வடிவிலேயோ, கண்ணாடி பிரேம் போட்ட படத்திலோ அல்ல.

கே 10. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, இந்த மூவரில் யாரைக் கும்பிடணும்?

*'ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை நாம் கிறிஸ்துவின் மூலமாய் பெற்று இருக்கிறோம்'*னு எபே 2:18 சொல்லுது. மூன்று பேருமே ஒண்ணா இருக்காங்க. இருந்தாலும் நாம பிதாவை நோக்கி, இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தினாலே, பரிசுத்த ஆவியின் வல்லமையோட ஜெபிக்கணும். பிதாவை மாத்திரமோ அல்லது இயேசுவை மாத்திரமோ, பரிசுத்த ஆவியை மாத்திரமோ பிரிச்சு நாம ஆராதிக்கக்கூடாது. சில பிரிவுக்காரங்க இதிலேயும் குழப்பம் பண்ணிட்டாங்க. இந்த மூவரில் யாரையாவது பிரிச்சு ஆராதிக்கிறது துர் உபதேசம். ஜாக்கிரதை. பெரிய ஊழியக்காரரான தேவ மனுஷராகிய CH ஸ்பர்ஜன் சொல்லுவாரு. 'ஆவியானவராகிய தேவன் நமது ஜெபங்களை எழுதுகிறார். குமாரனாகிய தேவன் நமது ஜெபங்களை சமர்ப்பிக்கிறார். பிதாவாகிய தேவன் அவைகளை ஏற்றுக் கொள்கிறார்' என்று.

கே 11. குழந்தை இயேசுவைக் கும்பிடலாமா?

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் பிறந்த போது அவரைப் பணிந்துகொள்ள கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்தார்கள். '*சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்து கொண்டு... அதற்கு காணிக்கையாக வைத்தார்கள்*' என்று மத் 2:1,2,11ல சொல்லப்பட்டு இருக்கு. இந்த சம்பவம் ஆண்டவரோட பிறப்பை இந்த உலகுக்கு அறிவிக்க நடந்த ஒரு நிகழ்வு. வேதத்தில வேற எங்கேயும் அவர் குழந்தையா இருக்கும் போது யாரும் அவரைத் தொழுது கொண்டதாக எழுதப்படலை. இயேசு இவ்வுலகில் 'குழந்தை'யாகப் பிறந்தார். பின் வளர்ந்தார். இன்னும் அவர் குழந்தையாகவே இருந்து கொண்டிருக்கவில்லை. 'குழந்தை இயேசு' என்று இப்பொழுது யாரும் இல்லை. அவர் இப்பொழுது ராஜாதி ராஜாவாக சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவையே நாம எதுக்காக போற்றுகிறோம்? அவரை தேவ குமாரன் என்பதற்காகவும் துதிக்கிறோம். அது மட்டுமல்ல. அவரோட உபதேசம், வாழ்ந்த வாழ்க்கை, தாழ்மை, பொறுமை, அடக்கம், அமைதி, பரிசுத்த ஜீவியம், ஜெபம், அவருக்கு இருந்த மனதுருக்கம், அவரின் உயிர்த் தியாகம், அவர் செய்த அற்புதங்கள், இதுக்காகவும் தான் நாம அவரைத் துதிக்கிறோம், ஆராதிக்கிறோம். இதையெல்லாம் அவரு எப்ப செஞ்சாரு? சின்னக் குழந்தையா இருக்கும் போதேவா செஞ்சாரு? இல்லையே. 30 வயசுக்குப் பிறகு தானே செய்ய ஆரம்பிச்சாரு. பிதாவே 'நீர் என் நேசக் குமாரன். உம்மில் நான் பிரியமாய் இருக்கிறேன்'னு எப்போ சொன்னாரு? அவருக்கு ஏறத்தாழ 30 வயசா இருக்கும் போது முழுகி ஞானஸ்நானம் எடுத்தாப் பிறகு தானே. இப்போ நீங்களே சொல்லுங்க. எந்த வயசு இயேசுவைக் கும்பிடணும்னு. '*அவரில் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்*' - யோ 2:6 சொல்லுது. '*அவர் நடந்தபடியே*', '*அவர் தவழ்ந்தபடியே*' அல்ல! மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு இவங்க படங்களை பார்லிமெண்ட்டில மாட்டி இருக்கோம். பல இடங்களிலே சிலையா வச்சு இருக்கோம். அவங்க குழந்தையா இருந்த போட்டோவையா வச்சிருக்கோம்? அவங்க குழந்தையா இருந்த உருவத்தையா சிலையா வடிச்சிருக்கோம்? இல்லையே. அது மாதிரித் தான் இதுவும். குழந்தை இயேசுவைக் கும்பிடுறதும் ஒரு வித விக்கிரஹ ஆராதனை தான்.

கே 12. சத்தமாய் எதுக்கு ஆராதிக்கணும்? அமைதியா ஆராதிக்கக் கூடாதா?

சச்சின் டெண்டுல்கர் ஒரு சிக்ஸர் அடிச்ச உடனே இருந்த இடத்திலேயே சோபாவில குதிக்கிறோம். உற்சாக மிகுதியில காட்டுக் கத்து கத்துறோம். என்னமோ நமக்கு லாட்டரியில லட்ச ரூபாய் பரிசு விழுந்தது போல துள்ளுறோம். யாருமே மன்னிக்க முடியாத பாவங்களையெல்லாம் நமக்கு

மன்னிச்சு, விலை மதிக்க முடியாத இரட்சிப்பையும் தந்து இம்மையிலும், மறுமையிலும் ஒரு தெய்வீக சந்தோஷத்தையும், சமாதானத்தையும் நமக்கு இலவசமா கொடுக்குறதுக்காக கல்வாரி சிலுவையில எல்லாப் பாடுகளையும், சித்திரவதைகளையும், உபத்திரவங்களையும், நிந்தைகளையும் அனுபவிச்சு, தம்மோட கடைசி சொட்டு இரத்தம் வரை சிந்தி நமக்காக மரித்து, நம்மை கண்ணின் மணியைப் போல காக்கும் ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கும் போது நாம எப்படி ஆர்ப்பரிக்காம, ஆனந்தக் கூத்தாடாம இருக்க முடியும்? '***கெம்பீரமாய் ஆர்ப்பரியுங்கள்***'னு சங் 47:1ல சங்கீதக்காரன் சொல்றானே. '***கெம்பீர சத்தத்தை அறியும் மக்கள் பாக்கியமுள்ளவர்கள்***'னு சங் 89:15 சொல்லுதே.

சாலமோன் முடி சூட்டப்பட்ட போது '***பூமி அவர்கள் சத்தத்தினால் அதிரத்தக்கதாக மக்கள் மகா பூரிப்பாய் ஆர்ப்பரித்தார்கள்***'னு 1 இராஜா 1:39, 40 சொல்லுதே. சாலமோனிலும் மகா பெரியவரையல்லவா நாம ஆராதித்து முடிசூட்டுகிறோம். அப்போ அமைதியாவா ஆராதிக்க முடியும்? ஆண்டவர் நமக்கு செய்துள்ள, செய்கின்ற நன்மைகளை உளமார, நன்றியோட நெனைக்கும் போது உள்ளம் பொங்காதா? சந்தோஷமும், நன்றி உணர்வும் பொங்கி வழியாதா? அத்தகைய உணர்வுகளோடு உண்மையிலேயே நாம ஆராதிக்கும் போது அமைதியா எப்படி ஆராதிக்க முடியும்? சும்மா துள்ளிக் குதிச்சு ஆர்ப்பரிக்காம இருக்க முடியாதே. '***சந்தோஷம் பொங்குதே. சந்தோஷம் பொங்குதே***'ன்னு ஆடிப் பாடாம இருக்க முடியாதே. இவைகள் எல்லாமே நமது உள்ள உணர்வுகளின் உணர்ச்சி வெளிப்பாடுகளே. அதைத் தவறாக நினைக்க வேண்டாம். அமைதியாய் இருக்க ஒரு காலமுண்டு. ஆர்ப்பரிக்க ஒரு காலமுண்டு. '***அமர்ந்திருந்து அவரே தேவனென்று அறிந்து கொள்ளவும் வேணும்***' சங் 46:10. '***அந்த இடமே அசையும் படியாயும் ஜெபிக்கவும் வேணும்***' – அப் 4:31. இரண்டுமே கர்த்தருக்கு ஏற்புடையது தான்.

கே 13. பைபிள் மட்டும் தான் படிக்கணுமா? நல்ல ஆவிக்குரிய புத்தகங்களை படிக்கக் கூடாதா?

நம்மோட பைபிள் ஒரு மிகப் பெரிய சாகரம், அது ஒரு சமுத்திரம். அதன் நீளம், அகலம், அடி ஆழத்தையும், அதிலுள்ள பொக்கிஷங்களையும் முழுசா அறிஞ்சவங்க யாருமே இல்லை. நாம கற்றது கை மண் அளவே. கல்லாதது உலக அளவு. அள்ள அள்ளக் குறையாத ஒரு தங்க சுரங்கம் அது. சூரிய ஒளியில் பல வர்ணம் காட்டும் ஒரு வைரக்கல் அது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான வெளிப்பாடுகளையும், சத்தியத்தையும் அது வெளிப்படுத்துகிறது. அவைகளை எல்லாம் நாம எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? பல வேத வல்லுனர்கள், பரிசுத்தவான்கள், ஆராய்ச்சியாளர்களுக்கு கிடைத்த வெளிப்பாடுகளை அவங்க எழுதி வச்சிட்டு போயிருக்காங்க. எழுதி இருக்குறாங்க. அவைகளை எல்லாம் படிக்காம நாம எப்படி அவைகளை தெரிஞ்சுக்க முடியும்?

இயேசு கிறிஸ்து விளக்கிச் சொல்லுகிறவரைக்கும் பழைய ஏற்பாட்டு வேதம் சீஷர்களுக்கு புரியலையே (லூக்கா 24:25–27). கந்தாகே அரசியின் நிதி மந்திரி '***ஒருவன் எனக்கு விளக்கா விட்டால் அது எனக்கு எப்படிப் புரியும்***'னு பிலிப்புவிடம் கேட்டானே (அப் 8:26–35). சிலருக்கு ஆண்டவர் நேரடியா சத்தியத்தை வெளிப்படுத்துகிறார். பவுலுக்கு அப்படியே வெளிப்படுத்தினாரு (கலா 1:11,12). ஆனா கலாத்தியருக்கு சொன்னது யாரு? பவுல் தானே.

நம்ம சபைப் போதகர் பிரசிங்கிக்கிறதை கேக்குறோம். அதையே அவர் எழுதினா படிக்கக் கூடாதா? உங்க சபைப் போதகர் மூலமா பேசுகிற தேவன், வேறொரு சபைப் போதகர் மூலமாவும் பேசுவாரே. கடந்த கால தேவ மனிதர்கள் மூலமாயும் பேசி இருப்பாரே. அவங்களுக்குக் கிடைத்த வெளிப்பாடுகளைத் தானே அவங்களும் புத்தகங்களிலே எழுதியிருப்பாங்க. அவைகளை படிக்காட்டி நஷ்டம் யாருக்கு? உங்களுக்குத் தானே. பைபிளையும் படிக்கணும். தினமும் படிக்கணும். வாஞ்சையோட படிக்கணும். படிச்சு தியானிக்கணும். அதே சமயம் நல்ல ஆவிக்குரிய புத்தகங்களையும் வாங்கிப் படிக்கணும். ஆராய்ச்சி நூல்களையும் படிக்கணும். அவைகள் உங்களைப் பலப்படுத்தும். உங்கள் வேத அறிவை ஆழப்படுத்தும். அகலப்படுத்தும். விரிவாக்கும். தெளிவுபடுத்தும்.

கே 14. பாண்டிச்சேரியில் இம்மாகுலேட் RC சென்ட்டரில் பைபிளையும், குரானையும், பகவத் கீதையையும் ஒண்ணா வச்சு தியானம் சொல்லிக் கொடுக்குறாங்க. இது சரியா?

அநியாயம், கொடுமை இது. குரானும், பகவத் கீதையும் ஆண்டவரோட பரிசுத்த வேதாகமத்துக்கு ஈடு இணையாகுமா? எல்லா வேதமுமே ஒண்ணுதான்னு அவங்க எந்த பைபிள்ல படிச்சாங்கன்னு தெரியலை. தள்ளுபடி வேதாகமத்தில கூட இப்படி சொல்லப்படலை. குரானும், பகவத் கீதையும் நம்மோட பரிசுத்த வேதாகமத்துக்கு ஈடு இணையின்னா அவைகளை மட்டுமே படிக்கலாமே. பிறகு எதுக்கு வேதத்தைப் படிக்கணும்? அவைகள் எல்லாம் மனுஷரால் எழுதப்பட்டவைகள். நமது பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள வார்த்தைகள் அனைத்துமே தேவ ஆவியானவரால் அருளப்பட்டவைகள் (II தீமோ 3:16). வேதத்தை ஒழுங்கா, கிரமமா, ஆழமா யாரு படிச்சிருந்தாலும் புற மதத்தின் வேதங்களை கையால கூட தொட மாட்டாங்க. கிறிஸ்தவ சீஷர்களுக்கு, ஆண்டவரோட புள்ளைகளுக்கு பயிற்சி கொடுக்கிற ஒரு இடத்தில இதைச் செய்யுறாங்கன்னா அது ஆண்டவரையும், அவரோட வேதத்தையும் அவமானப்படுத்துகிற ஒரு செயல் இது. எந்தப் பிரிவாக இருந்தாலும் சரி, ஒரு கிறிஸ்தவர்களா இருந்துக்கிட்டு இந்த பாதக செயலைச் செய்தாலோ, இதைத் தொடர்ந்து செய்ய அனுமதித்தாலோ இரக்கத்தில் ஐசுவர்யமுள்ள நம் ஆண்டவரே கூட இந்த பாவத்தை மன்னிக்க மாட்டாரு.

அங்க வர்றவங்க மனசு புண்படக் கூடாது. அவங்களையும், இது வரை அவங்க போற்றி வந்த அவங்களோட வேதங்களையும் நாம மதிக்கிறோம்கிறதுக்காவோ அல்லது வேறு எந்த நோக்கத்தோடயோ இதை அவங்க செஞ்சிருந்தாலும் சரி இது மன்னிக்கவே முடியாத ஒரு பெரிய குற்றம். '*யூதருக்கு யூதரைப் போலவும், நியாயப் பிரமாணம் இல்லாதவர்களுக்கு அவர்களைப் போலவும், பலவீனருக்கு பலவீனரைப் போலவும் ஆனேன். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமும் ஆனேன்*'னு பவுல் 1 கொரி 9:20–23ல சொன்னார்னா அதுக்கு அர்த்தம் இப்படிச் செய்யின்னு இல்லை. கர்த்தர் விரைவிலேயே அவர்களுக்கு ஒரு மனந்திரும்புதலை கட்டளை இடுவாராக.

கே 15. அதே RC சென்ட்டரில் தியானத்தின் முடிவில் 'ஓம் சாந்தி' என்று சொல்கிறார்கள். கேட்டால் 'ஆமேன்'னும் 'ஓம்'மும் ஒண்ணுதான்னு சொல்றாங்க.

ரோமன் கத்தோலிக்கத்தை குறிச்சு சில விஷயங்கள்ல மிக உயர்ந்த ஒப்பீனியன், மதிப்பு வச்சிருக்கிறவன் நான். அவங்ககிட்ட இருந்து நாம கத்துக்கிட வேண்டிய விஷயம் எவ்வளவோ இருக்கு. கத்தோலிக்க பாதிரிமார்கள், கன்னியாஸ்திரிகளின் ஒழுங்கு, அர்ப்பணிப்பு எல்லாமே நமக்கு ஒரு சேலஞ். அங்கு ஊழல்கள் ரொம்ப குறைவு. நம்மைப் போல கோயில் சொத்துக்களை அவங்க விக்கிறது இல்லை. பணத்தை சுவாகா பண்றது இல்லை. சபை சொத்து எதுவும் பாதிரிமார்களின் தனிப்பெயர்ல வாங்குறதில்லை. அவங்க வரவு செலவு கணக்கு சுத்தமா இருக்கிறதுனால இன்கம்டாக்ஸ்காரங்களுக்கு லஞ்சம் கொடுக்கத் தேவை இல்லை. சமூக சேவையில, கல்வி நிறுவனங்களை நிர்வகிக்கிறதுல, மருத்துவ சேவையில, வேத மொழிபெயர்ப்பு, ஆலய கட்டிடங்களையும், வளாகங்களையும் அவங்க மெயிண்டைன் பண்றதையெல்லாம் பாத்தா நாம அவங்க பக்கத்தில கூட போக முடியாது.

அவங்க இப்படி தியானத்தின் முடிவில சொல்றாங்கன்னா என்னால நம்பவே முடியலை. வெறும் பெயர்க் கிறிஸ்தவங்க கூட இப்படிச் சொல்ல மாட்டாங்க. அவங்க இப்படிச் சொல்றாங்கன்னா இவங்களை நீங்க கிறிஸ்தவங்கன்னு சொல்றீங்களா? இவங்கள்லாம் கிறிஸ்தவத்தில் இருக்கக் கூடிய களைகள், பதர்கள். '*கோதுமையை தமது களஞ்சியத்திலும், பதரையோ அவியாத அக்கினியினாலும் சுட்டெரிப்பார்*'னு லூக்கா 3:17 ல சொல்லப்பட்டு இருக்கிறதை அவங்க வேதத்தை படிச்சாத் தானே தெரியும். அவங்களோட கண்களையெல்லாம் சாத்தான் குருடாக்கி வச்சிருக்கான். இவங்களும் சரியான சத்தியத்தை தெரிஞ்சுக்கிடவும், திருவசனத்தைக் கேட்பவர்களாக மாத்திரமல்ல. அதன்படி நடக்கிறவர்களாகவும் மாற, கத்தோலிக்க சகோதர,

சகோதரிகளும், முழுமையான இரட்சிப்பிற்குள் வரவும் நாம் தொடர்ந்து ஜெபிப்போம். அவர்கள் கிறிஸ்தவத்துக்கு ஆற்றியுள்ள பணி, தியாகங்கள் கொஞ்ச நல்லமல்ல. அவங்களும் கெட்டு நரகத்துக்கு போகக் கூடாது. அவங்களுக்காக ஜெபிக்க வேண்டியது நமது கடமை.

கே 16. இந்த ஜெகோவா விட்னஸ். ஒன்லி ஜீஸஸ்காரங்க அடிக்கடி வீட்டுக்கு வந்து குழப்புறாங்களே.

அவங்களை ஏன் வீட்டுக்குள்ள விடுறீங்க? அடிச்சுப் பத்துங்க. தப்பே கிடையாது. கிறிஸ்தவங்கன்னு சொல்லிக்கிட்டு வீட்டுக்கு வர்ற எல்லாரையும் உள்ளே விடாதீங்க. உங்க பெயர் என்ன? எந்த சர்ச்சுக்கு போறீங்க? உங்க பாஸ்டர் பேரு என்ன? உங்க சர்ச் எங்கே இருக்கு? என்ன விஷயமா வந்தீங்கன்னு எல்லா விஷயத்தையும் கேட்டுட்டு அதுக்குப்புறம் யாரையும் உள்ளே விடுங்க.

இந்த மாதிரி ஆட்கள் புற ஜாதிகளின் வீட்டுக்குப் போயி சுவிசேஷத்தை சொல்ல மாட்டாங்க. ஏற்கனவே இரட்சிக்கப்பட்டு ஒரு சபைக்கு போயிட்டு இருக்கிற கிறிஸ்தவர்களைக் குறி வச்சுத் தான் வருவாங்க. அதுவும் உங்க வீடு கொஞ்சம் பெரிசா, பங்களா லுக்கில இருந்தா, வீட்ல ஒரு கார், ஒரு பைக்கு நின்னுக்கிட்டு இருந்தா போச்சு. ஜாக்கிரதை. முதல்ல யாரும் வந்து உங்களைக் குழப்பாத படிக்கு சத்தியத்தை நீங்க நல்லா தெரிஞ்சுக்கோங்க. இந்த மாதிரி குரூப்புகளோட உபதேசங்கள் என்ன, இவங்க எந்த வசனத்தை சொல்லி குழப்புவாங்கன்னு உங்களுக்கு தெரிஞ்சிருக்கணும். துர் உபதேசங்களுக்கு நீங்க செவி கொடாம இருக்கணும்னா முதல்ல உங்களுக்கு எது சரியான உபதேசம்னு தெரியணுமில்லையா? அதுனால முதல்ல பைபிளை நல்லா, தரோவா படிங்க. பிறகு '*பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள்*' – எபே 4:27. '*பிசாசை எதிர்த்து நில்லுங்கள்*' – யாக் 4: 7.

'துர்உபதேசங்கள்'னு ஒரு நல்ல புத்தகத்தை **D. ஆன்ரு பிரபுகுமார்** என்பவர் எழுதியிருக்காரு. அதுல இது போன்ற துர்உபதேச பிரிவுகளைக் குறிச்சு தெளிவா எழுதியிருக்காரு. கிறிஸ்தவ நூல்களை விற்கும் கடைகளில கிடைக்கும். இல்லைன்னா Missionary Light, Post Box 881, Perambur, Chennai – 600011 என்ற முகவரிக்கு எழுதிக் கேளுங்க். பெரியவர் **பாஸ்டர் P.S. ராஜமணி** அவர்களும் **'உபதேசங்கள் பலவிதம்'** என்று ஒரு நூல் எழுதியிருக்காங்க. இதுவும் எல்லா புக் ஸ்டால்களிலும் கிடைக்கும். இல்லைன்னா – பி.எஸ். ராஜமணி, 100, நாவலர் நகர், மதுரை 625 010 (டெலிபோன் 0452 – 2603691)ல் தொடர்பு கொண்டு வாங்கிப் படியுங்கள். **'உபதேசங்கள் எச்சரிக்கை'** என்ற நூலை **சாது செல்லப்பா**(அக்னி ஊழியங்கள், போஸ்ட் பாக்ஸ் 8659, சென்னை – 600041) எழுதியிருக்காரு. அதையும் வாங்கி படியுங்க. இது போன்ற நூல்கள் உங்களை பலப்படுத்தும்.

கே 17. என்ன தான் ஜெபிச்சாலும், எத்தனை பேர் ஜெபிச்சாலும், சுகமளிக்கும் வரங்களைப் பெற்ற ஊழியர்கள் ஜெபிச்சும் சிலருக்கு நோயிலிருந்து பூரண சுகம் கிடைக்கிறதில்லையே. ஏன்?

'*சிலுவையில் நமது பாவங்களையும், ரோகங்களையும் அவர் சுமந்தார்*'னு வேதம் ஏசா 53:4,5, மத் 8:16,17ல சொல்லுது. அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டு, அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். நம் தேவன் நோய்களை குணமாக்குகிறவர் தான். அவர் யோகோவா ரஃப்பாவாக இருக்கிறார் (யாத் 15:26). அவரோட வல்லமை குறைந்து போகவில்லை. அவர் இன்றும் அற்புதங்களை செய்து கொண்டு தான் இருக்கிறார். டாக்டர்கள் எல்லாருமே கைவிட்ட நிலமையிலும் மருத்துவ அதிசயங்களை இன்னைக்கும் நம் தேவன் செஞ்சுக்கிட்டு தான் இருக்கிறாரு. தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் எத்தனையோ அற்புதங்களை செய்தார், செய்கிறார். அவரைத் தொட்டவர்களே சுகம் பெற்றார்கள். அவரோட சீஷர்களின் நிழல்பட்டே அற்புத சுகம் கிடைத்தது.

பலருக்கு அற்புத சுகம் கிடைத்த அதே வேளையில சிலருக்கு குணம் ஆகவில்லை என்பதும் உண்மை தான். அவருக்கு முன்பாக மிக உத்தமமாய் நடந்தும் சுகம் பெறாத பலரை வேதம் குறிப்பிடுகிறது. பவுலுக்கு அவர் மாம்சத்தில் இருந்த முள்ளை தேவன் எடுத்துப் போட்வில்லை. '*என் கிருபை உனக்குப் போதும்*'னு சொல்லிட்டாரு (2 கொரி 12:7–10). தீமோத்தேயுவுக்கு வயிற்று கோளாறு தீரவில்லை (1 தீமோ 5:23). அற்புதங்கள் பலவற்றை செய்த தீர்க்கத்தரிசி எலிசா வியாதியிலே மரிச்சான் (2இராஜா 13:14). தேவனுடைய திட்டங்களை, சித்தங்களை, சில செயல்பாடுகளை நம்மோட சிற்றறிவினால் புரிந்து கொள்ளவே முடியாது. நமது உடல் சாவுக்கேதுவானதே. நாம் இன்னமும் மரணத்துக்கு உட்பட்டு இருக்கிறோம். – 1கொரி 15:26. இனி மரணமே உன் கூர் எங்கே, இனி துன்பமில்லை, துயரமில்லை, வேதனையோ, நோய் நொடியோ இல்லைன்னு நாம எல்லாருமே சொல்லப் போகும் நாளும் வரும் (வெளி 21:4). அதுவரை சில அவஸ்தைகளை நாம அனுபவிச்சே ஆகணும். விசுவாச ஜெபம் ஏறெடுப்போம். நம்மில் ஏதேனும் குற்றம் குறைகள் ஏதேனும் உண்டா என்று சுய பரிசோதனை செய்வோம். என்ன ஆனாலும் தேவன் நமக்கு, அவரது பிள்ளைகளுக்கு சகலத்தையும் நன்மைக்கேதுவாகவே செய்வார். (ரோம 8:28) என்று விசுவாசிப்போம்.

கே 18. உடம்புக்கு சுகமில்லைன்னா டாக்டர்கிட்ட போறது தப்பா?

மருந்து சாப்பிடக்கூடாது, டாக்டர்கிட்ட போகக் கூடாதுன்னு வேதத்தில எங்கயும் சொல்லப்படலை. மருத்துவ குணமுள்ள பலவிதமான மூலிகைகளையும் உண்டாக்கினவர் தேவன் தான் (ஆதி 1:29). எசேக்கிய அரசனின் ஆயுசு நாட்களை தேவன் கூட்டிக் கொடுத்தப் பிறகும், அவன் குணம்

அடைய மருத்துவ உதவி செய்யும்படி ஏசாயா தீர்க்கதரிசி சொன்னானே (ஏசா 38:5, 17,21). தீமோத்தேயுவின் தீராத வயிற்றுக் கோளாறுக்காக கொஞ்சம் திராட்சை ரசம் சேர்த்துக் கொள்ள பவுல் அட்வைஸ் பண்ணினானே (1தீமோ 5:23). குற்றுயிராகக் கிடந்தவனின் காயங்களிலே நல்ல சமாரியன் எண்ணையும், திராட்சை ரசமும் ஊற்றி கட்டுப் போட்டானே (லூக்கா 10:34). இயேசு கிறிஸ்துவே சுகவீனருக்கு செய்யப்படும் மருத்துவப் பணியை ஆமோதிச்சிருக்காரே (மத் 9:12).

என்ன ஆனாலும் சரி மருந்தை நான் தொட மாட்டேன், டாக்டர் கிட்ட போக மாட்டேன். அவர் தழும்புகளால் நான் சுகமானேன். என் நோய்களையும் அவர் கல்வாரி சிலுவையிலே சுமந்து தீர்த்துட்டார். நான் சுமக்கத் தேவையில்லை. இந்த சரீரம் கர்த்தருக்குரியது. இது தேவன் வாசம் செய்யும் திருக்கோயில். இதில நோய் நொடிகளுக்கு இடமில்லைன்னு முழு விசுவாசத்தோட இருக்கிறவங்களை உண்மையிலேயே பாராட்டணும். ரியலி ஹேட்ஸ் ஆப் டு தெம்! ஆனா அதை மத்தவங்க மேலே திணிக்கிறதோ, நாங்க மருந்தையே தொட மாட்டோம்னு தம்பட்டம், தண்டோரா கொட்டுறதோ வேண்டாம். அப்படிப்பட்டவங்க எல்லாம் பின்னாடி மருந்து மாத்திரை சாப்பிட்டு, ஊசி போட்டு, ஆபரேஷன் பண்ணி, ஆஸ்பத்ரியில குற்ற உணர்வுடன் வருத்தப்பட்டதையும் நான் அறிவேன். அதுனால உங்க பீத்தலை உங்க கிட்டயே வச்சுங்கோங்க. அடுத்தவங்க மேல திணிக்க வேண்டாம். மருந்து சாப்பிட வேண்டாங்கிறது அவங்க அவங்களோட விசுவாசத்தைப் பொறுத்தது. அந்த விசுவாசத்தை தேவன் கனம் பண்ணுவார். சில சமயம் கனம் பண்ணாமலும் விடுவாரு. மருந்து மாத்திரையை டாக்டர் கொடுக்கலாம். ஆனா சுகம் கொடுக்கிறவர் தேவனே. அவரே யேகோவா ரஃப்பா! (யாத் 15:26).

கே 19. குடும்பத்தின் மேல உள்ள சாபங்களை முறித்தல் (கர்ஸ் பிரேக்கிங்)ன்னு சில பேரு இப்போ கிளம்பி இருக்காங்களே.

இயேசு கிறிஸ்து பேரைச் சொல்லி எப்படியெல்லாமோ லட்ச லட்சமா, கோடி கோடியா சம்பாரிக்க முடியும்னு தெரிஞ்சுக்கிட்டு இப்படியெல்லாம் சில பேரு செய்யுறாங்க. புதுசா திட்டங்கள், விளம்பரங்கள், டிவி ப்ங்காளர் திட்டம், உடன்படிக்கைப் பெட்டி, தங்க சாவி, ஜெப கோபுரம், ஜெப மையம், ஜெப மாலை இப்படி வந்துகிட்டே இருக்கும். ஏமாறுகிறவர்கள் இருக்கிறவரைக்கும் ஏமாத்துறவங்க இருப்பாங்களே. அதே மாதிரி ஒரு குரூப்பு தான் இப்போ கிளம்பி இருக்கிற இந்த 'கர்ஸ்பிரேக்கிங்' குரூப்பும்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய-பாவங்களையும், சாபங்களையும், நோய் நொடிகளையும் கல்வாரி சிலுவையில சுமந்து தீர்த்திட்டாரே. அதுக்கப்புறம் எங்க இருந்து வந்தது இந்த சாபம்? ஆண்டவர் சுமந்து தீர்த்ததை மறுபடியும் நீங்க தலையில தூக்கி வச்சுக்கிட்டா இந்த மாதிரி ஆட்கள்

தலையில மிளகாய் அரைக்கத் தான் செய்வாங்க. நான் வேற என்ன சொல்ல முடியும்? வேதத்தை நல்லா படிங்க. ஆண்டவரை பரிபூரணமா விசுவாசிங்க. கண்ட கண்ட விளம்பரங்களையும், கிறிஸ்தவ டிவி நிகழ்ச்சிகளையும் பார்த்து ஏமாந்து போகாதீங்க.

கே 20. நம்மோட பிரச்சனைகளுக்காக ஜெப மையங்கள், ஜெப கோபுரங்கள், ஜெபத் தோட்டங்களை அணுகலாமா?

*'இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அவர்கள் அத்தனை பேர்களும் தமக்கு பிள்ளைகள் ஆகும்படி பிதாவானவர் நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்'*னு யோ 1:12ல சொல்லப்பட்டு இருக்கு. உங்க பிரச்சனைகளுக்கு நீங்களே ஜெபம் பண்ணுங்க. ஏன் அவங்க ஜெபிச்சாத் தான் ஆண்டவர் கேப்பாரா? உங்க ஜெபத்தை கேட்க மாட்டாரா? ஆண்டவருக்கும் உங்களுக்கும் இருக்கிற உறவுல இன்னொரு இடைத் தரகர் எதுக்கு? தேவை இல்லையே.

உங்க ஜெபத்துக்கு உடனே பதில் வரலைன்னா குறை ஆண்டவர் கிட்ட இல்லை. குறை நம்ம கிட்ட தான். நம்ம கிட்ட என்ன குறை இருக்குன்னு நம்மையே நாம நோண்டி நுருவி பரிசோதிச்சுப் பாக்கணும். ஆண்டவரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள நம்மைத் தகுதியுடைய பாத்திரமா மாத்திக்கிடணும். இந்த ஜெப மையங்கள், ஜெப கோபுரங்கள் எல்லாம் புற ஜாதி மக்களுக்கு ஒகே. ஒரு கிறிஸ்தவனுக்கு அங்கே என்ன வேலை? ஒரு கிறிஸ்தவன் நேரா ஆண்டவர் கிட்டத் தான் போகணும். ஆண்டவருக்கும் உங்களுக்கும் உண்டான உறவில இடையில் வேற யாரையும், எதையும் உள்ளே நுழையவோ, அனுமதிக்கவோ, கனம் பண்ணவோ கூடாது. ஆண்டவர் கிட்ட டைரக்டா போறதுக்கு அவர் உனக்கு பரிபூரண அதிகாரம், உரிமையை கொடுத்திருக்காரு. அதை ஏன் யூஸ் பண்ண மாட்டேங்கிற?

கே 21. வேதத்தில சொல்லப்பட்டுள்ள வாக்குத் தத்தங்கள் எல்லாமும் நமக்குத் தானே கொடுக்கப்பட்டு இருக்கின்றன?

வேதத்தை நீங்க ஆழமா படிச்சுப் பார்த்தா அல்லது பல பரிசுத்தவான்கள், வேத ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ள விளக்க உரைகளை படிச்சுப் பாத்தீங்கன்னா இந்த கேள்வியை நீங்க கேட்டே இருக்க மாட்டீங்க. வேதாகமத்தில் உள்ள வாக்குத் தத்தங்கள் எல்லாமே விசுவாசிகளுக்கு உரியது அல்ல. சத்திய வேதம் வாக்குத் தத்தங்களின் புத்தகம் தான். ஆனா எல்லா வாக்குகளையும் நாம இன்னிக்கு உரிமை பாராட்ட முடியாது. ஏன்னா, அதில இஸ்ரவேல் மக்களுக்காகவே கொடுக்கப்பட்ட வாக்குகள் உண்டு. அவைகள்ல முக்கால் வாசி உடல் மற்றும் பொருளாதார ஆசீர்வாதங்களையே எடுத்துக் கூறுகின்றன (உபா 28:1–14).

ஆனா புதிய உடன்படிக்கையின் கீழே வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் எல்லாமே பிரதானமா ஆன்மீகமானவைகள் (எபே 1:3). அது போலவே மேசியாவான இயேசு கிறிஸ்துவுக்கே உரிய வாக்குகளை நாம யாருமே உரிமை பாராட்ட முடியாது. உதாரணத்துக்கு சங் 34:20. *'அவனுடைய எலும்புகளையெல்லாம் அவர் காப்பாற்றுவார். அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை'* யோ 19:36. ஆனால் இயேசு கிறிஸ்துவின் நேரடி வழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்ட கள்ளனின் எலும்புகள் முறிக்கப்பட்டனவே (வசனம் 32). தூதர்கள் நம்மைக் காக்கும்படியா நாம ஜெபிக்கலாம். ஆனா நமக்கு ஒரு போதும் எலும்பு முறிவு ஏற்படாதுன்னு கோண்டியா சொல்ல முடியாது.

யுகங்களைச் சார்ந்த வாக்குத் தத்தங்களை நாம கவனமா கையாளணும். இன்னிக்கு எந்த சிங்கமும் வைக்கோல் திங்காது. சின்ன குழந்தை எதுவும் பாம்பு புத்துல கையை விட்டு விளையாட முடியாது (ஏசா 11:7,8). தனிப்பட்டவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைகளில் கொடுக்கப்பட்ட வாக்குகளை பொதுவாக்கிட முடியாது. ஆபிரஹாமுக்கு ஆண்டவர் வாக்களித்தது போல நம்மை சபிக்கிறவர்களை அவர் சபிப்பாருன்னு நாம எதிர்பார்க்கக் கூடாது (ஆதி 12:3). நம்மை சபிக்கிறவர்களை நாம இப்போ ஆசீர்வதிக்கத் தான் செய்யணும் (மத் 5:44). ஆக எல்லா வாக்குகளும் நம் எல்லாருக்கும் உரியது அல்ல.

கே 22. எங்க சபைக்கு வருகிற ஒரு விசுவாசிக்கு பிசாசு பிடிச்சிருக்கு. சபையில ஜெபிக்கும் போது அது பயங்கரமா ஆட்டம் போடுது.

விசுவாசிக்கு பிசாசு பிடிச்சிருக்கா? ஆச்சரியமா இருக்கு: ஏன்னா *'நீங்க ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாக இருக்கிறீர்கள்'*னு II கொரி 6:16 சொல்லுது. *'நீ என்னுடையவன்'*னு ஆண்டவர் ஏசாயா 43:1ல சொல்றாரு. *'அப்படி இருக்கும்படிக்கு மற்ற ஜனங்களை விட்டு நான் உன்னை பிரித்தெடுத்தேன்'*னு லேவி 20:26ம், *'நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்த ஜனம்'*னு உபா 7:6ம் சொல்லுது. *'நாம ஆண்டவரோட புள்ளை'* (யோ 1:12). *'அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி. ராஜரீக ஆசாரியக் கூட்டம், அவரோட சொந்த ஜனம்'* – 1 பேதுரு 2:9. *'இந்த சரீரம் கர்த்தருக்கு உரியது'*. இதில் ஆவியானவர் வாசம் பண்ணுகிறார் – எபே 4:39.

பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் இந்த சரீரத்தை பிசாசு பிடிக்கிறதாவது? சான்ஸே இல்லை. தேவன் தம்முடைய ஆலயத்தைக் குறிச்சு மிகவும் பக்தி வைராக்கியமுள்ளவராக இருக்கிறார் (மத் 21:12,13). *'சத்துரு வெள்ளம் போல வரும் போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாக*

*கொடி ஏற்றுவார்*னு ஏசா 59:19 சொல்லுது. '*யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை. இஸ்ரவேலுக்கு விரோதமான குறி சொல்லுதலும் இல்லை*'. – எண் 23:23. '*சத்துருவின் சகல வல்லமைகளையும் மேற்கொள்ள உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன். ஒன்றும் உங்களை சேதப்படுத்தாது*' – லூக்கா 10:18,19. '*உலகத்தில் இருப்போனிலும் உங்களில் இருப்பவர் பெரியவர்*'–1யோ 4:4. இன்னும் எத்தனை வசனம் வேணும்? ஒரு விசுவாசி ஆண்டவருக்குள்ள இருக்கும் போது பிசாசு அவனைப் பிடிக்க முடியாது.

ஆனா நீ பின் மாற்றம் ஆனா, விழுந்து போனா ஒரு பிசாசு இல்லை, ஏழு பிசாசு வந்து உன்னைப் பிடிச்சுக்கும். பிசாசுக்கு நாம இடம் கொடுத்தா அவன் நம்ம வாழ்க்கையில சும்மா பூந்து விளையாடுவான். ஜாக்கிரதை. கோபம், தாபம், எரிச்சல், பொறாமை, வெறுப்பு, காமாந்தகார சிந்தனை என்று பிசாசுக்கு நாம இடம் கொடுத்தா அவன் நம்மை வாட்டி வதைப்பான். பல பாதிப்புகளை ஏற்படுத்த முடியும், வஞ்சிக்க முடியும், நெருக்கம், கஷ்டம், பலவீனம், நோய்களை கொடுக்க அவனால முடியும். ஆனா ஒரு போதும் ஒரு அவிசுவாசியை பிடிக்கிறது போல அவனால ஒரு விசுவாசியைப் பிடிக்க முடியாது (மத் 24:24, 1 பேதுரு 5:8,9). ஆவியானவரின் வழி நடத்துதல்களை உதாசீனம் பண்ணி நம்ம இஷ்டத்துக்கு நாம நடந்தா நமது எண்ணம், உணர்வுகள், செயல்களில் அவன் ஆளுகை, வல்லமை, ஆதிக்கம் எல்லாம் அதிகமாக இருக்கும். அதுனால தான் *பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள்*னு எபே 4:27ல சொல்லப்பட்டு இருக்கு.

கே 23. பெண்கள் முக்காடு போட்டுக் கொள்ளணுமா?

1 கொரி 11:1–16யில் பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய நிருபத்தில் இதற்கு தெளிவாகவே விள்க்கம் கொடுத்திருக்கிறார். படிச்சுப் பாருங்க. பெண்கள் சபையில் கண்டிப்பாக முக்காடு போட்டு இருக்கணும். அதுவே அவளுக்கு தலையாகிய கணவனை மகிமைப்படுத்தும் என கூறுகிறார். பெண்களின் நீளமான கூந்தல் ஆண்களின் இச்சைகளைத் தூண்டி கவர்ந்திழுக்கும் தன்மை உள்ளது. இதை ஒருத்தரும் மறுக்க முடியாது. அவளுடைய கூந்தல் சொந்தப் புருஷர்களின் ஆசை, இச்சைகளைத் தூண்டலாம். மற்ற ஆண்களின் உணர்வுகளையும் தூண்டுவதற்கு ஏதுவாக இல்லாமல் இருக்கவே இந்த முக்காடிடல். சபையில் யாருடைய கவனமும், உணர்வுகளும் திசை திரும்பக் கூடாது. ஆராதணை வேளையில் சபையில் தேவனுடைய ஆளுகை மற்றும் ஒழுங்குமுறைகள் எப்படி இருக்கின்றன என தேவ தூதர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் (வசனம் 10). சபையில ஆராதிக்க வருகின்ற ஸ்திரிகள் ஆடம்பர அலங்காரங்களைத் தவிர்த்து அடக்க ஒடுக்கமாக தேவனுடைய தலைமையையும், அவர்கள் புருஷனையும் மகிமைப்படுத்தும்படி நடந்து கொள்ளணும்.

யாருக்கும் இடறல் உண்டாக்கும்படி நடந்து கொள்ளக் கூடாது. இது வெறும் கலாச்சாரத்திற்கு அடுத்த ஒரு விஷயமல்ல. சபை ஒழுங்கு, நீதி, தேவ

மகிமைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு நியதி. இதில் எந்த மாறுபட்ட கருத்துக்கோ, விவாதத்திற்கோ இடமில்லை என்பதை அழுத்தம் திருத்தமா அடிச்சே சொல்லி விட்டார் பவுல் 16வது வசனத்தில். '*ஒருவன் வாக்குவாதம் செய்ய மனதாய் இருந்தால் எங்களுக்கும் தேவனுடைய சபைகளுக்கும் அப்படிப்பட்ட வழக்கமில்லை என்று அறியக் கடவன்*'. கப்சிப். நோ ஆர்கியூமெண்ட்ஸ். கம்முன்னு முக்காடு போடுங்க.

B.அபிஷேகம்

கே 24. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஏன் எல்லாருக்கும் கிடைக்கலை?

பாவ வாழ்க்கையில இருந்து மனந்திரும்பி, பாவத்தை அறிக்கை செய்துவிட்டு, பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் (இயேசு கிறிஸ்துவின் நாமத்தில என்றாலே அது பிதா, குமாரன், பரிசுத்த ஆவின்னு தான் அர்த்தம். மூவரும் ஒன்றாய் இருக்கிறார்கள். கேள்வி 5க்கு உரிய பதிலையும் படியுங்கள்). நீங்க முழுகி ஞானஸ்நானம் பெறுகின்ற சமயத்தில, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்வீர்கள்னு அப் 2:38ல சொல்லப்பட்டு இருந்தாலும் அது பரிசுத்த ஆவியானவரின் கிரியையினால் பாவ உணர்வடைந்து, இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்படுவதையே குறிக்கிறது (அப் 19:1–6). ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவது (பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவது) என்பது வேறு அனுபவம். அழுக்கான பாத்திரத்தை தண்ணீரால் கழுவி சுத்தம் செய்வதும் (இரட்சிப்பு), அதை அந்த தண்ணீரால் நிரப்புவதும் (பரிசுத்த ஆவியின் அபிஷேகம்) வெவ்வேறு அனுபவங்கள்.

'*மாம்சமான யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன்*' என்று ஆவியானவர் கூறியிருக்கிறார் – அப் 2:17. தாகமுள்ளவன் மேல் தண்ணீரை ஊற்றுவேன்' என்று ஆண்டவர் கூறியிருக்காரே. இரட்சிக்கப்பட்ட உடனேயே ஆவியானவரின் அபிஷேகம் நமக்கு கிடைக்குது. அதன் பிறகு நாம கிருபையில், சத்தியத்தில் வளர அவர் உதவி செய்கிறார். அது கணுக்கால் அளவு, முழங்கால் அளவு என அதிகமாகி அதில நாம முழுகி முழுகி களி கூறும்படி வளரணும். அது உங்க கையில தான் இருக்கு. வாஞ்சையோடு, தாகத்தோடு, ஏக்கத்தோட ஆண்டவரோட சமூகத்தில நாம காத்துக் கிடந்து முழு இருதயத்தோட, கண்ணீரோட ஜெபம் பண்ணும் போது ஆவியானவர் உங்களை நிரப்புவார். ஆவியானவரின் அனுக்கிரஹம் இல்லாம இயேசு கிறிஸ்துவை நீங்க ஏற்றுக் கொள்ளவே முடியாது. அபிஷேகம் உங்களுக்கு இருக்கு. அதில வளர, உங்களை நிரப்ப நீங்க முயற்சி பண்ணுங்க.

கே 25. அந்நிய பாஷை பேசினாத் தான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இருக்குதுன்னு அர்த்தமா?

அப்படீன்னு வேதத்தில எங்கேயும் நேரடியா சொல்லப்படலை. ஆனா ஆவியின் அபிஷேகத்தை மக்கள் பெற்ற போது அவர்கள் அந்நிய பாஷையில் பேசினார்கள் என்பதற்கு போதுமான எடுத்துக் காட்டுகள் வேதத்தில இருக்கு. பொதுவா ஆவியின் அபிஷேகம் பெறுகின்ற ஒருத்தர் அந்நிய பாஷையில பேசுவாருன்னு எதிர்பார்க்கலாம். ஆனா இதுக்கு நேரடியான உபதேசம்னு ஒண்ணும் இல்லை. '*அந்நிய பாஷை விசுவாசிகளுக்கு அடையாளமல்ல*'ன்னு 1 கொரி 14:22 சொல்லுது. தேவன் பலவிதமான பாஷைகள் பேசுவதை சபையில கடைசியில தான் வச்சிருக்காரு –1 கொரி 12:28. அன்பு இல்லாம அந்நிய பாஷை பேசுறதும் சாத்தியம் (1 கொரி 13:1–3). அதுனால தான் பவுல் 1 கொரி 13:1ல '***நான் மனுஷர் பாஷைகளையும், தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கு இராவிட்டால் (நான் வெறுமே) சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்***'னு சொல்லி அன்புக்கு முதலிடம் கொடுக்கிறார். அதே சமயம் '***நீங்கள் எல்லோரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்***' எனவும் 1 கொரி 14:5 சொல்கிறார். ஏன்னா அது அவனுக்கு பக்தி விருத்தியை உண்டாக்கும் (14:4). ஆனால் ஒருவரது ஆவிக்குரிய நிலையினை அந்நிய பாஷை பேசுகிறதை வச்சு கணித்து விட முடியாது. எடை போடவும் கூடாது. மரமானது அதன் கனியினாலே அறியப்படும் (மத் 12:33).

கே 26. அந்நிய பாஷை சொல்லித் தான் ஜெபிக்கணுமா?

ஆவியானவர் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று வரங்களை அளிக்கிறார் – 1 கொரி 12:7. அதில் பற்பல பாஷைகளைப் பேசுவதும் ஒன்று (12:10). '***அந்நிய பாஷை தனக்கு பக்தி விருத்தி உண்டாகப் பேசுகிறான்***'னு 1 கொரி 14:4 சொல்லுது. '***ஏனெனில் அவன் அந்நிய பாஷையில் ... தேவனிடத்தில் பேசுகிறான்***' (14:2). நம்முடைய தனிப்பட்ட ஜெபத்தில் ஆவியில் நிறைந்து அந்நிய பாஷை பேசி ஜெபிப்பது நல்லது. அப்பொழுது '***நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்வது இன்னது என்று அறியாமலிருக்கிற படியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்***'னு ரோமர் 8:26, 27 சொல்லுதே. அது உங்களை உற்சாகப்படுத்தும். ஆவியில் அனல் மூட்டும். பக்தி விருத்தியாக்கும். விசுவாசம் பலப்படும். அதனால் ஆவியில் நிறைந்து அந்நிய பாஷையில் தேவனோடு பேசி அளவளாவுங்கள். மகிழ்ந்து களி கூறுங்கள்.

கே 27. சபையில, பொது இடத்தில அந்நிய பாஷை பேசி ஜெபிக்கலாமா?

பெந்தேகொஸ்தே நாளில் 120 பேர் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் கூடி ஜெபித்த போது பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டார். அந்நிய பாஷை

பேசினார்கள். கொர்நேலியுவின் வீட்டில் வசனத்தைக் கேட்ட யாவர் மேலும் ஆவியானவர் இறங்க, அவர்கள் பல பாஷைகளைப் பேசி தேவனைப் புகழ்ந்தார்கள் (அப் 10:44,45). எந்த இடத்திலும் அந்நிய பாஷையில் பேசி தேவனைத் துதிக்கலாம். ஆனா அப்படி பேசி ஜெபிக்கிறதுனால ஏதாவது பிரயோஜனம் உண்டா? அதைக் கேக்குறவங்களுக்கு நாம என்ன பேசுறோம்கிறது புரியலைன்னா அதனால என்ன நன்மை? அப்படி பேசினா நாம அதைக் கேக்குகிறவர்களுக்கு அந்நியர்களாக இருப்போமே (1கொரி 14:11). அப்படி பேசுறதா இருந்தா அதன் அர்த்தத்தையும் அத்தனை பேருக்கும் புரியும்படியா நாம விளக்கிச் சொல்லணும். ***'இல்லாட்டி நாம் ஆவியோட ஸ்தோத்திரம் பண்ணும் போது, கல்லாதவன் நம் ஸ்தோத்திரத்திற்கு எப்படி ஆமேன் என்று சொல்லுவான்? நாம பேசுறது இன்னதென்று அவன் அறியானே. அதுனால அவன் பக்தி விருத்தி அடையானே'*** (1 கொரி 14:16,17). கல்லாதவர்களும், அவிசுவாசிகளும் அதைக் கேட்டுட்டு நமக்கு பைத்தியம் பிடிச்சிருக்கு. அது தான் ஏதோ வாய்க்கு வந்ததை உளறிக்கிட்டு இருக்காங்கன்னு சொல்வார்களே (14:23). இது தேவையா?

I கொரி 14ம் வரங்களைப் பற்றியது. அங்கே I கொரி 12:10ல் குறிப்பிட்டுள்ள ***'பற்பல பாஷைகளைப் பேசுதலாகிய'*** வரத்தைப் பற்றி பவுல் பேசுகிறார். சபையில் ஒருவருக்கு தேவனிடமிருந்து ஒரு செய்தி வரும் பொழுது அது அந்நிய பாஷையில் இருக்குமானால், அங்கே அது வியாக்கியானம் செய்யப்பட (அர்த்தம் சொல்லப்பட) வேண்டும்.

கே 28. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாம ஒருத்தன் பரலோகம் போக முடியாதா?

இந்த கேள்விக்கு நான் பெரிதும் மதிக்கும் ஏ.ஜி. சர்ச்சுகளின் தென் இந்திய சூப்பிரண்டெண்ட்டாக இருக்கும் பெரியவர் **பாஸ்டர் பி.எஸ். ராஜமணி** அவரோட அருமையான புத்தகமான ***'உங்கள் கேள்விகளுக்குப் பதில்கள் – முதல் பாகம்'*** என்ற நூலில் அவர் எழுதியுள்ள பதிலை அப்படியே கீழே தர்றேன். ஐ திங்க், இந்த பதில் உங்களின் சந்தேகத்துக்கு நல்லதொரு விளக்கமா இருக்கும்னு நம்புறேன். பெரியவர் எழுதிய மற்ற ஆவிக்குரிய புத்தகங்கள் எல்லாமே அனைத்து பிரபல கிறிஸ்தவ புக் ஸ்டால்களிலும், மதுரையில வேர்டு ஆப் கிரைஸ்ட் புத்தக நிலையத்திலும். அவரோட வீட்டு விலாசத்திலேயும் கிடைக்கும். வாங்கிப் பயன் பெறுங்க. (பி.எஸ்.ராஜமணி, 100, நாவலர் நகர், மதுரை 625 010. டெலிபோன் 0452–2603691).

"பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் தான் முத்திரை என்றும், அச்சாரம் என்றும் கூறப்பட்டுள்ளது என்று அநேகர் நம்புகிறார்கள் (எபே 1:13,14, 4:30, 1கொரி 1: 22, 5:5, ரோமர் 8:9,11) . யோவான் 3:5ல் ***'ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க***

மாட்டான்' என்று இயேசு கூறுகிறார். மேற்கூறிய வசனங்கள் அபிஷேகத்தை குறிப்பிடுகின்றன என்ற வாதிடுவோர், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெறாமல் பரலோகம் போக முடியாது என்று நம்புகின்றனர். போதிக்கின்றனர்.

ஒரு பாவி மனந்திரும்பி இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் போது அவன் தேவனுடைய பிள்ளையாகிறான். அவன் பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப்படுகிறது. (யோ 1:12; எபி 12:23; வெளி 20:12,15; லூக் 10:20). ஒரு பாவி மனந்திரும்ப உதவி செய்வது பரிசுத்த ஆவியானவர். ஒருவன் மறுபடியும் பிறப்பதை ஆவியினால் பிறப்பது என்று நாம் விளங்கிக் கொள்கிறோம்.

மனந்திரும்பி பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும் போது நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம் என்று இயேசு கூறுகிறார் (யோ 14:23). அதாவது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவன் அவனுக்குள் வந்து வாசம் பண்ணுகிறார்கள். அப்படிப்பட்ட அனுபவமுடைய ஒரு தேவனுடைய பிள்ளை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறாததால் நரகத்துக்கு போவான் என்றால் இயேசு கிறிஸ்துவையும் அவர் தரும் இரட்சிப்பையும் ஒன்றுக்கும் உதவாததாக்கி விடுகிறோம்.

ஒருவன் அபிஷேகம் பெறுமுன்பாகவே தேவனுடைய பிள்ளையாக மாறுகிறான். மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொண்டு பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்ற உடனேயே, அவன் பரலோகத்துக்கு உரியவனாகிறான். உலகத்தில் அவன் தொடர்ந்து கர்த்தருக்கு சாட்சியாக வாழ திருமுழுக்குப் பெறுவதும், பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெறுவதும் அவசியம் (அப் 1:8).

இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பரிசுத்தமாய் வாழ்ந்த பரிசுத்தவான்கள் ஏராளமானோர் இருந்திருக்கிறார்கள். இன்றும் இருக்கிறார்கள். இவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பற்றிய தெளிவு இல்லை. இதனால் அவர்கள் வாஞ்சித்துப் பெறவில்லை. இவர்கள் எல்லாம் நரகத்துக்குப் போவார்கள் என்று நான் நம்பவில்லை. உங்களில் சிலர் அப்படி நம்பினால் அது உங்கள் விருப்பம். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறா விட்டாலும் மெய் கிறிஸ்தவர்களாய் இருக்கின்றவர்கள் ஏராளமுண்டு".

சந்தேகம் தீந்துச்சா? அபிஷேகம் பெறாதவங்க அதை வாஞ்சித்துப் பெற்றுக் கொள்ள முயற்சி பண்ணுங்க. அப்படி கிடைக்காத வரைக்கும் குற்ற உணர்வுல கிடந்து சங்கடப்பட வேண்டாம்.

C. ஞானஸ்நானம்

கே 29. முழுக்கு ஞானஸ்நானம் அவசியமா?

அவசியம். கண்டிப்பா அவசியம். அப்படித்தான் வேதம் சொல்லுது. ஏன்னா இது பெந்தகோஸ்தே சபைப் போதகர்களோ அல்லது எந்த மனுஷரோ கண்டுபிடிச்சு ஏற்படுத்தின ஒரு சடங்காச்சாரம் அல்ல அது. இது இயேசு கிறிஸ்துவோட கட்டளை (மத் 28:19). பிதாவாகிய தேவனே நியமிச்சது (யோ 1:33). இது தேவ நீதி. அதுனால தான் பாவமே செய்யாத இயேசுவே கூட யோவான் ஸ்நானகன் தடுத்தும் முழுகி ஞானஸ்நானம் எடுக்கும் போது '*அது எல்லா நீதியையும் நிறைவேற்ற*'ன்னு மத் 3:15ல சொன்னாரு. அதுனாலத் தான் ஆவியானவரால ஏவப்பட்டு அப்போஸ்தலர்களும் அதைப் போதிச்சாங்க (அப் 2:38).

'*ஞானஸ்நானத்தினால நாம எல்லோரும் இயேசுவோட சேர்ந்து அடக்கம் பண்ணப்பட்டவர்களாயும், மரணத்தின் சாயலில் இணைக்கப் பட்டவர்களாயும், அவரோடு உயிர்த்தெழுந்து புதிய ஜீவனைப் பெற்றுக் கொண்டவர்களாயும் இருக்கிறோமே*' – ரோமர் 6:3–6. இது ஒரு சடங்கு அல்ல. பாவத்துக்கு மரிச்சு நீதிக்கு பிழைத்தல் (ரோ 6:2). இது தேவனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளும் ஒரு நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை (1 பேதுரு 3:21). அந்த தேவ நீதிக்கு நாம இயேசுவே கீழ்படிந்தது போல கீழ்படிஞ்சு முழுகி ஞானஸ்நானம் எடுக்கும் போது தான் பிதாவுக்கு பிரியமானவர்களாக நாம ஆக முடியும் (லூக் 3:22).

கொர்நெலியு சிறந்த பக்திமான். நிறைய தான தர்மங்கள் எல்லாம் செஞ்சவன். ஆவியில நிறைஞ்சு அந்நிய பாஷை பேசினவன். நியாயப் பிரமாணங்களை கற்றுத் தேர்ந்து அவைகளை தவறாம வாழ்க்கையில கடைப்பிடிச்சவன். இருந்தாலும் பேதுரு அவனைப் பார்த்து ஞானஸ்நானம் எடுக்கும்படி கட்டளை இட்டானே (அப் 10:1,2,45,46,48). பரம்பரைக் கிறிஸ்தவர்களா இருந்தாலும், பெயர்க் கிறிஸ்தவர்களா இருந்தாலும், எந்தப் பிரிவைச் சேர்ந்தவங்களா இருந்தாலும் மனந்திரும்பி, விசுவாசித்து, ஒரே தேவனாகிய கர்த்தரை ஏத்துக்கிட்டதுக்கு சாட்சி தான் ஞானஸ்நானம்கிறது (எபே 4:5). மனந்திரும்புறதுக்கு முன்னாடி எடுத்த எந்த ஞானஸ்நானமும் ஞானஸ்நானம் இல்லை. அதுனால முதல்ல போயி சுப்புன்னு முழுகி ஞானஸ்நானம் எடுங்க. உங்க மண்டை அறிவில எல்லாத்தையும் ஆர்கியூ பண்ணிக்கிட்டு இருக்க வேண்டாம். இது கிறிஸ்தவர்களுக்கு உண்டான ஆப்ஷன் இல்லை. இது தேவ கட்டளை.

கே 30. முழுகி ஞானஸ்நானம் எடுக்காதவர்கள் பரலோகம் போக முடியாதா?

சத்தியத்தை அறிஞ்சு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் முழுகி ஞானஸ்நானம் எடுக்கலைன்னா பரலோகம் போக முடியாது. '*ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவா விட்டால் பரலோகத்தில் பிரவேசிப்பது இல்லை*'ன்னு யோ 3:5 தெளிவா சொல்லுது. நாம பாவத்துக்கு மரிச்சு நீதிக்கு பிழைச்சாகணும். தண்ணிக்குள்ள முழுகிற சமயத்தில நாம இயேசுவோட சேர்ந்து அடக்கம் பண்ணப்படுறோம். தண்ணியை விட்டு எழுந்திருக்கும் போது பாவத்துக்கு மரிச்சு நீதிக்கு பிழைச்சு புதிய ஜீவனைப் பெத்துக் கொண்டு 'மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனாக' நாம எழுந்திரிக்கிறோம். இது தான் அங்க நடக்குது. இது தான் தாத்பரியம். இது அத்தனையும் விசுவாசத்தில நடக்குது. '*விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான்*' – மாற்கு 16:16.

கே 31. சிலுவையில அறையப்பட்ட கள்ளன் ஞானஸ்நானம் இல்லாமலேயே பரலோகம் போனானே?

அது ஒரு 'எக்சப்ஷனல்' கேசு. அதுக்கு முன்னாடி அவனுக்கு இயேசுவைத் தெரியாது. மனந்திரும்ப சந்தர்ப்பமில்லை. சிலுவையில தொங்கிக்கிட்டு இருக்கிற கடைசி நிமிஷத்தில ஆண்டவரை பிடிச்சுக்கிட்டான். அறிக்கை செஞ்சான். இயேசு மனமிரங்கினார். இது ஒரு தனிப்பட்ட நிகழ்வு. இதையே ஜெனரல் ரூலா எடுத்துக்கிடக் கூடாது. வேதத்தில மத்த இடங்களிலேயும் ஞானஸ்நானத்தைக் குறிச்சு என்ன சொல்லியிருக்குன்னு பார்த்திட்டு அதுக்கப்புறமா ஒட்டு மொத்தமா ஒரு முடிவுக்கு வரணும். தனியா ஒரு வசனத்தையோ, ஒரு சம்பவத்தையோ புடிச்சிக்கிட்டு ஒரு ஒட்டு மொத்த முடிவை எடுக்கக் கூடாது. அப்படி எடுத்தா அது தப்பான முடிவாத் தான் இருக்கும்.

கே 32. முழுகி ஞானஸ்நானம் எடுத்தவங்களும் பாவம் செய்யுறாங்களே. அவங்க கதி?

அவங்க கதி– அதோகதி. ஐயோ! மனந்திரும்பி, செஞ்ச பாவத்தை அறிக்கையிட்டு, முழுகி ஞானஸ்நானம் எடுக்கிற சமயத்தில அதுவரை ஒருத்தன் செஞ்ச பாவங்களுக்கெல்லாம் ஒரு மன்னிப்பு, விமோசனம் கிடைக்குது. மேற்கொண்டு எந்தப் பாவமும் செய்யாம தன்னைத் தானே காத்துக்கிடணும். பரிசுத்தத்தின் மேல பரிசுத்தம் அடையணும். நீதியின் மேல நீதியைப் பாராட்டணும். மேற்கொண்டு எந்த தப்புத் தண்டாவும் பண்ணாம சத்தியத்தில, நீதியோட, நேர்மையோட, பரிசுத்தமா வாழணும். பாவம் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிறது (எபி 12:1).

கே 33. முழுகி ஞானஸ்நானம் எடுக்காத கிறிஸ்தவர்கள் எத்தனையோ பேர் எந்த பாவமுமே செய்யாம இருக்காங்களே. அவங்க நிலை என்ன?

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு முழுக்கு ஞானஸ்நானத்தை நம்பாதிருக்கிற சில பிரிவுகளில் இருக்கிறவர்களிலும் பல நல்லவங்க, அன்புள்ளவங்க, பண்புள்ளவங்க, பரிசுத்தவான்கள், தான தர்மம் செய்யிறவங்க இருக்காங்க. ஆனா இது வரைக்கும் நான் எந்த ஒரு பாவமுமே செஞ்சது இல்லைன்னு யாராவது சொல்ல முடியுமா? அப்படி யாராவது சொன்னாங்கன்னா அவங்க தன்னைத் தானே வஞ்சித்துக் கொள்கிறார்கள்னு தான் அர்த்தம் – 1 யோ 1:8 சொல்லுது. திருடினாத் தான், கொலை பண்ணினாத் தான், ஒரு பெண்ணை கற்பழிச்சாத் தான் பாவம்னு இல்லை.

நம்ம ஆண்டவரோட பார்வையில எது எதெல்லாம் பாவமா இருக்குன்னு நான் வேதத்தில படிச்சுட்டு அப்படியே ஆடிப் போயிட்டேன், நடுங்கிட்டேன். நான் எழுதியுள்ள '**பாவத்தின் சம்பளம் நரகம்**'கிற புத்தகத்தை வாங்கி படிச்சுப் பாருங்க. மனுஷரோட பார்வையில நீதி, நேர்மை, சத்தியம்கிறதெல்லாம் ஆண்டவரோட பார்வையிலே வெறும் குப்பை. '***மனுஷருக்கு செம்மையாகத் தோன்றுகிற வழிகள் உண்டு. அதன் முடிவோ மரண வழிகள்***'னு நீதி 16:25 சொல்லுது. ***நீதிமானே இரட்சிக்கப்படுவது மிகவும் அரிதுன்னு*** வேதம் சொல்லுது.

பாவமே செய்யாத இயேசு கிறிஸ்துவே முழுகி ஞானஸ்நானம் எடுத்திருக்கிறார். நாம பிறந்ததே பாவத்திலே. '***என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்***'னு சங்கீதக்காரன் சொல்றான் (சங் 51:5). '***தன் பிழைகளை உணருகிறவன் யார்?***' (சங் 19:12). '***என் இருதயத்தை சுத்தமாக்கினேன். என் பாவமற துப்புரவானேன் என்று சொல்லத் தக்கவன் யார்?***'–நீதி 20:9. ஒருத்தருமே கிடையாது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறவங்க, அவர் சொல்றதை ஏற்றுக் கொண்டு முழுகி ஞானஸ்நானம் எடுக்க மாட்டாங்கன்னா என்னத்த சொல்ல? அவரே முழுகி ஞானஸ்நானம் எடுத்து முன் மாதிரியா காட்டின பிறகும் அவரைப் பின்பற்றி, அவர் நடந்த பாதையில நடக்க மாட்டேன்கிறாங்கன்னா அவங்களைச் சொல்லி குற்றமில்லை. அவங்களோட சபைப் போதகர்களைத்தான் சொல்லணும். சத்தியத்தை விளக்கிச் சொல்லி சரியான பாதை காட்ட வேண்டியவங்க அவங்க தானே.

கல்லையும், மண்ணையும் தெய்வம்னு கும்பிடுகிற புற ஜாதி மக்கள் அதுகளுக்காக பக்தி வைராக்கியத்தோட தீக்குழியில எல்லாம் இறங்கி நடக்கிறாங்க. இவங்க என்னடான்னா தண்ணிக்குள்ள இறங்கி

ஞானஸ்நானம் எடுக்க 1008 நொற நாட்டியம் பேசிக்கிட்டு இருக்காங்க. கொடுமை. என்ன பண்ண? சில பேர் கிட்ட என்ன சொன்னாலும் மண்டையில ஏறாது. விட்டுடுங்க. அவங்களுக்காக ஜெபம் பண்ணுவோம். கர்த்தர் அவர்கள் கண்களைத் திறக்கட்டும்.

கே 34. நான் ஒரு RC கிறிஸ்தவன். முழுகி ஞானஸ்நானம் எடுக்க RCயில வாய்ப்பு இல்லையே. என்ன செய்ய?

முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிற ஒரு சபையில போயி நீங்க ஞானஸ்நானம் எடுத்துக்க வேண்டியது தானே. அப்படி நீங்க எடுக்கப் போறீங்கன்னு பாருகிட்டேயும் நீங்க சொல்லிக்கிட்டு இருக்கணுங்கிற அவசியமில்லை. இது உங்களுக்கும் ஆண்டவருக்கும் உண்டான ஒரு தனிப்பட்ட உடன்படிக்கை (1பேதுரு 3:21). நீங்களும் உங்க குடும்பமும் பரலோகம் போகணும். நீங்களும் சத்தியத்தை தெரிஞ்சு அதன்படி நடங்க. நீங்களும் மாறுங்க. மத்தவங்களையும் மாத்துங்க. நீங்க ஒரு ஆவிக்குரிய சபைக்கு போனாலும், நீங்க அந்த RC மக்களுடன் பழகுங்க. அப்பத் தான் நீங்க சொல்றதை RC சகோதரர்கள் கேப்பாங்க. இல்லைன்னா நீங்க சொல்றதைக் கேக்க மாட்டாங்க. மண்டையில ஏறாது. ***"யூதருக்கு யூதரைப் போலவும், நியாயப் பிரமாணம் இல்லாதவர்களுக்கு அவர்களைப் போலவும் (RC க்கு RCஐப் போலவும்!), பலவீனருக்கு பலவீனரைப் போலவும் ஆனேன். எப்படியாகிலும் ஒரு சிலரை இரட்சிக்கும் படிக்கு நான் எல்லோருக்கும் எல்லாமும் ஆனேன்"***னு பவுல் 1 கொரி 9:20–23ல சொல்றார் இல்லையா? நீங்க RCயா பெந்தகோஸ்தேகாரங்களாங்கிறது முக்கியமில்லை. சத்தியத்தின் பிரகாரம் நடத்தல், இரட்சிப்பு இது தான் முக்கியம்.

கே 35. குழந்தையை பிரதிஷ்டை செய்யணுமா? பிரதிஷ்டை செய்யப்பட்ட குழந்தைக்கு முழுக்கு ஞானஸ்நானம் அவசியமா?

பிரதிஷ்டை வேற. ஞானஸ்நானம் வேற. தெளிப்பு ஞானஸ்நானம் ஒரு ஞானஸ்நானம் அல்ல. முழுகி எடுக்கிற ஞானஸ்நானம் மட்டுமே தேவன் சொன்னது. பிரதிஷ்டைங்கிறது ஒரு அர்ப்பணிப்பு, சமர்ப்பணம், ஒப்படைப்பு, இந்த குழந்தையை நாங்க கிறிஸ்துவுக்குள் வேத சத்தியத்தின் பிரகாரம் வளர்ப்போம், நடத்துவோம், கற்றுக் கொடுப்போம். கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படி இந்த குழந்தை சத்தியத்தில், கிருபையில், அவரை அறிகின்ற அறிவில் அனு தினமும் வளர நேரம் ஒதுக்குவோம்னு பெற்றோர்கள் ஒரு உறுதிமொழி எடுத்து தேவ சமூகத்தில் ஒப்புக் கொடுத்தல் தான் பிரதிஷ்டை. நாமும் நம்மை பிரதிஷ்டை பண்ணணும். நம்ம வீடு, சொத்து, சுகம், குடும்பம், பிள்ளைங்க, நம்மோட ஆவி, ஆத்துமா, சரீரம், எண்ணம், சொல், செயல், சிந்தனை எல்லாத்தையுமே ஆண்டவர் சமூகத்தில் ஒப்புக் கொடுக்கணும். உமக்காக, உம்முடைய இராஜ்யத்துக்காக, உம்மோடு வாழ, மற்றவர்களையும்

உமது இராஜ்ய பிரஜைகளாக மாற்ற, உம்முடைய நாமம் மகிமைப்படும்படி கறை, குறை, பிழை இல்லாத ஒரு சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ ஒவ்வொரு கிறிஸ்தவருமே ஒப்புக் கொடுக்கணும்.

ஆதி காலத்தில் யூதர்கள் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்து தேவ சமூகத்தில் ஒப்புக் கொடுப்பார்கள். குழந்தை பிரதிஷ்டைங்கிறது பின் நாட்களில் கொண்டு வரப்பட்ட ஒரு சடங்காகும். *'பரலோக இராஜ்யம் குழந்தைகளோடது'*–மத் 19:14. விபரம் தெரியாத வயசுல எந்தக் குழந்தை இறந்தாலும் அவங்க பரலோகம் போவாங்க. அவங்க சார்பில தூதர்கள் எப்போதும் பிதாவை பரலோகத்தில ஆராதிச்சுட்டு இருக்காங்களே (மத் 18:10) இயேசுவும் பவுலும் குழந்தைகளா இருந்த போது விருத்த சேதனம் செய்யப்பட்டவங்க தான். ஆனா அவங்களும் அப்புறம் ஞானஸ்நானம் எடுத்தாங்களே (லூக்கா 2:21; 3:21–23; பிலி 3:5; அப் 9:18).

முழுக்கு ஞானஸ்நானம்கிறது பாவ மன்னிப்புக்காக (அப் 2:3). குழந்தைகளுக்கு பாவ உணர்வுகள் கிடையாது. பாவ அறிக்கை கிடையாது. மனந்திரும்புதல் இல்லை. இவைகள் இல்லாத ஒரு ஞானஸ்நானம் வேஸ்ட்! அதுனால பிரதிஷ்டை செய்யப்பட்ட குழந்தைகளும் அவங்க பெரியவங்களா ஆனாப்பிறகு பாவ அறிக்கை செய்து முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தாகணும். அது தான் வேதம் காட்டும் வழி.

கே 36. நான் ஞானஸ்நானம் எடுக்க விரும்புகிறேன். என் அப்பா அம்மா வச்ச பேரை மாத்திக்கிடணுமா?

தேவை இல்லை. உங்க பேரு ஒரு விக்கிரஹத்தின் பேரா இருந்தா ஞானஸ்நானம் கொடுக்கிற போதகர் உங்க பெயரை மாத்திக்கிட சொல்லுவாரு. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கிட்டப் பிறகும் ஒரு விக்கிரஹத்தினுடைய பெயரை அடிக்கடி உச்சரிக்க வேண்டாமேங்கிற ஒரு எண்ணத்தில அப்படி சொல்லுவாரு. நாம இருக்கிற தேசத்தில தெருப்பெயர், ஏரியா பெயர், நகர் பெயர், கடைப்பெயர், பொருட்களின் பெயர்கள்/பிராண்டுகள், நம்ம தெருவில, பக்கத்து வீட்ல, கூட வேலை பாக்குறவங்க எல்லாப் பெயருமே விக்கிரஹங்களின் பெயர்களாத் தானே இருக்கு. அவைகளை நாம சொல்லாம இருக்க முடியாதே. அந்நிய தேவர்களின் பெயர்களை உச்சரிக்க வேண்டாம் என்று கூறும் யாத் 23:13, யோசுவா 23:7 வசனங்களின் அர்த்தம், நோக்கம் என்னன்னா விக்கிரஹ ஆராதனைக்கு நாம முழுமையா விலகி இருக்கணும்கிறது தான். அந்த வசனங்களை நாம அப்படியே லிட்டரலா எடுத்துக்கிடணும்கிற அர்த்தமில்லை.

அஸ்தரோத், பாகால் என்ற அந்நிய தேவர்களின் பெயர்கள் பைபிளிலேயே எத்தனையோ இடங்களிலே எழுதப்பட்டு இருக்கே. ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற பெயர்களை வேதம் தயங்காம பயன்படுத்தி இருக்கே. (தானி 1:7; 3:26–28). புற ஜாதியில இருந்து இரட்சிக்கப்பட்ட கொர்நேலியு,

லீதியாள் பெயரை அப்போஸ்தலர்கள் மாத்தலையே. 'அப்பெல்லோ'ன்னா 'அழிக்கிறவன்'னுஅர்த்தம். அந்தப் பெயரை மாற்றாமலேயே அவன் ஒரு அப்போஸ்தலனாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டானே. சவுல் பவுலாக மாறினானேன்னு நீங்க முணுமுணுக்கிறது என் காதில விழுகுது. ஞானஸ்நானம், அபிஷேகம், ஊழிய அழைப்புக்கு பின்னரும் கூட அப்போஸ்தலன் சவுல் என்று தான் அழைக்கப்பட்டான். அதுக்கப்புறம் தான் அவன் பவுலாக அழைக்கப்பட்டான்.

கிறிஸ்துவுக்குள்ளே வந்தாப் பிறகு ஜாதி பெயரெல்லாம், நம்மோட பெயரோடு சேர்த்து சொல்லக் கூடாது. பெரிய ஊழியக்காரர்களான பத்மா முதலியார், மணி அய்யர் எல்லாம் பேரோட ஜாதியையும் சேர்த்துப் போட்டு வால்போஸ்ட்டரே அடிக்கிறாங்களே அப்படீங்கிறீர்களா? அப்பேர்ப்பட்ட வைராக்கியமுள்ள ஜாதிகளில் இருந்தும் நாங்க இரட்சிக்கப்பட்டு இருக்கோம்னு காட்டிக்கிடுறதுக்காகத் தான் அதையும் சேர்த்துப் போடுறாங்க. அதுனால அது தப்பு இல்லேன்னு தான் சொல்லுவேன். என்ன நோக்கத்துக்காக போடுகிறோம்கிறது முக்கியமில்லையா? நம் ஆண்டவர் நம் இருதயத்தின் உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகிற தேவனல்லவா?

உங்களுக்கு கிறிஸ்தவப் பெயரை வச்சுக்கிடணும்னா தாராளமா வச்சுக்கோங்க. ஆனா வேதத்தின் பிரகாரம் அது கம்பெல்சரி அல்ல. என்னோட புள்ளைங்களுக்கு இருந்த இந்துப் பெயரோட கிறிஸ்டியன் பெயரையும் சேர்த்துக்கிட்டோம். கார்த்திக் கேபரியல், சக்தி ஸ்டீபன். சக்திக்கும் ஸ்டீபனுக்கும் என்ன சம்பந்தம்னு கேட்டா உடனே சுவிசேஷத்தை சொல்லலாமில்லையா? என்னோட பிராமின் மருமகனும் அதே போலவே ராம்குமார்ங்கிற பெயரோட ஜான்சனையும் சேர்த்து 'ராம்குமார் ஜான்சன்'னு சொல்லுவாரு.

கே 37. ஞானஸ்நானம் கொடுக்கிற சில போதகர்களே ரொம்ப மோசமா, கேவலமா நடந்துக்கிடுறாங்களே?

ஆமா. சில பேரு அப்படித்தான் இருக்காங்க. உண்மை உள்ளவன் என்று எண்ணி இந்த கனமான ஊழியத்தை ஆண்டவர் கொடுக்கிறாரு. ஊழியத்தை உண்மையோட உத்தமத்தோட தான் ஆரம்பிக்கிறாங்க. பிறகு சில பேரு வாழ்க்கையில சாத்தானுக்கு இடம் கொடுத்து விழுந்து போயிடுறாங்க. என்ன பண்ண? நாம ஏன் அவங்களைப் பாக்கணும். நாம ஆண்டவரை மட்டும் தான் பாக்கணும். அவங்களோட போதனைகளை மட்டும் தான் கேக்கணும். அவங்களோட தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையையெல்லாம் பாக்க வேண்டாம்.

ஒரு விசுவாசியே எப்படி எல்லாம் இருக்கணும்னு ரொம்ப திட்டவட்டமா சொல்லி இருக்கிற நம் ஆண்டவர் அவரோட ஊழியத்தைச் செய்யுற ஊழியக்காரங்க எப்படி எல்லாம் இருக்கணும்னு எதிர்பார்க்காமலா இருப்பாரு? அவங்க தப்புப்

பண்ணினா ஆண்டவர் அவங்களை நிக்க வச்சுக் கேள்விகள் கேப்பாரு. அதுனால அதைப் பத்தி கவலைப்படாம, நீங்க பரலோகம் போறதுக்கு எந்தத் தடையும் இல்லாத அளவுக்கு உங்களை பாதுகாத்து பாத்துக்கோங்க. ஊழியக்காரர்கள் எப்படி இருக்கணும்கிறது பற்றி **'என் ஊழியக்காரனே...!?'**ன்னு ஒரு புக்கு எழுதியிருக்கேன். அதை வாங்கி படிச்சுப் பாருங்க. உங்க போதகருக்கும் ஒரு காப்பியை வாங்கிக் கொடுங்க. அவங்களுக்காக நல்லா ஜெபியுங்க.

D. பாவமன்னிப்பு

கே 38. பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இயேசுவுக்கு மாத்திரம் தான் இருக்கா?

ஆமா. பரம பிதா அவர் ஒருத்தருக்கு மாத்திரம் தான் அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். ***'அவராலே அன்றி வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழே பூமியின் மேலே அவருடைய நாமமே அல்லாமல் வேறு ஒரு நாமம் கட்டளையிடப்படவில்லை'*** (அப் 4:12). அவர் ஒருத்தருக்குத் தான் அந்த அதிகாரம் இருக்கு. அதுவும் எதுனால அவருக்கு அந்த உரிமை, அதிகாரம் கிடைச்சது? எந்தப் பாவமுமே செய்யாத அவர் நமக்காக, நமது பாவங்களுக்காக, இந்த உலகத்தினுடைய ஒட்டு மொத்த பாவங்களுக்காக கல்வாரி சிலுவையில கடைசி சொட்டு இரத்தம் வரை சிந்தினாரே, அதுனால அவருக்கு அந்த அதிகாரம் கிடைச்சது. ***'நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவர் ஒருவரே. நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல. சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாக அவர் இருக்கிறார்'***னு 1யோ 2:2 சொல்லுது.

'இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்' 1 யோ 1:7. ***'அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாகியிருக்கிறது'*** என்று கொலே 1:14 சொல்கிறது. பிதாவுக்கு பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் உண்டு. அவர் வேறு இயேசு வேறு அல்ல. ***'இயேசு பிதாவிலும், பிதா இயேசுவிலும் இருக்கிறார்கள்'*** – யோ 14:10–11). இந்த உலகத்திலே வேற யாருக்கும், தெய்வம்னு சொல்லப்படுகிற வேற எதுக்குமே பாவ மன்னிப்பு, பாவ விமோசனம் கொடுக்கிற அதிகாரம் கிடையவே கிடையாது.

கே 39: மேரி மாதாவுக்கு பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இருக்கா?

கிடையாது. அவங்களுக்கு அந்த அதிகாரம் இல்லை. ஏன்னா, இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லை: அதுனால அவங்களுக்கு பாவ மன்னிப்பை கொடுக்க முடியாது. மேரி மாதா யாருக்காகவும் இரத்தம் சிந்தலை. இயேசுவுக்காக, அவர் பட்ட சித்திரவதைகளைக்காக மேரி கண்ணீர் சிந்தினாங்க. இயேசு அனுபவிச்ச கொடுமைகளையும், பாடுகளையும் நினைச்சாலே நமக்கே குப்புன்னு கண்ணுல கண்ணீர் பொங்குது. பத்து மாசம் சுமந்து பெத்த தாய்க்கு வேதனை இருக்காதா? இரத்தக் கண்ணீரே வடிச்சிருப்பாங்க. அவங்களோட உணர்வுகளை புரிஞ்சுக்கிட முடியுது. ஆனா அந்த வேதனை நம் பாவங்களை மன்னிக்க முடியாதே. பாவத்தை மன்னித்து பாவ விமோசனம் தருகின்ற அதிகாரம் மேரி மாதாவுக்கு கிடையாது. ரோமன் கத்தோலிக்க அன்பான சகோதர, சகோதரிகளுக்கு வேதனையைக் கொடுக்கணுங்கிற எண்ணத்தில இதை நான் சொல்லலை. ஆனா இது தான் சத்தியம்.

கே 40. பவுல், அந்தோணியார், சவேரியார் இவங்களுக்கு நம் பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இருக்கா?

ஊஹீம். கிடையாது. அவங்களுக்கு அந்த அதிகாரம் இல்லை. இவங்க எல்லாம் இரத்த சாட்சியா மரிச்சவங்க தான். ஆனா இவங்க இரத்தம் சிந்தினது இயேசுவுக்காக. நமக்காவோ, நம்முடைய பாவங்களை துடைப்பதற்காகவோ இல்லை. அது தான் வித்தியாசம். அவங்க செய்த அளப்பரிய தியாகத்தினால, ஊழியத்தினால, வைராக்கியமா ஆண்டவருக்காக எழுந்து நின்றதுனால பல அற்புதங்கள், அதிசயங்கள் நடந்தன. பல கோடி மக்கள் இன்றளவும் அவர்கள் செய்த ஊழியத்தின் நிமித்தம் 'பாவத்தை விட்டு விலகி' இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கின்றனர். அதற்குரிய பலன் பரலோகத்தில் அவர்களுக்கு நிச்சயம் உண்டு. ஆனால் நாம செய்த பாவங்களை மன்னித்து பாவ விமோசனம் தருகின்ற அதிகாரம் அவங்களுக்கு கிடையவே கிடையாது.

கே 41. சபைப் போதகர்கள், குருமார்கள், பிஷப்புகளுக்கு பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இருக்கா?

போதகர்கள், குருமார்கள், பிஷப்புகள் அவர்களுடைய சரியான போதனைகள், வழி நடத்துதல்கள் மூலமாக நாம் செய்த, செய்கின்ற பாவங்களை நமக்கு உணர்த்துவார்கள். செய்த பாவத்தை உணர வைத்து மனந்திரும்ப வழி நடத்துவார்கள். இனிமேல் பாவம் செய்யாத படிக்கு வேத வசன உபதேசத்தின் மூலம் நம்மைப் பலப்படுத்துவார்கள். ஆனால் நாம் செய்த பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் அவங்களுக்கு கிடையாது. *'மனுஷருடைய*

தப்பிதங்களை (குற்றங்களை, பாவங்களை) நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார்'னு மத் 6:14ல சொல்லியிருக்கிறதை வச்சு குழம்பாதீங்க. அது அடுத்தவங்க நமக்கு செஞ்ச பாவங்களை நாம மனசுல வச்சுக்காம அவைகளை மன்னிச்சுடணும். கோபம், வைராக்கியம், வன்மம், பாராட்டக் கூடாது. பழிக்குப் பழி வாங்கணும்கிற எண்ணம் இருக்கக் கூடாதுங்கிறது தான் இதோட அர்த்தம். நீங்களும் குழம்பாதீங்க. மத்தவங்களையும் குழப்பாதீங்க.

கே 42. இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் பாவமே செய்யாம இருக்க முடியுமா?

முடியும். முடியாததை ஆண்டவர் நமக்கு எப்பவுமே சொல்ல மாட்டாரு. அதுனால தான் அவர் மனுஷனாப் பிறந்து எந்தப் பாவமுமே செய்யாம நமக்கு ஒரு முன் மாதிரியா வாழ்ந்து காட்டியிருக்கிறாரே. நாமும் பாவம் செய்யாம இருக்க முடியும். எப்போ? ஆண்டவரோட புள்ளையா நாம மாறும் போது. ***'தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவருக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியால் பாவம் செய்ய மாட்டான்'***னு 1 யோ 3:9 சொல்லுது. நாம தேவனால பிறக்கணும். அதாவது அவரோட சாயல், குணம், அன்பு, பண்பு, பரிசுத்தம், தாழ்மை, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுதல், பிதாவின் கட்டளைகளுக்கு கீழ்படிதல் எல்லாம் இருக்கணும். ***'அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை'***னு 1யோ 3:6லேயும், ***'அவருக்குள் நிலைத்தருக்கிறேன் என்று சொல்கிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்'***னு 1 யோ 3:6 லேயும் சொல்லப்பட்டு இருக்கே. இயேசுவோட வார்த்தைகளிலே, சத்தியத்திலே, பரிசுத்தத்தில, ஜெபத்தில நாம நிலைச்சு நின்னா நம்மால பாவம் செய்யாம இருக்க முடியும்.

E. பரலோகம், நரகம்

கே 43. சில பிரிவைச் சேர்ந்தவங்க 'நாங்க மட்டும் தான் பரலோகம் போவோம்'னு சொல்றாங்களே.

அவங்க மட்டுமில்ல. இந்த பூமியில இருக்கிற எல்லாருமே பரலோக பிரஜைகளா மாறணும்கிறது தான் ஆண்டவரோட சித்தமும், என் விருப்பமும். ***'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறியவும் அவர் சித்தமுள்ளவராக இருக்கிறார்'***னு 1 தீமோ 2:4 சொல்லுது. ***'எல்லா***

சேர்ந்த ஜனங்களும், ஜாதிகளும், கோத்திரங்களும், பாஷைக்காரரும் அவருடைய சிங்காசனத்துக்கு முன்பாக நின்று (நம்மை) படைத்தவரை ஆராதிக்கும் பாக்கியம் பெற வேண்டும்'ன்னு வெளி 7:9 சொல்லுது. ஆனா யாரு பரலோகம் போவாங்க? '*பரலோகத்தில இருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே அதில் பிரவேசிப்பானே அல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று கூப்பிடுகிறவன் அதில் பிரவேசிப்பது இல்லை*'ன்னு மத் 7:21ம், '*அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள் நான் அவர்களுக்கு மறு உத்தரவு தர மாட்டேன்*' நீ-தி 1:28ம் கூறுகிறது. '*தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவன் என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்*' – 1யோ 2:17. யார் மரண பரியந்தும் உண்மையாய் இருக்கிறார்களோ அவர்களுக்கே ஜீவகிரீடம் கிடைக்கும் – வெளி 2:10. '*ஜெயங் கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவ புத்தகத்திலிருந்து அவனுடைய பெயரை நான் கிறுக்கி) போடாமல் பிதாவின் முன்பாக அவனை நான் அறிக்கை செய்வேன்*'னு ஆண்டவரே சொல்லி இருக்காரே வெளி 3:5ல. இப்போ சொல்லுங்க. அங்க யாரு போவாங்கன்னு. நாங்க மட்டும் தான் பரலோகம் போவோம்னு சொல்றவங்க ஆண்டவரோட சித்தத்தின்படி நடந்தா, மரண பரியந்தும் உண்மையாய் இருந்தா அவங்களும் பரலோகம் போவாங்க. மத்தவங்களும் போவாங்க. இல்லைன்னா இல்லை!

கே 44. ஐசுவரியவான் பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்வது இல்லைன்னா, பணக்காரர்கள் யாருமே பரலோகம் போக முடியாதா?

ஐசுவரியவான் பரலோகத்தை' சுதந்தரித்துக் கொள்வதில்லைன்னு ஏன் சொன்னார்னா அவங்களோட நெனப்பெல்லாம் அவங்களோட செல்வத்தின் மேலயே தான் இருக்கும். அவங்க அதுக்குத் தான் முக்கியத்துவம் கொடுப்பாங்க. அவங்களைப் பொறுத்த வரை 'காசே தான் கடவுள்'. அடுத்து அவங்க இவ்வளவு பெரிய ஐசுவரியத்தை நேர்மையான வழியில சேர்த்து இருப்பாங்கன்னா நெனைக்கிறீங்க? அடுத்தவங்களை ஏமாற்றி, அநியாய வட்டி வாங்கி, ஏழைபாழைங்க வயிற்றில அடிச்சு, லஞ்சம் வாங்கி, அநீதியான முறையில இந்த ஐசுவரியத்தை சேர்த்து இருந்தான்னா அவன் பரலோகம் எப்படிப் போவான்?

அடுத்து அவனோட எண்ணம், கவலை எல்லாமே உலகப்பிரகாரமா, இந்த பூமிக்குரியவைகளின் மேலேயே இருக்கும். '*உலக சிநேகிதம் தேவனுக்கு விரோதமாக இருக்கிறது*'ன்னு யாக் 4:4 சொல்லுதே. '*பூமியில் உள்ளவைகளை அல்ல. மேலானவைகளையே நாடுங்கள்*'னு கொலோ 3:2 லேயும் சொல்லப்பட்டு இருக்கே. இந்த உலகத்தின் சமாச்சாரங்கள், காரியங்கள் எல்லாமே மனுஷனைக் கறைப்படுத்தும். அதுனால தான் '*இந்த உலகத்தால் கறைபடாதபடிக்கு தன்னைக் காத்துக் கொள்ளுகிறதே*

பிதாவாகிய தேவனுக்கு முன்பு மாசில்லாத பக்தியாக இருக்கிறது'ன்னு யாக் 1:27ம் சொல்கிறது. '*நீங்கள் கறையற்றவர்களும், பிழை இல்லாதவர்களுமாய் சமாதானத்தோட அவர் சன்னிதானத்தில் காணும்படி ஜாக்கிரதையாக இருங்கள்*'னு II பேதுரு 3:14லேயும், '*உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் இயேசு கிறிஸ்துவினுடைய வருகையின் போது குற்றமற்றதாக இருக்கும்படி காத்துக் கொள்வீர்களாக*'ன்னு 1 தெச 5:23லேயும் சொல்லப்பட்டு இருக்கே.

நேர்மையான முறையில பணம் சம்பாரிச்சு, சுயநலமா வாழாம, தான தர்மங்கள் செஞ்சு ஏழை எளியவர்களுக்கும் உதவிகள் செஞ்சு, ஆண்டவரோட ஊழியங்களுக்கும் தாராளமா கொடுத்து அவைகளைத் தாங்கி, பணத்தின் மேல பற்று வைக்காம, பரத்தின் மேல பற்று வச்சு இருக்கிற எத்தனையோ பரிசுத்தவான்களும் ஐசுவரியவான்களா இருக்காங்க. அவங்க எல்லாம் பரலோகம் கண்டிப்பா போவாங்க. பொதுவா சொல்லப்பட்டதை ஒரு ரூலா எடுத்துக் கொள்ளக் கூடாது.

கே 45. நரகத்தில் தள்ள இயேசு ஒரு இடி அமின் அல்ல என சிலர் சொல்றாங்களே.

இயேசு கிறிஸ்து ஒரு கொடூரமானவர் இல்லை தான். ஆனா அவர் நீதிபரர் ஆச்சே. அவர் நியாயாதிபதி ஆச்சே. அவர் நீதியுள்ள நியாயாதிபதி ஆச்சே (சங் 7:11). '*அவனவன் செய்த கிரியைகளுக்கு தக்கதாக அவனவனுக்கு பலன் அளிப்பார்*'னு மத் 16:27 சொல்லுதே. '*அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோட கூட வருகிறது*'ன்னு வெளி 22:12ம் கன்பேர்ம் பண்ணுதே. '*கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்*' – எபி 10:30. '*நாமெல்லோரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்போமே*'–ரோம 14:10 எச்சரிக்குதே. '*அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களை சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்*'னு சங் 96:13 லேயும் சொல்லப்பட்டு இருக்கே. தப்பு யார் பண்ணினாலும் தண்டனை உண்டு. ஒருத்தரும் தப்பிக்க முடியாது. '*நீதிமான் பாவஞ்செய்யும் நாளிலே அவன் தன் நீதியினால் பிழைப்பது இல்லை*'ன்னு எசே 33:12ம், 18:24ம் அடிச்சு சொல்லுது. நரகத்தை நாமளே தான் தேடிக்கிடுறோம்.

கே 46. நரகம்னு ஒன்னு இல்லவே இல்லைன்னு சில பேரு சொல்றாங்களே?

இயேசு கிறிஸ்து பொய் சொல்வாரா? அவர் தம்மோட முதல் பிரசங்கத்திலேயும் (மத் 5:29,30), கடைசிப் பிரசங்கத்திலேயும் (மத் 23:33), நரகத்தை குறிச்சு எச்சரித்திருக்காரு. அவர் நரகம், நியாயத் தீர்ப்பைக் குறிச்சு 56 தடவை

பேசியிருக்காரு. வெளிப்படுத்தின விசேஷம் 404 வசனங்களிலே 191 வசனங்கள் நரகத்தைக் குறிச்சும், நியாயத் தீர்ப்பைக் குறிச்சும் சொல்லுது. ஆக்கினை (2 பேதுரு 2:9,10), அக்கினியின் ஆக்கினை (யூதா 7), எரி நரகம் (மத் 5:22), பாதாளம் (மத் 16:18, வெளி 1:18), நரஹாக்கினை (லூக் 16:24), அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல் (வெளி 21:8), நித்திய அக்கினி (மத் 25:41), நித்திய ஆக்கினை (மத் 25:46), நரகம் (சங் 9:17). (2 பேதுரு 2:4) (யோபு 26:6, உபா 32:22), அக்கினிக்கடல் (வெளி 20:15), அக்கினி சூளை (மத் 13:41–43). இப்படி எத்தனையோ வார்த்தைகளால் நரகம் பற்றி வேதத்தில் சொல்லப்பட்டு இருக்கு.

ஆண்டவர் பல பரிசுத்தவான்களை நரகத்துக்கே கூட்டிக் கொண்டு காட்டியிருக்கிறார். என்னோட புத்தகமான **'பாவத்தின் சம்பளம் நரகம்'**கிற புத்தகத்தை வாங்கிப் படிச்சுப் பாருங்க. பத்து ரூபாய் தான் விலை + தபால் செலவு ஒரு ரூபாய். பல வேத வசன ஆதாரங்களோட எழுதியிருக்கேன். அதைப் படிச்சாப் பிறகும் நம்பலைன்னா, அவங்க நரகத்துக்கு போயே தெரிஞ்சுக்கிடட்டும்.

கே 47. பெந்தகோஸ்தே சபையை சேராத மற்ற பிரிவுக்காரங்க பரலோகம் போக மாட்டாங்களா?

இந்த RC, CSI, ECI, AG, ACA, TPM, TELC, அட்வெண்ட், செவன்த்டே அட்வெண்டிஸ்டு, மெத்தடிஸ்டு, ஆங்கலிக்கன், சிரியன், மார்த்தோமா இப்படி இன்னும் எத்தனையோ சொல்லி மாளாத பிரிவுகள் இருக்கு. இதெல்லாம் மனுஷங்க உண்டாக்கினது. தேவன் உண்டாக்கலை. எந்தப் பிரிவை சேர்ந்தவங்களா இருந்தாலும் சரி, ஆண்டவருக்குப் பயந்து. அவரோட கட்டளைகளுக்கு கீழ்படிஞ்சு, உண்மையோட, உத்தமத்தோட, நீதியோட நடக்கணும். நாம மேல போற சமயத்தில நீ RCயா, CSI யா, TPMம்மான்னு ஆண்டவர் கேக்க மாட்டாரு. ***'சத்தியத்தை அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலை ஆக்கும்*** (யோ 8:32). ***'நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு திருவசனத்தைக் கேட்பவர்களாக மாத்திரமல்ல. அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்'***னு யாக் 1:22 சொல்லுது. திருவசனம் 'பாவ மன்னிப்புக்கென்று' முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கச் சொல்லுது. எடுத்திருக்கோமா? ***'பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோகத்தில் பிரவேசிப்பான்'***னு மத் 7:21ம் சொல்லுது. இப்போ யார் பரலோகம் போவாங்கன்னு தெரியுதா?

கே 48. திருமணம் ஆனவங்க பரலோகம் போக மாட்டாங்க. மறுரூபம் ஆக்கப்பட மாட்டாங்கன்னு சில பேரு சொல்றாங்களே. அது உண்மையா?

திருமணம் ஆனவங்க பரலோகம் போக முடியாதுன்னு வேதத்தில எங்கயுமே சொல்லப்படலை. அப்படி பரலோகம் போக முடியாதுன்னா ஆண்டவர்

ஆதாமுக்கு ஒரு ஏவாளையே படைச்சு கொடுத்து இருக்க மாட்டாரே. மனுஷன் தனியா இருப்பது நல்லதல்ல என்று தானே அவனுக்கு ஒரு துணையை ஏற்படுத்திக் கொடுத்து பலுகிப் பெருகுங்கன்னு சொன்னாரு (ஆதி 1:28). திருமணம் ஆகாம எப்படி குழந்தைகளைப் பெத்துக்கிட முடியும்? எப்படிப் பலுகிப் பெருக முடியும்?

ஏனோக்கு திருமணம் ஆனவன். குழந்தை குட்டிகளைப் பெற்றவன். அவன் மரணத்தைக் காணாமல் உயிரோடு எடுத்துக் கொள்ளப்பட்டானே. திருமணமான மோசே எடுத்துக் கொள்ளப்பட்டு மறுரூப மலையில இயேசுவோட இருந்ததை ஜனங்கள் கண்டார்களே. ஆதி அப்போஸ்தலர்கள் எல்லோருமே திருமணம் ஆனவங்க தானே. ***'கடைசி எக்காளம் தொனிக்கும்... மரித்தோர் அழிவில்லாதவர்களாக எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபம் ஆக்கப்படுவோம்'***னு தான் 1 கொரி 15:51,52ல சொல்லப்பட்டு இருக்கே ஒழிய திருமணம் ஆகாதவங்க மட்டும் தான் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்னு ஒண்ணும் எழுதப்படலையே. திருமணம் வேண்டாம்னு சொல்லி ஒதுக்கி, பரிசுத்தமா வாழ்ந்து ஆண்டவருக்காகவே தங்களுடைய வாழ்க்கை முழுமையையும் ஒப்புக் கொடுத்து ஊழியம் செய்கிற பரிசுத்தவான்கள், கன்னியாஸ்திரிகள், TPM, கிருபாசனம் சிஸ்டர்களை உண்மையிலேயே பாராட்ட வேண்டும். அதுக்காக மத்தவங்க பரலோகம் போக மாட்டாங்கன்னு சொல்றது வேதத்தின் பிரகாரம் ஏற்புடையது அல்லவே.

கே 49. நான் பரலோகம் கண்டிப்பா போகணும். அதுக்கு நான் என்ன செய்யணும்?

முதல்ல இரட்சிக்கப்படணும். இரட்சிக்கப்பட உள்ளத்தில் இயேசு கிறிஸ்துவை பெற்றுக் கொண்டு, முழுகி ஞானஸ்நானம் எடுக்கணும். ***'ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவா விட்டால் அவன் பரலோகத்தில் பிரவேசிப்பது இல்லை'***ன்னு யோ 3:5 சொல்லுது. இரண்டாவது நீங்க மனந்திரும்பி குழந்தைகளைப் போல மாறணும் (மத் 10:3). சுபாவத்தில, விசுவாசிக்கிறதில, குணத்தில, பாவம் செய்யாம இருக்கிறதுல குழந்தைகளைப் போல மாறணும். மூன்றாவது பிதாவின் சித்தத்தை அறிந்து அதன்படி நடக்கணும் (மத் 7:21). அடுத்து மரண பரியந்தம் உண்மையா இருக்கணும். அப்பொழுது ஜீவ கிரீடம் அளிக்கப்படும் (வெளி 2:10). அப்புறம் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய் சமாதானத்தோடே அவர் சன்னிதானத்தில காணப்படணும் –II பேதுரு 3:14. அதோட உங்க ஆவி, ஆத்துமா, சரீரம் எல்லாமுமே குற்றமற்றதாக இருக்கணும் – 1 தெச 5:23. அப்படி இருந்தா கண்டிப்பா நீங்க பரலோகத்தில இருப்பீங்க. டவுட்டே வேண்டாம்.

F. ஊழியம்

கே 50. நான் ஊழியம் செய்ய விரும்புகிறேன். அழைப்பு இருந்தாத் தான் செய்யணும்னு சிலர் சொல்றாங்களே.

இப்படி சிலர் பேர் சொல்லி ஊழியம் செய்ய விரும்புகிறவர்களையும் போக விடாம தடுக்கிறதுனால தான் **'அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்'**னு நம் ஆண்டவரே புலம்பும்படி ஆச்சு. ***'ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டால் ஒழிய ஒருவனும் இந்த கனமான ஊழியத்துக்கு தானாய் ஏற்படுகிறதில்லை'***ன்னு எபி 5:4ல சொல்லப்பட்டதின் அர்த்தம், சந்தர்ப்பமே வேறே. 1. இது பொதுவான ஆசாரியப் பணியைப் பற்றியது அல்ல. 2. இது பிரதான ஆசாரியனாக நியமிக்கப்படுகிறதுக்கு மாத்திரமே. 3. அது மாத்திரமல்ல, புதிய உடன்படிக்கையின்படி இப்போ நாம எல்லாருமே ஆசாரியர்கள் தான் – அதுவும் சாதாரண ஆசாரியர்கள் அல்ல, ராஜரீக ஆசாரியக் கூட்டமாக ஆண்டவர் நம்மைத் தெரிந்து கொண்டு இருக்கிறார் – (1 பேதுரு 29) 4. நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆரோனின் வரிசையில் அல்ல, மெல்கிசேதேக்கின் வரிசையில வந்தவர் (எபி 7:11–13). அவர் யூதா கோத்திரத்தில வந்தவரு. யூதா கோத்திரத்தைக் குறிச்சு மோசே எதுவுமே சொல்லலை (வசனம் 14). அதுனால ஊழியத்துக்கு போறதுக்கு தடையா எபி 5:4ஐ சொல்றது சரியல்ல.

மோசேயைப் போல, பவுலைப் போல நாம அழைக்கப்படணும்னு காத்திருந்தா நாம ஏமாந்து தான் போவோம். அவங்க யூத சமுதாயத்துக்கும், கிறிஸ்தவ சபைக்கும் ஸ்டிராங்கான பவுண்டேஷன் போடுகிறதில – முக்கியமான பங்கு வகிக்கிறதுக்காக அழைக்கப்பட்டவங்க. இப்போ நாம இருக்கிற காலம் கடைசிக்காலம் – பதினோராம்மணி வேளை. ஒருத்தரும் எங்களுக்கு வேலை எதுவும் கொடுக்கலையேன்னு சாக்குப் போக்கு சொல்லிக்கிட்டு இருந்தா ***'நீங்க பகல் முழுக்க இங்க சும்மா நிக்கிறது என்னன்னு ஆண்டவர் நம்மைக் கேட்பாரு'. ஜாக்கிரதை*** (மத் 20:1–7).

எங்கடா வேலை கிடைக்கும்னு ஆயிரத்தெட்டு இடத்துக்கு அப்ளிகேஷன் போடுறோம். எந்த வாசல் திறந்திருக்குன்னு படிபடியா ஏறி இறங்குகிறோம். அதே மாதிரி ஆண்டவரோட ஊழியத்துக்கு நாம செய்யக் கூடாதா? எத்தனையோ கிறிஸ்தவங்க இன்னிக்கு வேலை இல்லாம இருக்காங்க. இல்லைன்னா படிச்ச படிப்பு, அனுபவத்துக்கு ஏற்ற வேலை, சம்பளம் இல்லாம புலம்பிக்கிட்டு வேலை பாக்குறாங்க. இங்கேயோ போதுமான ஆட்கள் இல்லாம ஆண்டவரோட ஊழியம் முடங்கிக் கிடக்கிறதைப் பத்தி கவலையில்லை (மத் 9:37).

'ஆண்டவரே என்னை அழையும்'னு ஜெபிக்காதீங்க. 'என்னை அனுப்பும்'னு ஜெபியுங்க (மத் 9:38). *'யாரை நான் அனுப்புவேன்? யார் நமது காரியமாகப் போவான்?'* என்கிற (ஏசா 6:8) 'பொதுவான' அழைப்புக்கு, ஏசாயா 'தனிப்பட்ட' பதில் கொடுத்து முன்வந்து 'இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்'னு சொன்னான். அதுக்கப்புறந்தான் ஆண்டவர் அவனைப்பார்த்து 'நீ போ' என்றார். ஆண்டவரோட ஊழியத்தை செய்ய ஆர்வமா நாம முன்னாடி வரும் போது தான் ஆண்டவரும் நம்மை அனுப்புவாரு.

அழைக்கப்பட்டோர் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ வெகு சிலர் (மத் 20:16; 22:14) என்று திராட்சைத் தோட்ட உவமையிலும், கல்யாண விருந்து உவமையிலும் ஆண்டவர் சொன்னாரு. தேவ அழைப்புக்கு சரியா பதில் கொடுக்கணும். தேவ அழைப்புக்கு கீழ்படிவோரே 'தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்!' அன்னாள் தனக்கு குழந்தையைக் கொடுத்தா அதை அவருடைய பணிக்கே கொடுப்பதாக ஒப்புக் கொடுத்தாள். கர்த்தர் அவளின் இருதய வாஞ்சையைப் பார்த்து அதன்படி சாமுவேலைக் கொடுத்து, அவனை ஒரு பெரிய தீர்க்கதரிசியாகவே உண்டாக்கினாரு. பிள்ளைகளை டாக்டராக்கணும், இஞ்சினியராக்கணும்னு சொல்லி சின்ன வயசில இருந்தே ஊக்குவித்து புள்ளைகளை வளர்க்கிற பெற்றோர்கள் ஆண்டவரோட ஊழியத்திற்கென்று அன்னாளைப் போல ஒப்புக் கொடுத்து வளர்த்தா கண்டிப்பா அவர்களையும் ஆண்டவர் ஏற்றுக் கொண்டு ஆசீர்வதித்து வல்லமையாக எடுத்துப் பயன்படுத்துவார்.

நான் அழைக்காம என் ஊழியத்துக்கு நீ எதுக்கு வந்தேன்னு ஆண்டவர் இதுவரைக்கும் யாரையாவது கேட்டு இருக்காரா? அவர் கூப்பிட்டும் வராம இருக்கிறவங்க தான் இன்னிக்கு அதிகமா இருக்காங்க. இது விஷயமா எல்லார்கிட்டேயும் போயி ஆலோசனை கேட்டுக்கிட்டு இருக்க வேண்டாம். 'நீங்க சண்டே அன்னிக்கு எங்கேயும் போகாதீங்க. சபைக்கு வாறும், சபை கூடிவருதலை விட்டு விடாதீங்க. அதுதான் உங்களுக்கு ஆசீர்வாதம். நீ உலகத்தை ஆதாயப்படுத்தினாலும் உன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அதனால் உனக்கு என்ன லாபம்? திருவிருந்து எடுக்க சபைக்கு வாறும்' என்றெல்லாம் சொல்லி நீங்கள் ஊழியத்துக்கு போகாதபடிக்கு தடுப்பார்கள். என்ன சில சபை மூத்தவர்களும், தீர்க்கதரிசிகளும் கூட உங்களை வழி விலகிப் போகும்படி செய்து விட முடியும் (கலா 1:16, அப் 21:8-14).

இயேசுவை சொந்த இரட்சகராக பெற்றுக் கொண்ட ஒவ்வொரு கிறிஸ்தவர்களுமே ஆண்டவரோட ஊழியத்தை செய்யணும். இரட்சிப்பு கர்த்தரோடது. ஊழியம் அவரோடது. நாம அவரோட புள்ளைங்க. அப்போ ஊழியம் நம்மோடது. உரிமையோட எடுத்து செய்யணும். அப்போ *'உன்னை அனுப்புகிறவன் நானல்லவா? உனக்கிருக்கும் பெலத்தோட நீ போ'* என்று ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பார். *'நீ கொஞ்சத்திலே உண்மையாக இருந்தாய். உன்னை அநேகத்திற்கு அதிகாரியாக வைப்பேன்'* என்று ஊழியத்தின் பாதையில் உயர்த்துவார் (மத் 25:21).

கே 51. நான் வேலை பார்த்துக்கிட்டே ஊழியம் செய்யலாமா?

இரட்சிக்கப்பட்ட, அபிஷேகம் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனுமே ஆண்டவருக்கு ஊழியம் செய்யணும் (எபே 3:8; ஏசாயா 61:1). சபை, போதக ஊழியம் இதுக்கு மட்டும் தான் விசேஷித்த அழைப்பு, ஆர்டினேஷன் எல்லாம் தேவை. மத்தப்படி சுவிசேஷத்தை அறிவிக்க, ஆத்தும ஆதாயம் செய்ய, ஆண்டவர் செய்த நன்மைகளை சாட்சியா புற ஜாதி மக்களிடம் சொல்ல, டிராக்ஸ் கொடுக்க, சபைக்கு புதிய ஆத்துமாக்களை அழைத்து வருதல், விசுவாசத்தில் பலப்படுத்தல், கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும்படியாய் *'கர்த்தர் கட்டளையிட்டவைகளையும் அவர்கள் கைக்கொள்ளும்படிக்கு உபதேசம் பண்ண'* (மத் 28:20) எந்த விசேஷித்த அழைப்பும், ஆர்டினேஷனும் தேவையில்லை. இது ஒவ்வொரு கிறிஸ்தவன் மேலும் இருக்கக்கூடிய தலையாய கடமை (1கொரி 9:16).

*'நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். நீ கனி கொடுக்கும்படிக்கும், அந்தக் கனி நிலைத்திருக்கும் படிக்கும் உன்னை ஏற்படுத்தினேன்'*னு யோ 15:16ல சொல்லப்பட்டு இருக்கே. *'நீங்கள் இந்த உலகத்துக்கு வெளிச்சமாக இருக்கிறீர்கள்'* – மத் 5:14. இருளில் வாழும் ஒரு கூட்ட மக்களை வெளிச்சத்திற்கு கொண்டு வர ஆண்டவர் உங்களை இந்த உலகத்துக்கே வெளிச்சமா வச்சிருக்காரு. *'நீ தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம்'* – அப் 9:15. *'அவர் செய்த புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி நீ'* – 1பேதுரு 2:9.

முழு நேர ஊழிய அழைப்பு இருந்தா வேலையை உதறிட்டு ஊழியம் செய்யுங்க. இல்லைன்னா ஆபீஸுக்கு போகும் போது, வரும் போது, பஸ்ஸில, டிரெயின்ல, மார்கெட்டில, டிராக்ஸ் ஊழியம் செய்யுங்க. ஹாலிடேஸ்ல கிராம ஊழியம், இளைஞர்கள் மத்தியில ஊழியம், ஆஸ்பத்திரி ஊழியம்னு செய்யுங்க. *'மனம் திரும்புகின்ற ஒரே ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்'*– லூக்கா 15:7.

கே 52. எனக்கு வயசாயிடுச்சு. என்னால ஓடியாடி எல்லாம் வேலை செய்ய முடியாது. நான் என்ன செய்யலாம்?

ஊழியம் செய்யுறதுக்கு வயசே கிடையாது. வாஞ்சை தான் வேணும். தெருத்தெருவா, கிராமம் கிராமமா போயி சுவிசேஷத்தை சொன்னாத் தான் ஊழியம்கிறது இல்லை. உங்க குடும்பம், இனத்தார், ஜனத்தார், உங்க தெருவில உள்ளவங்க, தெரிஞ்சவங்க, சபை, சபை போதகர், சபை மக்கள், மிஷனெரிகள், ஊழியக்காரர்கள், உங்க ஊரு, தேசம், அரசு அதிகாரிகள் என இப்படி எத்தனையோ பேர்களுக்காக நல்ல பாரத்தோட நீங்க வீட்டில இருந்துக்கிட்டே ஜெபிக்கலாமே. அது எவ்வளவு பெரிய ஊழியம் தெரியுமா? உங்க வீட்டு பேரப் பிள்ளைங்க, அக்கம்பக்கத்தில இருக்கிற குழந்தைகளுக்கு நல்ல வேதம் சார்ந்த நீதி மொழிக் கதைகளை சொல்லலாம். VBS மாதிரி வீட்டிலேயே நடத்தலாம்.

இலவசமா டியூஷன் சொல்லிக் கொடுக்கும் போதே இயேசுவைப் பத்தி பிள்ளைகளுக்கு சொல்லலாம்.

சென்னை KK நகர் ACA சபையைச் சேர்ந்த 75 வயதான சகோதரி மிஸஸ். பவுலின் ஜார்ஜ் இந்த வயசிலேயும் பாஸ்டர் சாம் சுந்தரத்தின் செய்திகளை மொழி பெயர்த்து எழுதிக் கொடுக்குறாங்க. விடுதலைத் தூதன் மேகசீனுக்கு பாஸ்டர் சொன்ன செய்திகளை எழுதி, புரூப் ரீடிங், கரெக்ஷன்ஸ் எல்லாமே செஞ்சு ACA சபை ரிட்டயர்ச்சர் மினிஸ்டிரிக்கு பெரிய உதவியா இருக்கிறாங்க. ஒரு நிமிஷம் கூட ஓய்வு இல்லாத அவங்க என்னோட இங்கிலீஷ் சாட்சி புக்கான 'My Cry and Joyful New Life'ன் மறு பதிப்பை வரிக்கு வரி படிச்சு, கரெக்ஷன்ஸ் பண்ணி, கமா, புல்ஸ்டாப், கொட்டேஷன் மார்க் முதற் கொண்டு தரோவா செக் பண்ணி, பல அறிவுரைகளையும் எழுதி, காலதாமதம் இல்லாம எனக்கு உடனே கொரியரில் அனுப்பி வச்சாங்க. அவங்க வயசுக்கு வீறு ஊழியம் செய்ய ஆண்டவர் பெலனை அவர்களுக்கு தருகிறார். அதுபோல நீங்களும் ஆண்டவருக்கு, சபைக்கு ஏதாவது ஊழியம் செய்யுங்க. ஆண்டவர் உங்களுக்கும் அப்பேர்ப்பட்ட பெலனைத் தருவாரு.

எனக்கு 2010 ஜூன்ல 67 வயசு முடியப் போகுது. மாசத்தில 25 நாள் ஆண்டவருடைய ஊழியத்துக்காக ஓடிக்கிட்டு இருக்கிறேன். என் கால் படாத ஊர் கிடையாது. பல ஊர்த் தண்ணீர், பயணம், சீதோஷ்ண மாற்றம், ஒரே நாளில் 4,5 சபைகளிலே செய்தி, டிரெயினுக்கு பிளாட்பாரத்தில காத்திருக்கிற கொஞ்ச நேரத்தில கூட உட்கார்ந்து எழுதுகிறேன்.

எவ்வளவோ எதிர்ப்புகள், மிரட்டல்கள், நான் எதைப் பத்தியும் கவலைப்படாம ஓடுறேன். வாழ்ந்தா ஆண்டவருக்காக வாழ்வோம். சாகிறதா இருந்தாலும் ஆண்டவருக்காகவே சாவோம்கிற வைராக்கியத்தில ஓடுறேன். ஆண்டவர் என் வாஞ்சையைப் பார்த்திட்டு எனக்கு திறந்த வாசலைக் கொடுத்திருக்கிறார். இதை என் பெருமைக்காக எழுதலை. நான் ஜீரோ. ஆண்டவர் தான் ஹீரோ! '***எனக்கு ஒருவன் ஊழியம் செய்வானாகில் பிதாவானவர் அவர்களைக் கனம் பண்ணுவார்***'னு இயேசு சொல்லியிருக்காரே (யோ 12:26). '***நீங்கள் எவ்விதத்திலும் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்திற்கு பாத்திரமாக நடந்து கொள்ளுங்கள்***' –பிலி 1:27. செய்யுங்க. பிதா உங்களையும் கனம் பண்ணுவார்.

கே 53. மிஷனெரி ஊழியங்களை நான் தனிப்பட்ட முறையில காணிக்கையினால தாங்கலாமா?

நீங்க போற திருச்சபையில மிஷனெரி ஃபண்டுன்னு வாங்கி 'உண்மையிலேயே அவங்களை சப்போர்ட் பண்றாங்க'ன்னா உங்க சபை மூலமாகவே இதைச் செய்யுங்க. அப்படி ஒரு சிஸ்டம் உங்க சபையில இல்லேன்னா, நீங்க தனிப்பட்ட முறையிலே இதைச் செய்யுறதில தப்பே கிடையாது. உண்மையைச் சொல்லப் போனா கிறிஸ்துவினுடைய நாமம் அறிவிக்கப்படாத, எதிர்ப்புகள் உள்ள,

சாதகமான எந்த சூழ்நிலையுமே இல்லாத இடங்களுக்கு போயி தன் குடும்பம், மனைவி, பிள்ளைக்குட்டிகள் எல்லாரையும் விட்டுட்டு தனியாப் போயி மிஷனெரி ஊழியம் பண்றவங்களை ஒவ்வொரு திருச்சபையுமே, கிறிஸ்தவர்களாகிய நாம ஒவ்வொருவருமே நம்முடைய அளவுக்கு மீறியே சப்போர்ட் பண்ணணும்.

ஆவடி ACA பாஸ்டர் தாமஸ்ராஜ் அவர்கள் சபையில வரக்கூடிய மொத்த காணிக்கையில 80% மிஷனெரி சப்போர்ட்டுக்கு போகுது. மீதி 20% சபை மெயிண்ட்டனென்ஸ் (எலெக்ரிசிட்டி போன்ற செலவுகள்) போகுது. அவர் ஒரு பைசா கூட சபையில இருந்து தன் சொந்த செலவுக்குன்னு எடுத்துக்கிறது கிடையாது. இப்படிப்பட்ட உத்தம ஊழியக்காரர்களும் இருக்குறாங்க. கர்த்தர் இது போன்ற உண்மையுள்ள உத்தம ஊழியக்காரர்களை எழுப்பணும். கர்த்தர் அவரையும், அவரைப் போன்றவர்களையும் அவர்களின் ஊழியங்களையும் அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக!

கே 54. நான் ஒரு ஊழியக்காரன், திருவிருந்து எடுக்க நான் திருமுழுக்கு எடுத்த சபைக்கு போக முடியாதபடிக்கு வெளியூரில இருப்பேன். ஊழியம் செய்யும் சபையிலேயே நான் பந்தி எடுக்கலாமா?

தாராளமா எடுக்கலாம். முடிஞ்ச மட்டும் எங்கே ஞானஸ்நானம் எடுத்தீர்களோ அங்கேயே திருவிருந்து எடுக்கப் பாருங்க. முடியாத பட்சத்தில எந்த சபையில ஊழியம் செய்யுறீங்களோ அங்கேயே திருவிருந்து எடுங்க. தப்பே கிடையாது. இது தேவனோடு அவர் வருகை மட்டும் அவரை நினைவு கூறும்படி அவரோடு செய்து கொள்ளுகின்ற ஒரு உடன்படிக்கை. அதை உண்மையோடு, உத்தமத்தோட, பயத்தோட செய்யுங்க. அபாத்திரமில்லாம செய்யுங்க. உங்களையே நீங்க நிதானித்து அறிந்து சோதித்துப் பார்த்து உங்களுக்காக பிய்க்கப்படுகிற இயேசு கிறிஸ்துவின் சரீரமாகவும், உங்களுக்காக சிந்தப்படுகிற திருஇரத்தமாகவும் நினைச்சு, பய பக்தியோட அப்பம் பிட்டுக் கொள்ளுங்கள். ***'கர்த்தர் உங்களின் இருதயத்தின் உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகிற தேவனாக இருக்கிறார்'*** (எரே 20:12). ***'கர்த்தரோ உன் இருதயத்தைப் பார்க்கிறார்'*** (1சாமு 16:7). அப்பழுக்கில்லாம, அபாத்திரமாய் இல்லாம அப்பம் பிட்டுங்கோங்க. ஆசீர்வாதம் கிடைக்கும்.

கே 55. ஆதிகாலத்தில நடந்த அற்புதங்கள் இன்னிக்கு நடக்க மாட்டேங்குதே. ஏன்?

முழுமையா எல்லா இடத்திலேயும் அப்போ நடந்த மாதிரி அற்புதங்கள் இப்போ நடக்குதுன்னு சொல்ல முடியாது தான். எதுவும் நடக்கலைன்னும் சொல்ல முடியாது. நடக்குது. ஆங்காங்கே சில இடங்களிலே சிலரைக் கொண்டு இப்பவும் பல அற்புதங்கள் நடக்கத்தான் செய்யுது. ஆதி காலத்தில் கொஞ்ச

பேரால நெறைய அற்புதங்கள் நடந்துச்சு. இப்போ நெறைய பேரால கொஞ்சம் அற்புதங்கள் நடக்குது. அற்புதங்களை செய்கிறவர் கர்த்தர்.

அப்போ நடந்த அற்புதங்களை அப்போஸ்தலர்கள் எழுதிவச்சாங்க. அவைகளை ஆவியானவர் ***'தேவ ஆவியினால் அருளிச் செய்தார்'*** (II தீமோ 3:16). அவைகள பரிசுத்த வேதாகமமாக இந்த உலகத்திலுள்ள அதிகமான மொழிகளிலே அதிகமான பிரதிகள் வெளிவந்து மிக அதிகமானவர்களால் வாசிக்கப்படுகிறது. பிரசிங்கிக்கவும்படுகிறது. தற்போது ஆங்காங்கே நடக்கும் பல அற்புதங்களை உலகம் முழுக்க எடுத்து சொல்வார் யாருமில்லை.

எனக்கும், என் குடும்பத்துக்கும் ஆண்டவர் செய்த நன்மைகளை, புண்ணியங்களை நான் உலகம் முழுக்க சொல்லணும் ஆண்டவரேன்னு கண்ணீரோடு கேட்டேன். எனது சாட்சியை **'என் அழுகையும் ஆனந்த புது வாழ்வும்'** என்று புத்தகமாக எழுதி வெளியிட தேவன் கிருபை பாராட்டினார். இன்றைய தேதியில் (ஜூன் 2010) தமிழில் மட்டுமே 2 லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்கப்பட்டுள்ளன. ஆங்கிலம், கன்னடம், மலையாளம், தெலுங்கு என பல மொழிகளில் பல ஆயிரம் புத்தகங்கள் விற்கப்பட்டு விட்டன. எனது முழு சாட்சியை VCDயாக தமிழில் வெளிட கர்த்தர் கிருபை பாராட்டினார். இன்று வரை அது 1,60,000 பிரதிகள் விற்கப்பட்டு விட்டன.

இவ்வளவு அதிக எண்ணிக்கையில் புத்தகங்களும், VCDயும் விற்கப்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் நான் எந்த லாப நோக்கத்தோடும் இன்றி பத்து ரூபாய்க்கே இவைகளை வெளியிட்டதுதான். அதுனால புக்கை படிச்சவங்க, VCDயை பார்த்தவங்க நூற்றுக்கணக்கில் இவைகளை வாங்கி மற்றவர்களுக்கு சுவிஷேத்தை அறிவிக்க பயன்படுத்துகின்றனர். தேவன் நம் நோக்கத்தை பார்க்கிறார். நோக்கம் நல்லபடியாக இருந்தால் அதை அவர் ஆசீர்வதிக்கிறார்.

அன்று அப்போஸ்தலர்களின் நிழல்கள் பட்டே தீராத நோய்கள் எல்லாம் தீர்ந்தன. மரித்தோர் உயிரோடு எழுந்தனர். ஒரே ஒரு பொய் சொன்னவுடனேயே அனனியாவும், சப்பீராளும் செத்து விழுந்தாங்க. செங்கடல் பிளந்தது. யோர்தான் நதி விலகி வழிவிட்டது. எரிகோ் கோட்டை தகர்ந்தது. எலியா ஜெபித்தவுடன் அக்கினி இறங்கி பட்சித்தது. அப்படிப்பட்ட அற்புதங்கள் இன்னிக்கு நடக்கலை தான். அன்றைய அப்போஸ்தலர்கள் ஃபயரா இருந்தாங்க. இன்றைய ஊழியக்காரங்கள் அவங்க மாதிரி அனலா இல்லையே. இன்றைய கூட்டங்களுக்கு விளம்பரங்களும், ஆர்ப்பாட்டங்களும், வால் போஸ்டர்களும், பிளக்ஸ் போர்டுகளும், பெரிய மேடைகளும், காது ஜவ்வுகளை பிய்க்கும் பெரிய லவுடு ஸ்பீக்கர்களும், இராட்சஷ மின் விளக்குகளும் தான் அதிகம் இருக்கின்றன. அங்கே ஆவி இல்லையே. பூரண சுத்த சுவிசேஷத்தை இன்னிக்கு யாரும் செய்தியா, சுவிசேஷமா பிரசிங்கிக்கிறது இல்லையே (1 கொரி 15:1–5). அதுனால அற்புத அடையாயங்களின் மூலமா ஆவியானவர் வெளிப்படுகிறதுமில்லை (மாற்கு 6:20, ரோமர் 10:8–10).

ஊழியக்காரர்களுக்காக **'என் ஊழியக்காரனே..!?'** என்ற ஒரு நூலை எழுதும்படி கர்த்தர் தாமே வார்த்தைகளைக் கொடுத்தார். அதை படித்துப்பாருங்கள். என்ன குறை, எங்கே இருக்கிறது என்று தெரியும். அந்த புக்கும் பத்து ரூபாய் மட்டுமே.

கே 56. சிலருக்கு அற்புதம் நடக்குது. சிலருக்கு நடக்க மாட்டேங்குது. ஏன்?

இயேசுவை பெற்றுக் கொண்டவர்கள் (அதாவது ஏற்றுக் கொண்டவர்கள்) அத்தனை பேருமே ஆண்டவரோட, பிதாவோட பிள்ளைகள் தான் – யோ 1:12. ***'அவரிடம் எவ்வித மாறுபாடும், பட்சபாதமும், வேற்றுமையின் நிழலும் கிடையாது'***ன்னு யாக் 1:17 சொல்றது. ஆனா சிலருக்கு நடக்குது. சிலருக்கு அற்புதம் நடக்க மாட்டேங்குதுன்னா குறை ஆண்டவர்கிட்ட இல்லை. நம்ம கிட்ட தான் இருக்கு. இல்லையா? பால்காரன் வீட்ல பால் கொண்டு வந்து ஊத்துறான். நீங்க ஒரு பாத்திரத்துல பால் வாங்கிட்டு போய் அடுப்புல வைக்கிறீங்க. பால் கெட்டுப் போகுது. ஏன்? குறை பாலில் இல்லை. குறை பாத்திரத்தில. பாத்திரம் சுத்தமா இல்லை. சரியா கழுவப்படலை. பாத்திரம் அபாத்திரமா இருந்தது. அதுதான் காரணம்.

முதல்ல நம்மகிட்ட என்ன குறை இருக்குன்னு பாருங்க. உங்களையே நீங்கள் நிதானித்து அறியுங்கள். உங்கள் வழிகளை சீர்தூக்கிப் பாருங்கள். (ஆகாய் 1:5). உங்களை சுத்திகரியுங்கள் (ஏசாயா 52:11). பரிசுத்தப்படுத்துங்கள். தகுதிப்படுத்திக் கொள்ளுங்கள். வேதத்தைப் படிச்சுப் பாருங்க. ஒவ்வொரு அற்புதங்களுக்கு முன்னாடியும் பின்னாடியும் கண்டிஷன்ஸ் இருக்கு. அதன்படி நடங்க. உங்க ஜெபத்துக்கும் பதில் கிடைக்கும்.

கே 57. பரிசுத்தவான்களில் பலர் அகால மரணம் அடைகின்றனரே. இல்லையேல் வியாதியில் கஷ்ப்படுகின்றனரே. ஏன்?

பிசாசு எப்பவுமே பரிசுத்தவான்கள், போதகர்கள், ஊழியக்காரர்கள் மேல தான் கோபமா, குறியா, எரிச்சலா இருப்பான். எப்படா சான்ஸ் கிடைக்கும். இவங்களை காலை வாரலாம்னு சுத்தி சுத்தி வருவான். அவங்களை உங்க ஜெபத்தில நீங்க தாங்கணும். ஆயிரம் விசுவாசிகளை விழச் செய்கிறதைக் காட்டிலும், ஒரு ஊழியக்காரனை விழப்பண்றதுல தான் சாத்தான் குறியா இருப்பான் (யோபு 1:8, 2:3 ; சகரியா 3:1). அவங்களுக்கு சோதனைகளும், வேதனைகளும் அதிகமாகவே இருக்கும். ஏன்னா சாத்தானின் கோட்டையை அவங்க அசைக்கிறாங்களே.

அதுவுமில்லாம சில பரிசுத்தவான்கள் அளவுக்கு மீறிய வேலை, அலைச்சல், பொறுப்புகளினால் உடல் நலத்தை சரியாக, கவனமாக பேணுவதற்கு மறந்து விடுகின்றனர். வேளை கெட்ட வேளையில சாப்பிடுகிறது, சரியான போதுமான தூக்கம் இல்லாமை, ஒய்வு இல்லாமை, விசுவாசிங்க பிரியமா கொடுக்குறாங்களேன்னு அவங்க கொடுக்கிறதை எல்லாம் முழுங்கி

வைக்கிறது. இவை எல்லாமே உடம்புக்கு கெடுதல் தான். இந்த சரீரம் கர்த்தருக்குரியது. இந்த உடம்பு தேவனுடைய தேவாலயம். அதை ஒரு கோயிலைப் போல பராமரிக்கணும்னு ஊருக்கு உபதேசம் பண்றவங்க, அதைத் தானும் கடைப்பிடிக்கணும். இல்லையா?

அடுத்து பரிசுத்தவான்கள் தப்பு பண்ணினாலும், கீழ்படியாது போனாலும் அவர் தண்டிப்பார். தன்னைத் தானே உயர்த்தினாலும் தேவன் கோபம் கொள்வார். அவர் எரிச்சலுள்ள தேவன் (உபா 4:24, ஏசா 42:8). பரிசுத்தவான்களிடம் ஆண்டவர் அதிகமான பரிசுத்தத்தையும், வேதத்தின்படி நடப்பதையும் எதிர்பார்க்கின்றார் (அப் 12:21–23)., அவங்க எந்தத் தப்பும் பண்ணாம பரிசுத்தமா, உண்மையோட, உத்தமத்தோட ஊழியம் செய்யும் போதும் அவர்கள் சீக்கிரமே மரணம் அடைந்தால், அது பூமியின் மேல் கொந்தளித்து வரும் பொல்லாப்பு, அழிவுகளுக்கு தேவன் அவர்களை தப்புவிக்க விரும்பினால் மெத்துசாலாவை ஜலப்பிரளயத்துக்கு முன்பே எடுத்துக் கொண்டதைப் போல எடுத்துக் கொள்ளலாம். பரிசுத்தவான்களின் மரணம் கர்த்தரின் பார்வையில் அருமையானது. கிறிஸ்துவுடன் இருப்பது எவ்வளவு மேன்மை, இன்பம், நன்மை! (பிலி 1:23).

அடுத்து அவர்கள் எதுக்காக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டார்களோ அவர்களின் பணி முடிந்து விட்டாலும் தேவன் எடுத்துக் கொள்ளலாம். யோவான் ஸ்நானகன் அவனோட வேலை முடிஞ்சதும் தன்னோட முப்பதாவது வயசுலேயே மரிச்சானே. இயேசுவுக்கு தேவன் நியமித்த வேலை முடிஞ்ச உடனே எடுத்துக் கொள்ளப்பட்டாரே. தாவீது தன் காலத்தில் தேவ சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்த பின்பு நித்திரை அடைந்தானே (அப் 13:36). இப்படி பல நல்ல காரணங்களையும் சொல்லலாம். முன்னாடி சொன்ன காரணங்களும் இருக்கலாம். எதுவாக இருந்தாலும் தேவ சித்தம், அனுமதி இல்லாம எதுவுமே பரிசுத்தவான்களின் வாழ்க்கையில நடக்காது. அவங்களுக்காக நாம ஒவ்வொருமே ஊக்கமா தொடர்ந்து ஜெபிக்கணும்.

G. திருமணம்

கே 58. கிறிஸ்துவுக்குள்ள இன்னும் ஜாதி பார்த்து திருமணம் செய்யுறாங்களே.

ஜாதி சாக்கடையில கிடந்த நம்மளை கர்த்தர் தூக்கி எடுத்து இன்னிக்கு கிறிஸ்துவுக்குள்ளாற ஒரே ஜாதியா, பரிசுத்த ஜனமா, ராஜரீக ஆசாரிய கூட்டமா வச்சிருக்காரு (1 பேதுரு 2:9). ஆரியர்கள் அவங்க பொழப்பு நடத்தணுங்கிறதுக்காக வர்ணாஸ்மரத்தையும், மனு நீதி தர்மத்தையும் தந்திரமா

நுழைச்சிட்டாங்க. ஆண்டவரோட படைப்புல மேல் ஜாதி, கீழ்ஜாதி என ஏதாவது இருக்குமா? மேல் ஜாதி மனுஷங்கன்னு சொல்றவங்களுக்கு என்ன இரண்டு கொம்பா முளைச்சிருக்கு? பிரம்மாவின் முகத்திலிருந்து பிறந்தவன் பிராமணன் என்றும், தோளில் இருந்து சத்திரியனும், தொடையிலிருந்து வைசியனும், கால்களிலிருந்து சூத்திரனும். பிறந்தார்கள்னு முன்பு ரிக் வேதத்தில் இல்லாத ஒரு ஜாதிக் கொள்கையை பின்னால் ரிக் வேதம் 10ம் காண்டம் புருஷ சூக்தத்தில் இடைச்செருகல் செய்தனர்.

மனுஷங்க எங்காவது முகத்திலிருந்தும், தோள், தொடை, காலிலிருந்தும் பிறப்பானா? சொல்றவன்தான் சொன்னான்னா கேக்கிறவனுக்கு புத்தி எங்கே போச்சு? காலில் இருந்து வந்த சூத்திரனுக்குள்ளேயும் பல ஜாதிகள், பிரிவுகள். மனுஷங்களை பிரிச்சு பிரிச்சு வச்சு, அவங்களுக்குள்ளே பேதமை, வேற்றுமை, உயர்வு தாழ்வுகளை உண்டாக்கி ஆரியர்கள் பொழப்பு நடத்தினாங்க. அந்த செத்துப்போன ஜாதி கொள்கையை, கிறிஸ்துவுக்குள்ளார வந்தாப் பிறகும் நாங்க நாடார் கிறிஸ்துவங்க, நாங்க தேவர் கிறிஸ்துவங்க, இவங்க கீழ்ஜாதி ஆதிதிராவிட கிறிஸ்துவங்கன்னு நாம் நம்மை பிரிச்சாலோ, நம்ம பொண்ணு, நம்ம பையன்களுக்கு இன்னமும் அப்படி ஜாதி பாத்து திருமணம் செஞ்சாலோ நாமெல்லாம் கிறிஸ்தவங்களா? அப்படிப் பார்த்தா ஆண்டவருடைய படைப்பையே நாம இழிவு படுத்திர மாதிரி ஆகாதா? நம்ம ஆண்டவர் இப்படி ஒரு கேவலமான ஜாதிக் கொள்கையை உண்டாக்குவாரா? கொஞ்சமாவது, இப்பவாவது கிறிஸ்துவர்களாகிய நாம யோசித்துப் பார்த்து, அந்த ஜாதி வெறி, மோகத்தை தூக்கி எறிய வேண்டாமா?

*"(ஜாதி பார்த்து) நீங்கள் பட்சபாதமுள்ளவர்களாக இருப்பீர்களானால், நீங்கள் பாவம் செய்து மீறினவர்கள் என்று நியாயப் பிரமாணத்தினால் நியாயம் தீர்க்கப்படுவீர்கள்"*னு யாக் 2:9 சொல்லுதே. உண்மையான தேவ அன்பு நம்மிடம் இருக்குமானால் எல்லாரையும் நாம சமமா தேவனுடைய பிள்ளைகளாக, அவரோட சிருஷ்டிகளாகத்தான் பார்க்க முடியும். அப்படித்தான் பார்க்கணும். இன்னமும் ஜாதி பார்த்தா நரகம் தான் அவங்களுக்கு. ஜாக்கிரதை.

கே 59. காதல் திருமணம் தவறா? கிறிஸ்துவர்கள் காதலிக்கக் கூடாதா?

காதலிப்பதை தவறுன்னு வேதம் எங்கேயும் நேரடியாக சொல்லலையே. மேற்கத்திய நாடுகளில் எல்லாருமே காதலிச்சுத் தான் கல்யாணம் பண்ணிக்கிறாங்க.. எவ்வளவு வேகத்தில காதலிப்பாங்களோ, அதை விட அதிக ஸ்பீடுல பிரிஞ்சும் போயிடுறாங்க. நம்ம தேசத்துல முக்கால் வாசிப் பேருக்கு எல்லாமே பெற்றோர்கள் பார்த்து ஏற்பாடு செய்கிற திருமணம் தான். அரேஞ்ஜிடு மேரேஜஸ் எல்லாமே சக்ஸஸ்னு சொல்லிட முடியாது. இதுலயும்

சில தோல்வி அடையுது. ஆனால் காதல் திருமணங்கள் ஏன் அதிக அளவுல தோல்வி அடையுது? ஏன்னா முக்கால் வாசி காதல் எல்லாம் இனக்கவர்ச்சியினால தான் ஏற்படுது. காதலிக்கும் போது ஒருத்தரோட மைனஸ் பாயிண்ட், கோபதாபங்கள், எது பிடிக்கும், எது பிடிக்காதுங்கிறது போன்றதெல்லாம் கண்ணுக்குத் தெரியாது. சும்மாவா சொல்றாங்க 'லவ் இஸ் பிளைண்டு'ன்னு.

கல்யாணம் பண்ணினாப் பிறகு அந்த இனிஷியல் கவர்ச்சி எல்லாம் குறைஞ்சாப் பிறகு மத்தவங்களோட மைனஸ் பாயிண்ட், கோபதாபங்கள், குணங்கள் எல்லாம் தெரிய வர்ற சமயத்தில அது பெரிய ஏமாத்தமா இருக்கு, தாங்க முடியறது இல்லை. காதலிக்கும் போது 1008 கனவுகள், கோட்டைகள், எதிர்பார்ப்புகள். கல்யாணத்துக்குப் பிறகு நம்மோட வாழ்க்கை அப்படியே தேனா இனிக்கப் போகுது, சொர்க்கமா இருக்கப் போவுதுன்னு நெனைப்பு. ஆனா பிராக்டிகல் லைஃப்ல எப்பவுமே ஒருத்தர் ஒருத்தர் கொஞ்சிக்கிட்டேவா இருக்க முடியும்? ஏதாவது ஒரு விஷயத்தில கொஞ்சம் கடிக்கத் தான் வேண்டி வரும். உடனே அந்த ஆதி அன்பு இப்போ இல்லை. முன்னாடி கொஞ்சிக்கிட்டே பின்னாடி திரிஞ்சவன் இப்போ முறைக்கிறானே, சிடுசிடுக்குறானே, குத்தம் சொல்றானேன்னு நொந்து போவாங்க.

அரேஞ்ஜ்டு மேரேஜஸ்ல இந்த கனவுகள், கோட்டைகளெல்லாம் கொஞ்சம் கம்மியாவும், பயம் கொஞ்சம் ஜாஸ்தியாவும் இருக்கும். ஆளு எப்படியோ, நல்ல பேரு வாங்கணுமே, பிடிச்ச மாதிரி நடக்கணுமே, எது பிடிக்கும், எது பிடிக்காதுன்னு முழுமையா தெரியலையேங்கிற ஒரு பயத்தோட, எச்சரிக்கையோட நடந்துப்பாங்க. சில விஷயங்களை பொறுமையோட சகிச்சுக்கிட்டு போவாங்க. அப்படியே ஏதாவது சின்ன சின்ன பிரச்சனைகள் வந்தாலும் அப்பா, அம்மா, உற்றார் உறவினர்கள் தலையிட்டு சமாதானம் செஞ்சு வச்சிடுவாங்க.

வரன் பாக்கும் போது பெற்றோர்கள் மாப்பிள்ளை எங்கே வேலை பாக்குறாரு, என்ன சம்பளம் வாங்குறாரு. பாக்குறதுக்கு ஆளு கொஞ்சம் சிகப்பா, அழகா இருக்காரான்னு மட்டும் பாக்காம, அவரோட பழக்க வழக்கங்கள், டெம்பர்மெண்ட்ஸ், லைக்கிங்ஸ், டிஸ்லைக்கிங்ஸ் எல்லாம் என்ன, மாமனார், மாமியார் எப்படிப்பட்டவங்க, அவங்க வீட்டுக்கு ஏற்கனவே வந்துள்ள மருமகன், மருமகள் எல்லாம் சந்தோஷமா, ஒற்றுமையா இருக்காங்களான்னு நல்லா வெரிஃபை பண்ணிட்டு அப்புறம் திருமணம் செஞ்சா நம்ம புள்ளைங்க பின்னாடி கண்கலங்காம இருப்பாங்க.

4000, 5000 ரூபாய் சம்பளத்துக்கு ஒரு கிளார்க்கை அப்பாயிட்மெண்ட் பண்ணும் போது அப்ளிகேஷன், பயோடேட்டா, ரிட்டன் டெஸ்ட், ஆப்டிடியூடு டெஸ்ட், குரூப் டிஸ்கஷன், ஆர்டினரி இன்டர்வியூ, டெக்னிக்கல் இண்டர்வியூ எல்லாம் வச்சு அப்புறம் செலக்ட் பண்றோம். இப்படியெல்லாம் ஃபில்டர் பண்ணி செலக்ட்

பண்ணினவங்களையும் பின்னாடி ஏதாவது ஒரு காரணத்தினால, பிடிக்கலைன்னா ஒரு நிமிஷத்தில சீட்டை கிழிச்சு வெளியில அனுப்பிச்சிடுறோம்.

நீங்க கண்ணுக்கு கண்ணா பொத்திப் பொத்தி வளர்த்த உங்க பொண்ணு, பையனோட திருமண வாழ்க்கை சந்தோஷமா இருக்கணும்கிறதுக்காக எல்லா விஷயத்தையும் நல்லா விசாரிச்சு, நாலையும் யோசித்துப் பார்த்து கர்த்தரோட சமூகத்தில இந்த திருமண காரியத்தை வச்சு ஜெபிச்சு, அவரோட சித்தம் அறிஞ்சு செய்யுறது நல்லது இல்லையா?

மணப் பொருத்தத்திற்கு மனப்பொருத்தம் ரொம்ப அவசியம் இல்லையா? அவசியம் ஏற்பட்டா ஒரு பிரைவேட் டிடெக்டிவை எங்கேஜ் பண்ணி எல்லாத்தையும் வெரிஃபை பண்ணிறது கூட தப்பு இல்லை. பின்னாடி வருத்தப்படுகிறதுக்கு பதிலா முன்னாடியே முன்னெச்சரிக்கையா எல்லாத்தையும் செக் பண்றது நல்லது இல்லையா?

இதையெல்லாம் பாக்கும் போது முன்னப் பின்ன தெரியாத ஒருத்தரோட தன் வாழ்க்கையை இணைக்கிறதை விட ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சுக்கிடுறதுக்கு அவங்க ஓரளவுக்கு பழகி, பெற்றோரின் சம்மதத்தோட திருமணம் செய்யுறது நல்லதுன்னே நினைக்கிறேன். ஆனா அப்படி பழகும் போது வரம்பு மீறாம, தங்களைத் தற்காத்துக் கொள்வது மிகவும் அவசியம்.

கே 60. ஒரு விசுவாசி அவிசுவாசியை திருமணம் செய்யலாமா?

கூடாது. கூடவே கூடாது. வேதம் அதை அனுமதிக்கலை. *'மாட்டையும், கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக'*ன்னு உபா 22:10 சொல்லுதே. திருமணம் ஒரு நுகம். அந்நிய நுகத்தை வேதம் கண்டிக்கிறது (2 கொரி 6:15). மனந்திரும்பாதவரோடு 'பரிசுத்த வித்து' கலப்பது குற்றம், அக்கிரமம் என்றே வேதம் சொல்கிறது (எஸ்றா 9:1–6). கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒரு விதவை கூட ஒரு அவிசுவாசியை மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கவில்லை (1 கொரி 7:39). ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியை காதலித்து திருமணம் செய்து கொண்டு அவர்கள் வாழ்க்கையே நரகமாகிப் போன பலரின் வாழ்க்கையை நான் அறிவேன். அதே போல ஒரு இரட்சிக்கப்படாத குடும்பத்தில் கணவனோ அல்லது மனைவியோ மட்டும் இரட்சிக்கப்பட்ட நிலையில், கொடுமை, சித்திரவதை, தள்ளி வைப்பு, வீட்டை விட்டு விரட்டல், டைவோர்ஸ், பில்லி சூன்யம் வைத்தல், மாந்திரீகம் பண்ணுதல் என பலவிதமான இன்னல்களுக்கு அவங்க ஆளாவதையும் நான் கவுசிலிங்கின் போது கேட்டு கலங்கி இருக்கிறேன்.

சில கிறிஸ்தவ குடும்பங்களில் துணிஞ்சு தங்களது மகளையோ, மகனையோ, பணம், பதவி, நெருங்கிய உறவுகளை மட்டுமே பார்த்துட்டு இரட்சிக்கப்படாதவர்களுக்கு திருமணம் செய்து வைக்கிறார்கள். கேட்டால்

அவர்களும் இரட்சிக்கப்படுவார்களே என்கிறார்கள். என்ன நிச்சயம்? இரட்சிக்கப்பட்டு விட்டால் ஓகே. இரட்சிக்கப்படலைன்னா அதை விட வேறே கொடுமையே கிடையாதே. திருமணம் ஒரு விளையாட்டு அல்ல. ஜாக்கிரதை. வேதம் சொல்வதை மீறாதீர்கள். இல்லைன்னா வேலியில போற ஓணானை உள்ளாற விட்டுக்கிட்டு பிறகு குத்துதே குடையுதேங்கிற கதை தான். தெரிஞ்சுக்கிட்டே எதுக்கு தலையை உரலுக்குள்ளே விடுறீங்க? வேண்டாம் இந்த விஷப் பரீட்சை.

கே 61. ஒரு கிறிஸ்தவன் தன் அக்கா மகளை, மாமன் மகளை, நெருங்கிய உறவில் திருமணம் செய்து கொள்ளலாமா?

கூடாது. வேண்டாம். அது ஆரோக்கியமில்லை. அவங்க ஏற்கனவே இரட்சிக்கப்பட்டவர்களாகவே இருந்தாலும் வேண்டாம். ஒண்ணா நெருங்கிய உறவுகளுக்குள்ளே ஜீன்ஸ் ஒரே மாதிரியா இருக்கும். அப்படி செய்து கொண்டவர்களுடைய குழந்தைகள் ஆரோக்கியமாக, புத்திசாலிகளாக இருப்பது இல்லை. இது மருத்துவ ரீதியாகவே நிரூபிக்கப்பட்டு அப்படிச் செய்யாதீங்கன்னே சொல்லியிருக்கிறார்கள். உறவு விட்டுப் போயிடக் கூடாதேன்னுட்டு பண்ணினா, பின்னாடி காலாகாலத்துக்கும் கண்ணீர் வடிக்க வேண்டி வரும். வேண்டாம்.

கே 62. கிறிஸ்தவங்க அதிக குழந்தைகளைப் பெற்றுக்கிடலாமா?

அதிக குழந்தைகளைப் பெத்து வளர்க்கக் கூடிய அளவுக்கு உங்களுக்கு வசதி, வாய்ப்பு, ஆரோக்கியம் இருந்தா பெத்துக்கோங்க. பெத்தா மட்டும் போதாது. அவைகளை கர்த்தருக்கேற்ற பிள்ளைகளாக சத்தியத்தில, பரிசுத்தத்தில, ஒழுக்கத்தில வளர்க்கணும். நிறையப் பெத்து ஆண்டவருடைய இராஜ்யத்தைக் கட்டி எழுப்ப ஊழியத்துக்கென்று ஒப்புக் கொடுங்க. தயார்படுத்தி அனுப்புங்க.

பணவசதி, பிள்ளையை கவனிக்க நேரமே இல்லை, புருஷன் பொண்டாட்டி இரண்டு பேருமே வேலைக்குப் போறீங்க, வீட்டில புள்ளைகளைக் கவனிக்க வேற ஆட்கள் இல்லை, உங்களுக்கு உடம்பும் அவ்வளவு ஆரோக்கியமா இல்லைன்னா, ஒரு குழந்தையோ அல்லது இரண்டோடேயே நிறுத்திக்கோங்க.

என்னைக் கேட்டா ஊழியம் செய்யுறவங்க, போதகர்கள் நிறைய புள்ளைகளைப் பெத்துக்கிடணும்னு சொல்லுவேன். இரண்டு பசங்களை ஊழியத்துக்கு தயார்படுத்தி வளருங்க. இரண்டு பேரை டாக்டருக்கு, இரண்டு பேரு ஸ்கூல் நடத்த, இரண்டு பேரு மிஷனெரிகளாக வடமாநிலங்களுக்கு அனுப்புவதற்கு. ஊழியத்துக்கு வளர்க்கப்பட்ட புள்ளைங்க சபையை பெரிதாக்கி, ஊழியத்தின் எல்லைகளை விரிவுபடுத்தி, பல கிளை சபைகளை சபைகள் இல்லாத இடங்களில உருவாக்கணும். டாக்டருக்கு படிக்க வச்சு ஒரு ஆஸ்பத்திரி ஆரம்பிச்சு, ஜனங்களை மொட்டை, கொள்ளை அடிக்காம நேர்மையோட

நியாயமானதொரு ஃபீஸ் வாங்கிக்கிட்டு டிரீட்மெண்ட் கொடுத்து 'மருந்து நாங்க தர்றோம். சுகம் கொடுக்கிறவர் இயேசுவே'ன்னு சொல்லணும்.

ஆஸ்பத்திரி முழுக்க வேத வசனங்களை எழுதி வச்சு, ஆஸ்பத்திரிக்குள்ளேயே ஒரு பிரேயர் ஹால் அமைச்சு, அதில ஆராதனை, ஜெபம் நடத்தி, அவர்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்துகிற ஒரு கிறித்துவ மிஷன் ஆஸ்பத்திரியா ஒரு வேலூர் CMC போல அதை உருவாக்கணும். சுவிசேஷத்தை பரப்ப இதுவும் ஒரு வழி. மத்தவங்க சொல்றதை விட ஒரு டாக்டர் சொல்றதை வேத வாக்கா, தெய்வ வாக்கா ஜனங்க நம்புவாங்க. 'இனி எங்க கையில ஒண்ணுமில்லம்மா. நாங்க கொடுக்க வேண்டிய மருந்து மாத்திரைகளைக் கொடுத்துட்டோம். இனி உம் புள்ளை பிழைக்கிறது ஆண்டவர் கையில தான் இருக்கு. போயி இயேசப்பா கிட்ட முழங்கால் போட்டு கண்ணீர் விட்டு கதறி, செய்த தப்பு தண்டாவை யெல்லாம் அறிக்கை இடுங்க'ன்னு சொன்னா, அடுத்த நிமிஷம் அவங்க போயி முழங்கால் போடுவாங்க.

அடுத்த இரண்டு புள்ளைங்களை நல்லா படிக்க வச்சு, B.Ed., M,Ed, டீச்சர்ஸ் டிரெயினிங் எல்லாம் கொடுத்து அவங்களைக் கொண்டு நல்லதொரு ஸ்கூல் ஆரம்பியுங்க. நல்லதொரு ஸ்டான்டர்டை மெயின்டைன் பண்ணுங்க. ஊட்டி, கொடைக்கானல் கான்வெண்ட் போல அந்த ஸ்கூலை நடத்துங்க. நல்ல ஹைலி குவாலிஃபைடு டீச்சர்சைக் கொண்டு நல்ல குவாலிட்டி எஜுகேஷன் கொடுங்க. கம்ப்பல்சரியா தினமும் ஒரு கிளாஸ் LKG டு பிளஸ் டு வரைக்கும் VBS, பைபிள் கிளாஸ். மாரல் ஸ்டடி போல நடத்துங்க. நாம அவங்க கெட்டுப் போறதுக்கா இதைச் செய்யுறோம்? அவங்க இந்த உலகத்தின் அசுத்தங்களுக்கு தங்களைத் தற்காத்துக் கொண்டு ஒரு பயபக்தி உள்ள நல்ல பிரஜைகளா இருக்கணும்கிறதுக்குத் தானே இதைச் செய்யுறோம்.

பசங்க படிப்பை முடிச்சிட்டுப் போகும் போது ஒரு 'பார்ன் அகெயின்' கிறிஸ்தவனாத் தான் போகணும்கிற ஒரு லட்சியத்தோட, தொலைநோக்கோட செய்யுங்க. எதிர்காலத்தில அது ஒரு மெட்ராஸ் கிறிஸ்டியன் காலேஜா, ஒரு லயோலா காலேஜா, ஒரு செயிண்ட் ஜோசப் காலேஜா உருவாகணும்கிற ஒரு திட்டத்தோட செயல்படுங்க. அதுல கிடைக்கிற வருமானம் ஊழியத்துக்கு, சபைகள் ஸ்தாபிக்கப்பட, மிஷனெரி ஊழியங்களுக்கு என பயன்படும்படியா திட்டங்களை வகுங்க.

ஒரு போதகரோட அழைப்பு போதகத்துக்கு மட்டும் தான். ஸ்கூல் நடத்துறதுக்கு அல்ல. ஸ்கூலை நல்லா பிளான் பண்ணி ஆரம்பிச்சு, அதை நடத்துறதை, விரிவாக்குகிறதை உங்க புள்ளைங்க கிட்ட விட்டுடுங்க. ஸ்கூல் மேனேஜ்மெண்ட்டு போர்டுல ஒரு கமிட்டி மெம்பரா வேணா இருந்துக்கோங்க. அதுக்கு மேலே பணத்துக்குப் பின்னாடியோ, இன்னும் ஸ்கூலை விரிவாக்கி அதை எப்படி ஒரு பெரிய காலேஜா, யுனிவெர்சிடியா உருவாக்கணும்னோ உங்க நேரத்தை அதுக்கு வீணடிக்காதீங்க. பணம் பிசாசின் வல்லமையான ஆயுதம்.

ஜாக்கிரதையா போதுமென்ற மனசோடு ஊழியத்தை செய்யுங்க. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

கே 63. கருக்கலைப்பு செய்யுறது பாவமா?

பாவந்தான். கரு உருவான உடனேயே அதுக்கு உயிர் வந்துடுது. அதை அழிக்கிறது பாவந்தான். கரு உருவாகாம கருத்தடை பண்ணிக்கிடுறதுல தப்பு எதுவும் இல்லை. அப்படி செய்யக் கூடாதுன்னு வேதத்தில எங்கயும் சொல்லப்படலை. தன்னோட விந்தை தரையில வீணாக விட்டதை பாவம்னு சொன்னது (ஆதி 38:8–10) அதுக்காக அல்ல. தன் சகோதரனின் மனைவிக்கு, அவனின் சகோதரன் என்ற முறையில அவனது பொறுப்புல இருந்து தவறினதுனால தான் (உபா 25:5–10).

இன்னிக்கு தேதியில பூமியில, குறிப்பா நம்ம தேசத்தில ஜனத்தொகை கன்னா பின்னான்னு பெருகிப் போச்சு. எங்க போனாலும் கியூ. கூட்ட நெரிசல். ஸ்கூல், காலேஜ் அட்மிஷனுக்கு கண்ணு பிதுங்கிடுது. பஸ்ஸுல, ட்ரெயின்ல மூணு மாசத்துக்கு முன்னாடியே ரிசர்வேஷன் முடிஞ்சிடுது. ரேஷன் கடையில, டெலிபோன் பில்லு கட்ட, கரண்ட் பில்லு கட்ட, கேஸ் கம்பெனியில இப்படி எங்க போனாலும் கூட்டம் கூட்டமா ஜனங்க அலை மோதுது. இன்னும் ஒரு நூற்றாண்டிலே பூமியில நிக்க கூட இடம் கிடைக்குமான்னு சந்தேகமா இருக்கு.

தண்ணிக்குப் பஞ்சம், உணவுக்குப் பஞ்சம், வேலைக்கு பஞ்சம், நல்ல காத்துக்கு, பெட்ரோல் டீசல், கேஸுக்குப் பஞ்சம், நீதி நேர்மைக்கு பஞ்சம், அன்புக்குப் பஞ்சம். இப்படி எங்க பார்த்தாலும் பஞ்சம் தலை விரித்து ஆடுது. அதுனால ஜனத்தொகையை கட்டுப்படுத்தணும்னு அரசாங்கம், உலக அமைப்புகள் எல்லாமே சொல்லுது. அரசோடு இந்த விஷயத்துல ஒத்துழைப்பது நம்மோட கடமை.

கே 64. குழந்தை பிறப்பதை தள்ளிப் போட இயற்கை வழிகளை கையாளலாமா?

கல்யாணம் ஆன ஒரிரு வருஷங்களிலேயே விந்துவின் வீரியம் குறையாம இருக்கும் போதே முதல் குழந்தையை பெத்துக்கிடுறது நல்லது. அதுக்கப்புறம் 3,4 வருஷத்தில இன்னொரு குழந்தையைப் பெத்துக்கிடலாம். இரண்டு குழந்தைகளும் ஆணா இருந்தாலும் சரி, ரெண்டுமே பெண்ணாக இருந்தாலும் சரி, அதோட சரின்னு முடிச்சுடுங்க. மேற்கொண்டு எந்த முயற்சியும் வேண்டாம். கர்ப்பத்தின் கனி தேவன் கொடுத்த ஈவு தான். பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் தான். அவங்க பந்தியைச் சுற்றிலும் ஒலிவ மரக் கன்றுகளைப் போல இருப்பாங்கங்கிறதெல்லாம் உண்மை தான் (சங் 128:3) ஆனா அவங்களை நல்லபடியா வளர்த்து, படிக்க வச்சு அவங்களை ஒரு ஆளாக்க எவ்வளவு பாடுபட வேண்டி இருக்கு. அதைச் செய்ய முடியாம, நல்ல படிப்பு, சாப்பாடு, துணிமணி

கொடுக்க முடியாம அவங்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை, திருமண வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுக்காம இருக்கிறது எவ்வளவு பெரிய தப்பு.

அதுக்குப் பதிலா தாராளமா கருத்தடை, குடும்பக் கட்டுபாடுகளை நல்ல மருத்துவரிடம் போயி செய்து கொள்ளுங்க. இயற்கை வழிகளைக் கையாண்டு குழந்தை பிறப்பை தள்ளிப் போட்டாலும் சரி, இல்லை கருத்தடை ஆபரேஷன் செஞ்சு ஒரேயடியா குழந்தை பிறப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வச்சாலும் சரி தப்பு கிடையாது. கருத்தடை ஆபரேஷன் சில பேர் உடம்புக்கு ஒத்துக்காது. அதுக்கு இயற்கை வழியை கடைப்பிடிப்பது ஏவ்வளவோ நல்லது இல்லையா?

கே 65. கிறிஸ்துவுக்குள் நாம் அனைவரும் ஒன்றாக, ஒரே குடும்பமாக இருக்கிறோம் என்பதற்காக ஒரு சபைக்குள்ளேயே இருக்கும் விசுவாசிகள் திருமணம் செய்து கொள்ளக் கூடாதா?

கிறிஸ்துவுக்குள் நாம் அனைவரும் ஒன்றாய் இருக்கிறோம். ஒரே இரத்தமாய், ஒரே குடும்பமாய் சபையில் இருக்கிறோம்கிறதுக்காக சபைக்குள்ளே ஒருத்தரை ஒருத்தர் திருமணம் செய்யக்கூடாதுன்னு சொல்றது எவ்விதத்திலும் சரி கிடையாது. கிறிஸ்து சபைக்கு தலையாக இருக்கிறார். நாமெல்லோரும் சபையில் அங்கமாக இருக்கிறோம்கிறதுனால நாம ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கணும், ஒரு குடும்பத்து அங்கத்தினர்கள் போல பழகணும் தான் அர்த்தமே ஒழிய, அதுக்காக சபையில இருக்கும் இரு விசுவாசி குடும்பங்க பேசி ஒத்துக் கொண்டு ஒழுங்கு செய்யும் திருமண காரியங்களை அனுமதிக்கக் கூடாதுன்னு சொல்றதுல எந்த அர்த்தமும் இல்லை. தாராளமா செய்து கொள்ளலாம்.

சபைக்கு கிறிஸ்து தலை என்றால் ஊரில், உலகில் இருக்கிற எல்லா சபைகளுக்குமே அவர் தலைதான். அப்போ நாம எல்லோருமே சகோதர சகோதரிகள்னா, ஒரு கிறிஸ்தவன் ஒரு கிறிஸ்தவப் பெண்ணையே திருமணம் செய்யவே முடியாதே. சில வசனங்களை நாம அப்படியே லிட்டரலாக ஃபாலோ பண்ணணும். சில வசனங்களின் அர்த்தத்தை, அதன் நோக்கத்தை மட்டும் புரிந்து கொண்டு செயல்படணும். அது தான் ஞானம், விவேகம்.

கே 66. ஒரு சபைப் பிரிவைச் சேர்ந்தவங்க அந்த சபைப் பிரிவுக்குள்ளேயே தான் திருமணம் செய்யணுமா? மற்ற பிரிவுகளிலும் செய்து கொள்ளலாமா?

உபதேச மாற்றம், டாக்டரின் டிஃபரென்ஸ் இல்லாம இருந்தா மற்ற பிரிவுகளிலே திருமணம் செய்து கொள்றது தப்பு இல்லை. பிரச்சனை எதுவும் வராது. ஆனா உபதேச மாற்றங்கள் உள்ள இரு பிரிவுக்குள்ள பண்றது, ஒரு பெந்தகோஸ்தேகாரன் ஒரு RC யிலோ, TELC, ALC, மார்த்தோமா, சிரியன்

பிரிவுகளோடு செய்து கொள்வது பின்னாடி பல பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கு. எதுக்கு தேவையில்லாத வம்பு?

கே 67. அபிஷேகம் பெற்றவர்கள் அபிஷேகம் பெற்றவர்களையே திருமணம் செய்து கொள்ளணுமா?

அவசியமில்லை. ஒரு அவிசுவாசியைத் தான் திருமணம் செய்துக் கொள்ளக் கூடாது. ஒரு விசுவாசி வாஞ்சையோடு, தாகத்தோட அபிஷேகத்தைக் கேட்டாக்க ஆண்டவர் அவங்களுக்கும் தாராளமா கொடுப்பாரே.

கே 68. ஒரு இந்துவுக்கு என்னைத் திருமணம் செஞ்சு வைக்க என்னை வற்புறுத்துகின்றனர் என்ன செய்ய?

அடபொண்ட்டா ஒத்த காலில நின்னு முடியவே முடியாதுன்னு கண்டிப்பா சொல்லிடு. உன்னை திட்டினாலும் சரி, அடிச்சாலும் சரி, நாங்க தற்கொலை பண்ணிப்போம்னு சொல்லி பயமுறுத்தினாலும் சரி கொஞ்சங்கூட அசைஞ்சு கொடுக்காதே. என் விருப்பத்தை மீறி வலுக்கட்டாயமா அப்படி ஒரு கல்யாணம் செஞ்சு வைக்க முயற்சி செய்தீங்கன்னா நான் அடுத்த நிமிஷமே தற்கொலை பண்ணிப்பேன். என் தற்கொலைக்கு நீங்களே காரணம்னு எழுதி வச்சுட்டு சாவேன்னு சொல்லி நீ திருப்பி மிரட்டு. எனக்கு கல்யாணம்னா ஒரு கிறிஸ்தவரோட தான். இல்லைன்னா நான் இப்படியே கன்னியாவே இருந்திடுறேன்னு ஒரு போடு போடு. கடைசி வரை விடாப்பிடியா இரு. விடாம ஜெபம் பண்ணு. கர்த்தர் உன் பெற்றோர்களின் மனசை மாத்துவார்.

H. கிறிஸ்தவ வாழ்வு

கே 69. இறந்த நம் தாய் தந்தை, கணவன், மனைவியின் படத்தை வச்சு கும்பிடலாமா?

கூடாது. அவங்களோட வாழ்க்கை முடிஞ்சு போச்சு. நாம செய்கிற ஜெபமோ, படைக்கிற எந்த படையலுமோ, செய்கிற தெவசமோ, கருமாதியோ எதுவுமே அவங்களுக்குப் போயி சேராது. அவங்களாலேயும் நம்மை ஆசீர்வதிக்கவோ நமக்கு எதுவும் செய்யவோ முடியாது. '***அன்றியும் ஒரே தரம் மரிப்பதுவும், பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதும் மனிதருக்கு நியமிக்கப்பட்டு இருக்கிறது***'ன்னு எபி 9:27 சொல்லுதே. அவர்களுடைய கிரியைகளுக்குத்

தக்கதாக அவர்களுக்கும் நியாயத் தீர்ப்பு கிடைக்கும். அதுவரைக்கும் அவங்க செய்த கிரியைகளுக்கு ஏற்ப பரதேசுலியோ, பாதாளத்திலேயோ இருப்பாங்க. கடைசி எக்காளத்துக்குப் பிறகு மரித்தோர் அழிவில்லாதவர்களாக எழுந்திருப்பார்கள். பிறகு நியாயத் தீர்ப்பு (1கொரி 15:51, 52, மத் 16:27). அதன் பிறகு பரலோகம் அல்லது எரி நரகம், அக்கினிக் கடல்.

நம்மை பத்து மாசம் சுமந்து, பெத்து, கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கி நம்மோட சுக துக்கங்களில் பங்கு கொண்டு நமக்காகவே ஒவ்வொரு நிமிஷமும் வாழ்ந்த அவங்களை நம்மால மறக்க முடியாது தான். மறக்கவும் கூடாது. அவங்களோட போட்டோவை ஆல்பத்திலேயோ, ஷெல்ஃபிலேயோ நல்லா அழகா பிரேம் போட்டு வையுங்க. ஆனா வீட்டு நடு ஹாலிலே அவங்க போட்டோவை பெரிசா மாட்டி, மாலை போட்டு, ஊதுபத்தியோ, மெழுகுவத்தியோ ஏற்றி வைக்கக் கூடாது. அவங்க படத்துக்கு முன்னாடி நின்று அதை நோக்கியோ, அவங்களை நினைச்சோ ஜெபிக்கக் கூடாது. இறந்தவர்களோடு எந்த விதத்திலும் தொடர்பு கொள்வதை (இறந்த ஆவிகளோடு பேசுதல் போன்றவைகளின் மூலமாக) வேதம் கடுமையா கண்டிக்குது. ***'உயிருள்ளவர்களுக்காக செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமா'*** ன்னு ஏசா 8:19ல சொல்லப்பட்டு இருக்கே. அப்பா, அம்மா உயிரோட இருக்கும் போது அவங்களை அன்பா, பாசமா பாத்துக்கிட்டு, அவங்களோட சகல விதமான தேவைகளையும் சந்திச்சு அவங்களை சந்தோஷமா வச்சுக்கோங்க. அது தான் உங்களுக்கு பெரிய ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். தேவனுடைய பார்வையில் அது கனம் பெறும்.

கே 70. அவர்களின் இறந்த நாளைக் கொண்டாடலாமா?

தாராளமா கொண்டாடுங்க. எப்படி கொண்டாடுறீங்கங்கிறது தான் முக்கியம். அவங்க செய்த நன்மைகளை, உங்களுக்காக அவங்க பட்ட பாடுகளை நினைச்சு நன்றியோட கண்ணீர் விடுங்க. உங்களுக்கு சொன்ன புத்திமதிகளை, உபதேசங்களை மறுபடியும் நினைவு கூர்ந்து அதன்படி வாழ உங்க அர்ப்பணிப்பை மறுபடியும் புதுப்பியுங்க. ஏதாவது அநாதை ஆசிரமம், முதியோர் இல்லம், குஷ்டரோஹிகளின் புனர் வாழ்வு மையங்களுக்கு அன்னிக்குப் போயி அன்னதானம், இனிப்பு, புதிய உடைகள், பழைய நல்ல துணிமணிகளைக் கொடுத்து அந்த மையங்களுக்கு ஏதாவது உதவி செய்யுங்க. உங்க அப்பா அம்மா நினைவா ஒண்ணோ இரண்டோ அல்லது எத்தனை மிஷனெரிகளைத் தாங்க முடியுமோ ஒரு பொருத்தனை பண்ணித் தாங்குங்க.

இல்லைன்னா பிளங்சிங் யூத் மிஷன், FMPB, IEM போன்ற நல்ல மிஷனெரி ஊழியங்களுக்கு ஒரு கணிசமான தொகையை நன்கொடையா கொடுங்க. உங்க சபை மக்களுக்குன்னு அத்தனை பேருக்கும் அன்னிக்கு விருந்து வச்சு, சிக்கன் பிரியாணி போடாதீங்க. அது வேஸ்ட். அதுக்குப் பதிலா சபையிலுள்ள ஏழை எளியவர்களுக்கு சபை மூலமா ஏதாவது உதவி செய்யுங்க. ஏழைக்

குழந்தைகளின் படிப்புச் செலவுக்கு கொடுங்க. இல்லைன்னா 100 கிலோ அரிசி வாங்கி சபை மூலமா உண்மையிலேயே கஷ்டப்படுகிற குடும்பங்களுக்கு கொடுங்க. அது புண்ணியம். ஆசீர்வாதம்.

முக்கால்வாசி சபைகளிலே லேடீஸ் பிரேயர், வீட்டுக் கூட்டம்னு வாரத்தில் ஒரு நாள் விசுவாசிகளின் வீட்டில வைப்பாங்க. அப்போ அந்த பிரேயர்ல கலந்துக்கிடுறவங்களுக்கு சாப்பாடு, பிரியாணி கொடுக்கிறதுங்கிற ஒரு பழக்கம், வழக்கம் ஏற்பட்டுப் போச்சு. அப்படி செஞ்சா ஆசீர்வாதம்னு நெனைக்கிறாங்க. வசதி வாய்ப்பு உள்ளவங்க தங்களோட செழிப்பைக் காட்ட பெரிய விருந்தே வைக்க முடியும். வசதி இல்லாதவங்க ஐயோ நம்மாலசெய்ய முடியலையேன்னு ரொம்ப ஃபீல் பண்ணுவாங்க. கொடுக்க முடியலையேன்னு ஒரு குற்ற உணர்வு. சிலபேரு வீட்டுல பிரேயர் வைக்கணும்னு நினைச்சாலும், இந்த சாப்பாட்டு செலவை நினைச்சுக்கிட்டு தயங்குவாங்க. இது போன்ற ஒரு தர்மசங்கடமான நிலையை சமாளிக்க, அப்படி ஏற்படாமல் இருக்க, ஸ்டிரிக்டா சபையில சொல்லிடணும். சாப்பாடு எதுவும் கொடுக்கக் கூடாது. காபியோ, டீயோ, ஒரு ரஸ்னாவோ மட்டும் கொடுங்க. அப்படி ஏதாவது கொடுக்கணும்னு நினைச்சா, சாப்பாட்டுக்கு ஆகிற செலவுத் தொகையை சபையில (ஏழைகளின் உதவி நிதியாகவோ, ஏழைக் குழந்தைகளின் படிப்பு நிதியாகவோ, சபையின் பில்டிங் பண்டுக்கோ) கொடுக்கச் சொல்லுங்க. அவங்களால இயன்றதை சந்தோஷமா கொடுக்கட்டும். அது எல்லோருக்கும் சாப்பாடு போடுகிறதைவிட உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்.

கே 71. அப்பா, அம்மா, கணவர், மனைவியின் கல்லறைக்குப் போகலாமா? அதை அழகுபடுத்தலாமா?

இதுனால உங்களுக்கு எந்த விதமான ஆசீர்வாதமும் கிடைக்கப் போறது இல்லை. ஆனா இதுனால சென்டிமெண்ட்டலாக உங்களுக்கு ஒரு ஆறுதல், சந்தோஷம், சமாதானம் கெடைக்குதுன்னா தாராளமா செய்யுங்க. கல்லறைக்கு போறதை வேதம் எங்கயும் தடை பண்ணலை. பேதுரு பெந்தகோஸ்தே நாளில் தாவீதைக் குறிச்சு பிரசங்கம் பண்ணும் போது (அப் 2:29) '*அவரது கல்லறை இந்நாள் வரை நம்மிடம் இருக்கிறதே*'ன்னு சொன்னானே. அப்படீன்னா அவங்க அந்த கல்லறையை ஒரு நினைவுச் சின்னமா பாதுகாத்து வந்திருக்காங்கன்னு தானே அர்த்தம். வருஷம் தோறும் கல்லறைக்கு வெள்ளையடித்தது அந்தக் காலத்து வழக்கம் (மத் 23:27). கல்லறைக்கு போறது தப்புன்னா, எதுக்காக சவப் பெட்டியை புதைச்ச இடத்தில ஒரு கட்டிடமே கட்டணும்? கல்லறையை ஒரு நினைவுச் சின்னமா வச்சக்கிடுறலேயோ அல்லது அங்கே போறதோ தப்பு இல்லை.

ஆனா அங்க போயி இறந்தவங்களுக்காகவோ, உங்களுக்காகவோ எந்த ஜெபமும் செஞ்சுக்கிட்டு இருக்க வேண்டாம். அடக்கம் பண்ணப்பட்ட

இடத்திற்கு ஒரு புனிதத்துவம் கொடுப்பது பலவிதமான விக்கிரஹ ஆராதனை பழக்க வழக்கங்களுக்கு இடம் கொடுத்து விடும். ஜாக்கிரதை.

கே 72. இறந்த பரிசுத்தவான்கள் நம்மை ஆசீர்வதிக்க முடியுமா?

ஆசீர்வதிக்க முடியுமா, முடியாதாங்கிறது அப்புறம் முதல்ல அவங்களோட படம், சிலை, கல்லறைகளுக்கு முன்னாடியோ அல்லது அவங்க பேரைச் சொல்லியோ நாம ஜெபிக்கக் கூடாது. அவைகளுக்கு முன்னாடி நாம முழங்கால் போடக் கூடாது. நாம ஜெபிக்க வேண்டியது – பரிசுத்த ஆவியில் நிரம்பி, இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தில், பிதாவிடம் மாத்திரமே. வேற யாருக்கு முன்னாடியும், வேற எதுக்கு முன்னாடியும், வேற எந்த நாமத்தினாலேயும் நாம ஜெபிக்கக் கூடாது. அப்படி செய்வதையும் விக்கிரஹ ஆராதனை என்று கர்த்தர் அருவருக்கிறார்.

தீர்க்கதரிசி எலிசாவின் எலும்புகளைத் தொட்டவுடனேயே மரித்தவன் ஒருவனின் உடல் உயிர் பெற்றதுன்னு 2 இராஜா 13:21 சொல்லுதேன்னு நீங்க சொல்லலாம். அற்புதம் செய்தது எலிசாவின் எலும்புகள் அல்ல. அதன் மூலம் கிரியை செய்தவர் கர்த்தர். அவர் எங்கே, எப்படி, எதுக்காக எதன் மூலம் செய்கிறார்ன்னு நம்மால புரிஞ்சுக்கிட முடியாது. இப்படி நடந்திருக்கேன்னு பரிசுத்தவான்களின் கல்லறைகளை நாம போயி தோண்டிக்கிட்டு இருக்கக் கூடாது. இறந்து அடக்கம் பண்ணப்பட்ட ஒரு பரிசுத்தவானின் எலும்புகளின் மூலம் அற்புதம் செய்த தேவனை நீங்க வேண்டிக்கிட்டா அவர் நேரடியாவே உங்களுக்கு அற்புதம் செய்ய மாட்டாரா?

கே 73. சுய புணர்ச்சியில் ஈடுபடுகிறேன். தப்புன்னு தெரியுது. ஆனாலும் என்னாலே அதை விட முடியலை.

உள்ளத்திலே ஏற்படுகிற பாலியல் உணர்வுகளை உங்களால் கட்டுப்படுத்த முடியாமல் போறதுனாலேயே இப்படி ஒரு செயலில் ஈடுபடுகிறீர்கள். முதல்ல உங்க உள்ளத்தில பாலியல் இச்சைகள் வராதபடி உங்கள் உள்ளத்தை ஆண்டவரோட வார்த்தைகளால நிரப்புங்க. அது போன்ற உணர்வுகள் வரும் போது தனியா இருக்காதீங்க. மற்றவர்களோடு ஒரு நல்ல பெல்லோஷிப்புல இருங்க. பைபிளை எடுத்து படிங்க. நல்ல கிறிஸ்தவ பாடல்களைப் பாடுங்க/ கேளுங்க. ஜெபம் பண்ணுங்க. இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தினாலே அந்த காமாந்தகார சிந்தனைகளை கட்டுங்க. கடிந்து கொள்ளுங்க. இது கர்த்தர் அருவருக்கின்ற ஒரு இழிச் செயல்கிறதை திரும்பத் திரும்ப உங்களுக்குள்ளே சொல்லி அதை அப்படியே உள்ளத்திலே பதிய வையுங்க. சுய புணர்ச்சி என்பது ஒரு தனிச்ச செயல் அல்ல. உள்ளத்திலே 1008 வக்கிர இச்சைகளோடு, உணர்வுகளோடு, கற்பனைகளோடு செய்யப்படுகின்ற, உங்களை நீங்களே கறைப்படுத்திக் கொள்கின்ற ஒரு செயல் அது என்று உணருங்கள். அதையும் மீறி நீங்க செஞ்சுட்டா, ஆண்டவரோட சமூகத்தில போயி உண்மையா மனங்கசந்து, அறிக்கையிட்டு, மனந்திரும்பி, குற்றத்தை

ஒப்புக் கொண்டு மன்னிக்கும்படி கேளுங்க. ஆண்டவர் கிட்ட பாரத்தை இறக்கி வச்சாப்பிறகு மறுபடியும் குற்ற உணர்வுகளோடு அலைய வேண்டாம்.

கே 74. சொத்து சேர்ப்பது, வீடுகட்டுவது தவறா?

அப்படின்னு யார் சொன்னா? யாராவது சொன்னாங்களா? வேதத்தில எங்கயும் அப்படி சொல்லப்படலை. நீ கடைசி வரைக்கும் பஞ்சப் பரதேசியாவே இருக்கணும்னு ஆண்டவர் விரும்பலை. நீ சகல விதமான ஆசீர்வாதங்களோடேயும், சம்பத்துக்களோடேயும் நீ நிறைவா இருக்கணும்னு தான் கர்த்தர் விரும்புகிறார். சொத்து சேர்க்கிறது மட்டும் தான் நம் வாழ்வின் இலட்சியம், அப்பத் தான் நாலுபேரு நம்மை மதிப்பாங்க, இல்லைன்னா நம்மை ஒருத்தருமே சீந்த மாட்டாங்கன்னு நினைச்சுக்கிட்டு சொத்து சேக்கிறதுக்காகவே நம் வாழ்நாளை எல்லாம் செலவழிக்கக் கூடாது. நாம இந்த உலகத்தில பிறந்த போதும் ஒண்ணையும் கொண்டு வரலை. போகும் போதும் எதையும் கொண்டு போகப் போறது இல்லை.

நேர்மையா உழைச்சு, சம்பாரிச்சு, ஆண்டவருக்கும், அவரோட ஊழியத்துக்கும் நாம தாராளமா, சந்தோஷமா கொடுத்த பிறகு, ஆடம்பர, பகட்டு வாழ்வை தவிர்த்து, சிக்கனமா செலவு பண்ணி, பணம் சேர்த்து தாராளமா சொத்து சேர்க்கலாம். அதுல தப்பே கிடையாது. ஆனால் வாழ்க்கையின் நோக்கம் சொத்து சேர்ப்பதாக இருக்க வேண்டாம். நம்ம சொத்து பூலோகத்தில் அல்ல, பரலோகத்திலேயே அதிகம் இருக்கட்டும். '***முதலில் தேவனுடைய இராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுங்கள். இவைகள் எல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும்*** (மத் 6:33). '**உங்களுக்கு இன்னது தேவை**' என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார் – மத் 6:32. அதனால நீங்க எதைப் பத்தியும் கவலைப்படாதீங்க. சபை கட்டுவதற்கு தாராளமா கொடுங்க. ஆண்டவர் உங்கள் வீட்டை கட்ட உங்களுக்கு வேண்டிய தேவைகளை நீங்கள் நினைப்பதற்கும், சிந்திப்பதற்கும் அதிகமாகவே சந்திப்பார். '***என்னை சோதித்துப் பாருங்கள்***'ன்னு ஆண்டவர் சொல்லி இருக்கிறாரே (மல்கி 3:10). டெஸ்ட் பண்ணிப் பாருங்க.

கே 75. பிள்ளைகளின் படிப்பு, எதிர்காலம், திருமணத்திற்காக பணம் சேர்த்து வைக்கலாமா?

பறவைகள் விதைப்பதுமில்லை. அறுப்பதும் இல்லை. ஆகவே நாளையைப் பற்றி கவலைப்படாதே என்று வேதம் கூறுகிறது. அதன் அர்த்தம், நாளைக்கு நாம என்ன பண்ணுவோம்? நமக்கு யாரு இருக்கிறா? என்று கவலைப்பட்டு மருக வேண்டாம். கர்த்தர் உன்னோடு இருக்கிறார் என்று உணர்த்தவே. அதுக்காக நாம எதுக்கு சேர்த்து வைக்கணும். அதான் ஆண்டவர் இருக்காரில்லே, அவர் பார்த்துப்பார்ங்கிறதுக்காக அல்ல. ஊதாரித்தனமா செலவு பண்ணாம பட்ஜெட் போட்டு செலவழிக்கணும். சேமிப்பும் செய்யணும்.

கல்யாணமே பண்ணாம இருந்துட்டா எந்த ஒரு பிக்கலும், பிடுங்கலும் இருக்காது. வேற வழியில்லாம கல்யாணம் பண்ணிக்கிட்டா குழந்தைகளையாவது பெத்துக்காம இருக்கணும். அப்படி இருந்தா புருஷன் பெண்டாட்டி மட்டும் தானே. எப்படியோ வண்டியை ஓட்டிடலாம். அது இல்லாம வதவதன்னு பிள்ளைகளைப் பெத்துப் போட்டுட்டா அவங்களுக்காக, அவங்களுடைய வளர்ப்பு, படிப்பு, திருமணம், எதிர்காலம் இவைகளுக்காக கண்டிப்பா நாலு காசு சேர்த்து வச்சாகணும். அது தான் புத்திசாலித்தனம். எல்லாத்தையும் கர்த்தர் பார்த்துப்பார்னு நீ விட்டியானா கர்த்தர் நீ திண்டாடி தெருவில நிக்கிறதைத் தான் வேதனையோட பாப்பாரு. ஜாக்கிரதை.

கே 76. ஓய்வு நாளான ஞாயிற்றுகிழமையில வியாபாரம் செய்யலாமா? வேலைக்கு போகலாமா?

வாரத்தில ஏழாவது நாளை தேவன் ஓய்வு நாளாக்கினார் (ஆதி 2:2,3). அது பரிசுத்த நாளாக, பழைய ஏற்பாட்டில, நியாயப் பிரமாண காலத்தில யூதர்கள் அனுசரித்தார்கள் (யாத் 20:8–11). அது சனிக்கிழமையா, ஞாயிறான்னு சாத்தான் சில பேருடைய மண்டையை போட்டு குழப்பி விட்டுட்டான். இப்போ அதெல்லாம் எதுவுமே கிடையாது (அப் 15:4–31). பத்து கட்டளைகளில் ஒன்றான ஓய்வு நாளையும் சேர்த்து நியாயப் பிரமாணத்தின் எல்லா சடங்காச்சாரங்களில் இருந்தும் கிறிஸ்துவின் மரணம் நம்மை விடுதலை ஆக்கி, புதிய உடன்படிக்கையை நமக்கு கொடுத்திருக்கிறது (மத் 26:28). '***நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நம் நடுவில் இராதபடி சிலுவையின் மேல் ஆணி அடித்தார்***'னு கொலோ 2:14 சொல்லுதே. புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவனுக்கு இப்போ ஓய்வு நாள் பிரமாணம் எதுவும் கிடையாது.

சில அரேபிய நாடுகளில் வெள்ளிக்கிழமையை ஓய்வு நாளாக அனுசரிக்கிறாங்க. அந்த நாடுகளில் வெள்ளிக்கிழமைகளில் தான் சபை ஆராதனை நடைபெறுகிறது. வாரத்தில் ஒரு நாள் – அது எல்லோருக்குமே வசதியான, விடுமுறை நாளாக – அது வெள்ளியோ, சனியோ அல்லது ஞாயிறோ ஏதோ ஒரு நாளில் அனைவரும் கூடி ஆண்டவரை ஆராதிக்கவும், துதிக்கவும், வேதத்தை தியானிக்கவும் ஓய்வு நாளாக, பரிசுத்த நாளாக அனுசரிக்கிறது உங்களின் உடலுக்கும், உள்ளத்திற்கும், ஆவிக்குரிய ஜீவியத்துக்கும் நல்லது (ரோமர் 14:5,6). டாக்டர்களும் அப்படி வாரத்திற்கு ஒரு நாள் ஓய்வெடுப்பது நல்லதென்று கூறுகின்றார்கள்.

இன்றைக்கு நிறையப் பேரு IT கம்பெனிகளில், கால் சென்ட்டர்களில் வேலை செய்கின்றனர். அவங்களுக்கு வொர்க்கிங் அவர்ஸ், நேரம் காலம், சனி, ஞாயிறு என்றெல்லாம் ஒண்ணுமே கிடையாது. அவங்க அமெரிக்கன் நேரத்துக்கு தகுந்தாற் போல் இங்கு இந்தியாவில வேலை செய்யுறாங்க.

அதுனால தான் இந்தக் குழப்பமெல்லாம். 24 மணி நேரமும் மூன்று ஷிஃப்டுகளாக பிரித்து வேலை செய்கின்ற மில், பெரிய ஃபேக்டரிகள் இருக்குது. அவங்களுக்கு, வாரத்தில ஏதாவது ஒரு நாள் ஓய்வு நாளாக கிடைக்கும். ஞாயிறு தான் கிடைக்கும்னு சொல்ல முடியாது. அது எந்த நாளா இருந்தா என்ன?

*'ஒருவன் ஒரு நாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான். வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான். அவனவன் தன் தன் மனதில் முழு நிச்சயத்தை உடையவனாய் இருக்கக் கடவன்'*னு தெளிவா ரோமர் 14:5,6ல வேதம் சொல்லுதே. வாரத்தில ஒரு நாள் ஆண்டவருக்குன்னு ஒதுக்குங்க. வியாபாரம்கிறது உங்க கையில இருக்கு. வாரத்தில ஒரு நாள் கூட சர்ச்சுக்குப் போகாம, அன்னிக்கு கடையை அடைச்சா வியாபாரம் படுத்திடுமே, லாபம் குறைஞ்சிடுமேன்னு நினைச்சுக்கிட்டு அன்னிக்கும் கடையை திறந்து வச்சிங்கன்னா அது உங்களுக்கு நஷ்டத்தையே கொண்டு வரும். மாறாக வைராக்கியமா ஆண்டவருக்காக, சபை கூடி வருதலை விட்டு விடாதிருக்க கடையை இழுத்து மூடி ஜெபத்தில, வேத வாசிப்புல, தியானத்தில அந்த நாளை கழிச்சீங்கன்னா அது உங்களுக்கு ஆசீர்வாதமா இருக்கும்.

கே 77. கிறிஸ்தவர்கள் ஒரு அவசரத் தேவைக்காக கடன் வாங்கலாமா?

*"நீயோ கடன் வாங்காதிருப்பாய். கடன் கொடுப்பாய்'*னு வேத வசனம் சொல்லுது. உன் தேவைகளுக்கு நீ ஆண்டவரை நம்பு. விசுவாசத்தோடு காத்திரு. *'உன் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாய் இரு. அவரே உன் காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்'*னு சங் 37:5ல சங்கீதக்காரன் சொல்றான். அது மாத்திரமல்ல ஒரு காரியத்துக்கு ஊதாரித்தனமாவும் செலவு செய்யலாம். சிக்கனமாயும் செலவு செய்யலாம். ஒரு கல்யாணத்தை பல இலட்சங்கள் போட்டு அடுத்தவங்க மூக்கு மேல விரல் வைக்கும்படியா செய்யலாம். சிக்கனமா சில நூறு ரூபாயிலேயும் முடிக்கலாம். கடன் வாங்கிறது பெருசில்லை. அதை எபபடி அடைக்கப் போறீங்க? அதுக்கு என்ன பிளான் வச்சு இருக்கீங்க. எந்த சரியான, வகையான பிளானும் இல்லாம செயல்பட்டு வட்டிக்கு கடன் வாங்குனியானா அவஸ்தைப்படப் போறது யாரு? நீதான். இப்படி கடன் வாங்கிட்டு அவஸ்தைப்படுகிற எத்தனையோ கிறிஸ்தவர்களை நான் அறிவேன். அதே போல கடன் வாங்காம ஆண்டவரோட சமூகத்தில காத்திருந்து அற்புதமாக அவர்களுடைய தேவைகள் சந்திக்கப்பட்ட பல சாட்சிகளையும் நான் அறிவேன். சாய்ஸ் இஸ் யுவெர்ஸ்.

கே 78. கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களுக்கு கடன் கொடுக்கலாமா?

ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது வசதி வாய்ப்பு உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய கடமை. திக்கற்றவர்களுக்கு உதவி

செய்கிறவர்கள் கர்த்தருக்கே கடன் கொடுக்கிறார்கள் என வேதம் சொல்லுகிறது. அப்படி உதவி செய்கின்ற சமயத்தில அதை கடனாக கொடுக்காமல் உதவியாக செய்தால் உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாய் இருக்கும். அப்படி கொடுக்க முடியாத நிலையில் இடுக்கிப் போட்டு கந்து வட்டிக்காரன் போல அவர்களிடம் திரும்ப வசூலிக்காதீர்கள். எக்காரணம் கொண்டும் அவர்களிடம் வட்டி மட்டும் வாங்கி விடாதீர்கள். அது உங்களுக்கு ஆசீர்வாதமாக இராது.

கே 79. கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கு வட்டிக்கு கடன் கொடுக்கலாமா?

கடன் வாங்குகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் ஏன் அதை வாங்குகிறார்கள் என்று ஒரு நிமிடம் எண்ணிப் பாருங்கள். அவர்களால் முடியாத, இல்லாத ஒரு கஷ்ட நிலையில் தானே கடன் வாங்குகிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம் வட்டி வாங்குவது கொடுமை அல்லவா? அது ஈவு இரக்கமற்ற ஒரு செயல் அல்லவா? அப்படி கஷ்டப்படுகிறவர்களிடம், இல்லாதிருக்கிறவர்களிடம் வாங்குகிற வட்டி உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்குமா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

கே 80. பொழுது போக்கிற்காக, நட்புக்காக, காசு இல்லாம சீட்டு ஆடலாமா?

ஏன் உங்களுக்கு பொழுது போக மாட்டேங்குதா? எனக்கு 24 மணி நேரம் பத்த மாட்டேங்குதேன்னு கவலையா இருக்கு. 67 வயசுல மாசத்துக்கு 25–28 நாள் ஆண்டவரோட ஊழியத்துக்காக ஓடிக்கிட்டு இருக்கேன். நேரமும், காலமும் பொன் போன்றது. நீங்க எதை வேண்டுமானாலும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். ஆனா இழந்து போன காலத்தையும், நேரத்தையும், உங்க வாழ்நாட்களையும் ஒரு போதும் நீங்க் திரும்பப் பெத்துக்க முடியாது. சோம்பேறிக்குத் தான் பொழுது போகாது.

ஆண்டவரோட பணி இன்னும் எவ்வளவோ இருக்கு. நிறைய விளைஞ்சு கிடக்கு. அறுக்க ஆள் இல்லை. போயி நாலு பேருக்கு சுவிசேஷத்தை சொல்லு. இந்த தேசத்துக்காக, உங்க ஊருக்காக, சபைக்காக, மிஷனெரி ஊழியர்களுக்காக ஜெபி. உனக்கு பொழுதே இருக்காது. நட்புக்காக சீட்டு ஆடலாமான்னு கேக்குறியே. அப்படிப்பட்ட நட்பே உனக்கு வேண்டாம். சங் 1:1ன் படி நட. நல்ல ஆவிக்குரியவர்களோட நட்பு, ஃபெல்லோஷிப் வச்சுக்கோ.

கே 81. TV பார்ப்பது தப்பா? கிறிஸ்தவமல்லாத நல்ல புத்தகங்களைப் படிக்கலாமா?

கிறிஸ்தவங்க வீட்டில டி.வி இல்லாம இருக்கிறது நல்லது. அதுல பாக்கும்படியா என்ன புரோம்கிராம் இருக்கு? ஒண்ணு ரெண்டு

நல்லபுரோகிராம்கள் இருந்தாலும் ஊடாலேயே ரெண்டு மூணு விளம்பரத்தைப் போட்டு கெடுத்துப் போடுறாங்களே. எதைப் பார்த்தாலும் எல்லாத்திலேயும் ஆபாசம், அசிங்கம், தொப்புளையும், மார்பையும் காட்டிக்கிட்டு, ஒரு ஆட்டம், பாட்டம், சகிக்கலை. அந்த விளம்பரப் படத்தை எடுத்தவனை அப்படியே சுட்டுக் கொல்லலாம் போல கடுப்பு வருது. எதுக்கு அந்தக் கண்றாவியைப் பார்ப்பானேன். பிறகு நமக்கு அப்படியே ஒமட்டிக்கிட்டு வருவானேன்?

டிஸ்கவரி, ஜியோகிராபிக்ஸ், அனிமல் பிளானெட் போன்ற சில நல்ல சேனல்களும் டிவியில வரத்தான் செய்யுது. வரக்கூடிய முக்கால்வாசி கிறிஸ்டியன் சேனல்களும் ஆசீர்வாதம், ஆசீர்வாதம் பற்றியே தான் பேசிக்கிட்டு இருக்காங்க. பாவம், நியாயத் தீர்ப்பு, மனந்திரும்புதல் குறிச்சு எத்தனை சேனல்கள் செய்தி வெளியிடுது? நல்ல புரோகிராம்களை செலக்ட் பண்ணி எப்பவாவது பாக்குறது தப்பு இல்லை.

வீட்டில டிவியை வச்சுக்கிட்டு நீங்க செலக்ட் பண்ணி சில நல்ல புரோம்கிராம்களை பார்த்தாலும் அதுலயும் ரிஸ்க் இருக்கு. அது எப்படீன்னா சின்னக் குழந்தைகள் இருக்கிற வீட்டில சாக்லெட்டையும், இனிப்பையும் டாஃபியையும் அதுக்கு எதிர்த்தாப்பல வச்சுக்கிட்டு 'ஏய் அதை எடுக்காதே. இதைத் தொடாதே'ன்னு சொல்ற மாதிரித்தான் ஆகும். ஏன்னா குழந்தைகள் மத்த சேனல்களையும் பாக்கும்படியான ஒரு சூழ்நிலை ஏற்படும். ஜாக்கிரதை.

நல்ல புத்தகங்களை படிக்கலாம். நம்ம பைபிள்ல இல்லாத ஒரு விஷயமுமே கிடையாது. எல்லாமே இருக்குது. ***'அதை இரவும் பகலும் தியானம் பண்ணுகிறவன் பாக்கியவான்'***னு வேதம் சொல்லுது. வேதத்தை பல கோணங்களில் விளக்கி நல்ல கிறிஸ்தவ நூல்களையும், கிறிஸ்தவமல்லாத அறிவு சார்ந்த பல நூல்களையும் நாம் படிக்கணும். தினமும் நியூஸ் பேப்பரையும் படிக்கணும். அப்போதான் நாட்டு நடப்புகள் தெரியும். நம்மை சுத்தி என்ன நடக்குதுன்னு புரியும். பொது அறிவு வளரும். நம்மோட லாங்குவேஜ் இம்ப்ரூவ் ஆகும். ஆனா எல்லாத்தையும் செலக்ட் பண்ணித் தான் படிக்கணும். நெறைய குப்பைகளும் இருக்கு. கதைப்புத்தகங்கள், நாவல், குமுதம், ஆனந்த விகடன், குங்குமம், ரிப்போர்ட்டர், நக்கீரன் போன்ற வார இதழ்களை கையால கூட தொடாதீங்க.

கே 82.கூட்டுக் குடும்பத்தில் நான் மட்டும் தான் இரட்சிக்கப்பட்டு இருக்கேன்.குத்துவிளக்கு ஏற்றணும், சாமி படத்துக்கு பூப்போடணும், பொட்டு வைக்கணும்னு சொல்றாங்க.என்ன பண்ண?

உங்க புருஷன் உங்க கையில இருந்தா, உங்களுக்கு சப்போர்ட்டா உங்க சைடுல அவர் இருந்தா, மத்த யாரைப் பத்தியும் நீங்க கவலைப்பட வேண்டாம். எனக்கு இஷ்டமில்லை. நான் செய்ய மாட்டேன்னு அடிச்சு சொல்லிடுங்க. ஆனா உங்க வீட்டுக்காரர் உங்களுக்கு ஆதரவா இல்லைன்னா பிரச்சனை தான்.

ஆண்டவருக்காக நீங்க வைராக்கியமா நின்னீங்கன்னா கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாரு. ஆனா பாடுகள், உபத்திரவங்கள், கஷ்ட நஷ்டம், எதிர்ப்புகள் உங்களுக்கு அதிகமாகவே தான் இருக்கும். இந்தப் பாடுகள் வேண்டாம்னா நீங்க கொஞ்சம் ஞானமா தான் செயல்படணும். புரிஞ்சுக்காதவங்கிட்ட போயி இதை நான் செய்ய மாட்டேன்னு சொன்னா பிரச்சனைத் தான் வரும். இதுனால டைவோர்ஸ், தள்ளிவைப்பு, இரண்டாவது திருமணம் என பல கொடுமைகள் பலருக்கு நடந்திருக்கு.

குத்து விளக்கு ஏற்றியே ஆகணும்கிற ஒரு கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுச்சுன்னா, பல்லை கடிச்சுக்கிட்டு 'இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தில உன்னை சபிக்கிறேன் சாத்தானே'ன்னு சொல்லிட்டு பூவைப் போடுங்க, பொட்டு வையுங்க. உங்க மனசு முழுக்கும் இயேசு கிறிஸ்து நிறைஞ்சு இருக்காரு. பின்ன எதுக்கு கவலைப்படுறீங்க? அதுவுமில்லாம அது ஒரு சாதாரண பிரேம் போட்ட ஒரு படம், பேப்பரு. ***'அது ஒன்னுமே இல்ல'***ன்னு 1கொரி 8:4ம் சொல்லுதில்லையா? முழுக் குடும்பத்தினுடைய இரட்சிப்புக்காக கண்ணீரோட வேதனையோட ஜெபியுங்க.

'***கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்***'னு அப் 16:31ல ஆண்டவர் வாக்கு கொடுத்து இருக்காரே. '***நானும் என் வீட்டாருமோ என்றால் கர்த்தரையே சேவிப்போம். வேறே தேவர்களை சேவிக்கும்படி கர்த்தரை விட்டு விலகுகிற காரியம் எனக்கு தூரமாக இருக்கட்டும்***'னு விசுவாச அறிக்கையிடுங்க (யோசுவா 24:15,16). மனம் சோர்ந்து போகாம தொடர்ந்து ஜெபியுங்க. சமயத்தில் அவங்க மனம் திரும்ப பல வருஷங்கள் கூட ஆகலாம். ஆனா உங்க ஜெபத்துக்கு, கண்ணீருக்கு உங்களின் முழங்கால் ஜெபத்துக்கு பதில் கொடுப்பாரு.

இதையெல்லாம் செஞ்சீங்கன்னா கர்த்தர் உங்களை வாந்தி பண்ணிபோடுவாருனு யாராவது சொன்னாங்கன்னா, அதைப் பத்தியெல்லாம் நீங்க கவலையேபட வேண்டாம். இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லி அடுத்தவங்களுக்கு பேதிக்கு கொடுக்கிறதுன்னா சில பேருக்கு, சில ஊழியக்காரங்களுக்கே திருநெல்வேலி அல்வா சாப்பிடுற மாதிரி.

எனக்கு தெரிஞ்ச ஒரு பெரிய பாஸ்டர் இருக்காரு. அவருக்கு பெரிய சபையும் இருக்கு. அன்னிய தேவர்களின் பெயர்களைக் கூட வாயினால் சொல்லக் கூடாதுன்னு சொல்வாரு. ஒரு தடவை அவர் சபையில என்னை சாட்சி சொல்றதுக்கு கூப்பிட்டு இருந்தாரு. நார்மலா என்னுடைய சாட்சியில சில சான்ஸ்கிரிட் சுலோகங்களை சொல்லி அவைகள் அனைத்துமே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையே மகிமைப்படுத்துகிறது என வேத வசனங்களோடு சொல்லுவேன். அதை என்னுடைய சாட்சிப் புத்தகமான **'என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்விலும்'** கூட இப்போது வெளிவரும் பதிப்புகளிலும் எழுதி இருக்கிறேன்.

நான் அந்த சுலோகங்களை சொல்லி விளக்கம் கொடுக்க முயலும் போது டக்குன்னு என் தோளைத் தொட்டு போதும். அந்நிய தேவர்களின் பெயர்களை உச்சரிக்கவோ, இது போன்ற இந்து மத சுலோகங்களை எனது சபையில் சொல்வதற்கோ நான் அனுமதிக்க மாட்டேன்னு சொல்லிட்டாரு. நான் மேற்கொண்டு அதைப் பற்றி விளக்குவதற்கு கூட எனக்கு சந்தர்ப்பம் கொடுக்கலை. எனக்கு அப்படியே பளார்னு மூஞ்சில அடிச்ச மாதிரி ஆகிபிருச்சு. இது வரை எனது சாட்சியை 1300 சபைகளுக்கு மேலே சொல்லி இருக்கிறேன். அந்த சாட்சிகளில் இந்த சுலோகங்களையும் சொல்லியிருக்கிறேன். எல்லோருமே வெகுவாக அதை வரவேற்றுத் தான் இருக்கிறார்கள். என்னுடைய VCDயிலும் அதை அப்படியே சொல்லி இருக்கிறேன். அந்த சான்ஸ்கிரிட் சுலோகங்களுக்காகவே பலர் அந்த VCDஐ வாங்குகின்றனர். பல லட்சக்கணக்கானோர் அதை பார்த்திருக்கின்றனர். கேட்கின்றனர். யாருமே அதை ஆட்சேபித்ததில்லை. மாறாக இதெல்லாம் இதுவரைக்கும் நமக்கு தெரியாம போச்சேன்னு சொல்லி பாராட்டவே செய்கின்றனர். ஆனா இவர் அந்நிய தேவர்களின் பேரைக்கூட இங்கு சொல்லக்கூடாதுன்னு என்னை ஸ்டாப் பண்ணிட்டாரு. நாம இருக்கிறது விக்கிரஹ கோட்டையான தமிழ்நாட்டிலே. ஊர் பேரு, தெரு பேரு, நகர் பேரு, கடைப் பேரு மற்றும் 100க்கு 90 பேர்களின் பெயர்களும் விக்கிரஹங்களின் பெயராவே இருக்கு. அந்த பெயரை சொல்லாம இருக்க முடியுமா? இப்படி வகை தொகை இல்லாம பேசுறவங்க நெறையப் பேரு கிறிஸ்தவத்துக்குள்ளேயே இருக்காங்க. என்ன செய்ய?

கே 83. கிறிஸ்தவர்கள் நகை போட்டுக்கலாமா?

வேதாகம காலத்தில ஆண், பெண் இரண்டு பேருமே நகை போட்டிருந்தாங்க. பிரதான ஆசாரியரும் ஆபரணம் அணிந்திருந்தார் (யாத் 39:8–15). ரெபக்காளை ஈசாக்கிற்கு நியமிக்கையில் நகைகள் அன்பளிப்பாக கொடுக்கப்பட்டது (ஆதி 24:50–53). திருமணத்தில் நகைகளை பயன்படுத்தினார்கள் (ஏசா 61:10). யோசேப்புக்கும், தானியேலுக்கும் மொர்தெகாயுக்கும் மோதிரங்களும், சங்கிலிகளும் பரிசாக அளிக்கப்பட்டது என வேதம் கூறுகிறது (ஆதி 41:42, தானி 5:29, எஸ்தர் 8:2). வெளியரங்கமான அலங்காரத்தை விட, உள்ளார்ந்த அக அழகின் மேன்மையையே பவுலும் பேதுருவும் வலியுறுத்தி இருந்தாலும் (1 தீமோ 2:9,10, 1பேது 3:3–4), நகை போடுறதை பாவம், கூடாதுன்னு சொல்லலை.

'*ஒரு பெண் தன் ஆபரணத்தை மறப்பாளோ*'ன்னு ஏரே 2:32ல தேவனே கேட்கிறாரே. இப்படி சொல்லிட்டதுனால அம்மன் சிலைக்கு அலங்காரம் பண்ற மாதிரி ஒரு நகைக் கடைக்கு விளம்பர மாடல் மாதிரி குலுக்கிக்கிட்டு, மினுக்கிக்கிட்டு சபைக்கு போயிடாதீங்க. கழுத்து பத்திரம். டுவீலர்ல போறவங்க படக்குன்னு சங்கிலியை அத்துக்கிட்டு போயிடுவான். சங்கிலியை

இழக்கிறது மாத்திரமல்ல, உங்களோட சங்குக் கழுத்தையும் கூட இழக்க வேண்டி வரும். ஜாக்கிரதை. ஒரு செயினோ, கம்மலோ, ஒரே ஒரு வளையலோ போட்டுக்கிடுறதுல எந்தத் தப்பும் கிடையாது.

நகையை வெறுத்து யாராவது அவங்களாகவே அதைக் கழட்டிட்டாங்கன்னா, அதைப் பாராட்டணும், ஆனா அதையே ஒரு ஜெனரல் போதனையாக சபையில சொல்லி யாரையும் கம்ப்பெல் பண்றது நல்லதல்ல. கழட்டி எறிய வேண்டிய கோபம், தாபம், எரிச்சல், வைராக்கியம், வம்பு, வீம்பு, காமாந்தகார சிந்தனைகள் என இப்படி எத்தனையோ விஷயங்கள் நமக்குள்ளே இருக்கு. நகையை மட்டும் கழட்டிட்டதுனால நாம பரிசுத்தவான்களா மாறிட முடியாது. இது போன்ற எத்தனையோ விஷயங்களிலே தேவன் நம்மோடு இடைப்படலாம் (1 கொரி 6:12, 10:23).

கே 84. என் கணவர் இன்னும் இரட்சிக்கப்படலை. எவ்வளவோ ஜெபம் பண்ணிட்டேன். என்ன செய்ய?

'*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்*'னு அப் 16:31ல ஆண்டவர் உங்களுக்கு வாக்கு கொடுத்திட்டாரு. சில பேரை உடனே இழுப்பாரு. சில பேரை கொஞ்சம் விட்டுப் பிடிச்சு கொக்கி போடுவாரு. மனந்தளராம, தொடர்ந்து, விடாப் பிடியா அவருக்காக ஜெபம் பண்ணுங்க. அவர் இயேசுவை ஏத்துக்கிடலையேன்னு அவருக்கு வேண்டிய சவரட்ஷணைகளை எதுவும் செய்யாமலும், அதுல எந்தக் குறையுமில்லாமலும் பாத்துக்கோங்க. அவர் மேல அன்பு காட்டாமலோ, கீழ்படியாமலோ, எதிர்த்துப் பேசாமலோ, அவரோட தாம்பத்திய ஆசைகளுக்கு இணங்காம முரண்டு பிடிச்சுக்கிட்டோ இருக்காதீங்க.

'*மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்கு கீழ்படிந்திருங்கள். அப்பொழுது யாராவது அவர்களில் திருவசனத்திற்கு கீழ்படியாதவர்களாயிருந்தால், பய பக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கைகளை அவர்கள் பார்த்து, போதனை இன்றி, மனைவிகளின் நடக்கைகளினாலே அவர்களை ஆதாயப்படுத்திக் கொள்வார்கள்*'னு பேது 3:1, 2ல சொல்லப்பட்டு இருக்கே. அவர் மனந்திரும்ப முதல்ல அவருக்கு நல்ல மனைவியா பரிபூரணமாக கீழ்படியுங்க. பய பக்தியோட இருங்க. கற்புள்ளவர்களாக இருங்க. உங்கள் நடக்கைகள், அவருக்கு பிரீதியாக, அன்பாக இருக்கட்டும். இவைகளைப் பார்த்தே மனுஷன் வந்து விழுந்திடுவாரு. எங்கே போயிடுவாரு? உங்க ஜெபத்துக்கு ஆண்டவர் கண்டிப்பா பதில் கொடுப்பாரு. தொடர்ந்து விசுவாசத்தோட '*நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்*'னு அறிக்கையிடுங்க (யோசுவா 24:15,16).

கே 85. வியாதியில கஷ்டப்படுறதுக்காகவா ஆண்டவர் நம்மைப் படைச்சாரு?

இல்லை. நம்மை ஆரோக்கியமானவனாகவே படைச்சார். மனுஷன் செஞ்ச பாவத்தினால் வியாதியும் சாபத்தின் ஒரு பகுதியாக அவனுக்கு வந்துச்சு. ஆனா பாவத்தினால தான் வியாதி வருதுன்னு சொல்ல மு…ாது. என்னா பாவத்தை ஒட்டு மொத்தமா குத்தகைக்கு எடுத்து …வத்திலேயே ஜீவிக்கிறவங்க எத்தனையோ பேரு எந்த நோயுமேயில்லாம நல்லா கொழுகொழுன்னு ஜம்முன்னு இருக்குறாங்களே. வியாதிகள் வர்றதுக்கு பல காரணங்கள் இருக்கு. பிசாசுனால வரலாம் (யோபு). சுத்தமற்ற உணவு, தண்ணீர், சுற்றுப்புறம், கொசு, இவைகள்னாலேயும் வரலாம். டயத்துக்கு சாப்பிடாம, சரியா ஓய்வு எடுக்காம, வேளை கெட்ட வேளையில சாப்பிட்டு உடம்பை சரியா கவனிக்காம, அலட்சியப்படுத்துறதுனாலேயும் வியாதி வரலாம். அப்பா அம்மாவுக்கு இருக்கிற சில வியாதிகள் பரம்பரையாவும் வரலாம். நோய் எதிர்ப்பு சக்தி உடம்புல குறைஞ்சாலும் வரலாம்.

தேவன் நமக்கு யோகோவா ரப்பாவாக சுகம் அளிப்பவராக இருக்கிறார் (யாத் 15:26). அவரது குமாரனாகிய இயேசுவைக் கொண்டு எல்லாவிதமான நோய்களையும் குணப்படுத்தினார். அவரைத் தொட்டவர்களும் சுகம் பெற்றாங்க. அவர் நமது பாவங்களையும் ரோகங்களையும் சுமந்தார்னு ஏசா 53:4,5லேயும் பாக்குறோம். அவரோட தழும்புகளால், இரத்தத்தால் குணமாகிறோம். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்னு வேதம் சொல்லுது. வியாதிப்படும் போது சபை மூப்பர்களை வரவழைத்து எண்ணை பூசி ஜெபிக்க வேண்டும் என்றும் வேதம் சொல்லுது. பொதுவாக நாம விசுவாசிக்கும் போது சுகம் பெறுவோம் (யாக் 5:14–16).

சில சமயத்தில ஆண்டவர் குணமாக்காமலும் இருக்கிறார். பவுல் மூன்று தடவை கேட்டும் அவர் மாம்சத்தில் இருந்த முள்ளை எடுத்துப் போடலை. என் கிருபை உனக்குப் போதும்னு சொல்லிட்டாரு (2 கொரி 12:7–10). அத்தனை அற்புதங்களை செய்த எலிசா வியாதியிலேயே மரிச்சான் (2 இரா 13:14). தீமோத்தேயு (1 தீமோ 5:23), எப்பாப்பிரோதித்து (பிலி 2:25–27) என இப்படி எத்தனையோ பரிசுத்தவான்கள், நீதிமான்கள் வியாதியில கஷ்டப்பட ஆண்டவர் விட்டுருக்காரு. ஏன் இப்படி கஷ்டப்பட விடுறாரு? நீதிமானை சோதித்து அறிகிறாரா? இன்னும் அவரை கிட்டிச் சேரணும்கிறதுக்காக இப்படிச் செய்யுறாரா? சில நீதிகளை இங்கேயே சரிக்கட்டுகிறாரா? நம்முடைய சிற்றறிவுனால புரிஞ்சுக்கிட முடியாது. நாம் அவரோட புள்ளைங்க. நன்மையானது எதுவுமே அவர்கிட்ட இருந்தே வருகிறது. துன்பமோ, துயரமோ, கஷ்டமோ நஷ்டமோ, சகலமும் அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாகவே இருக்கும் (ரோ 8:28) என்று விசுவாசிப்போம்.

86. பிள்ளைகள் சொன்னபடி கேக்க மாட்டேங்குதுங்க. பயங்கர டென்ஷன் ஆகுறேன். என்ன செய்ய?

பிள்ளைங்க தவறு செய்யும் போது அவங்களை கண்டிக்கிறதோ, தண்டிக்கிறதோ தவறு இல்லை. அதுக்காக எடுத்த உடனேயே கையை நீட்டுறதோ, பிரம்பை எடுக்கிறதோ கூடாது. முதல்ல அன்பா சொல்லுங்க. அப்புறம் நீ செய்யுறது தப்பு, எனக்குப் பிடிக்கலை. இயேசப்பா புள்ளைங்க இப்படிச் செய்ய மாட்டாங்கன்னு கண்டிப்பா சொல்லி திருத்தப் பாருங்க. அப்படியும் கேக்கலையா அதுக்குப் பிறகு நாலு சாத்து சாத்துங்க. '*உன் மகனை சிட்சை செய்*'னு நீதி 29:17 சொல்லுது. '*பிள்ளையாண்டனை நடத்த வேண்டிய வழிகளிலே அவனை நடத்து. அதை அவன் தன் முதிர்வயதிலும் விடாதிருப்பான்*'னு நீதி 22:6ம், '*பிரம்பும் கடிந்து கொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும். தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான்*'னு நீதி 29:15ம் சொல்லுது.

ஆசாரியன் ஏலி தன் பிள்ளைகள் செய்கிற பாவங்களை அறிஞ்சும் அவங்களை கண்டியாமல் 'கர்த்தர் பார்த்துப் பாரு'ன்னு விட்டுட்டான். ஏலியும் செத்து விழுந்தான். பிள்ளைகளையும் தேவன் சாகடிச்சாரு. கண்டிக்க வேண்டிய சமயத்தில அவங்களை கண்டிச்சு, தப்பு செய்யுறதுக்கு மனசுல ஒரு பயத்தை புள்ளைங்க மனசுல உண்டாக்கணும். யோபு தன் புள்ளைங்க எந்தத் தப்புமே பண்ணாம இருந்த போதே அவங்களைக் கூப்பிட்டு முன்னெச்சரிக்கையா பலிகளை செலுத்தி அவர்களைப் பண்படுத்தினான் (யோபு 1:4–5). மனோவா தனக்கு குழந்தை பிறக்குறதுக்கு முன்னாடியே ஆண்டவரிடம் அந்தக் குழந்தையை எப்படி வளர்க்கணும்னு கேட்டான் – நியா 13:12.

சின்னப் புள்ளைங்களை அதுகளுக்கு விபரம் தெரிகிறதுக்கு முன்னாடியே சில பெற்றோர்கள் அதுங்க அழுதா உடனே அடிப்பாங்க. அது தப்பு. எதுக்கு, ஏன் அழுகுதுன்னு கண்டுபிடிங்க. வியாதியினாலேயோ, பயந்தோ, பூச்சி எதுவும் கடிச்சோ, வயிற்று வலியினாலேயோ எதுனாலயாவது அழுகலாம். மூணு வயசுக்கு முன்னாடி தப்பு செய்கிறோம்கிற ஒரு உணர்வு அந்த குழந்தைகளுக்கு தெரியாது. அந்த வயசுக்கு பிறகு தப்பு பண்ணினா அன்போட திருத்தணும். அப்புறம் கண்டிச்சு திருத்தணும். அப்படியும் கேக்கலைன்னா இரண்டு போடு போடுங்க.

கணவன் பிள்ளையைக் கண்டிக்கும் போது மனைவி கம்முன்னு இருக்கணும். ஊடால போயி தடுக்கக் கூடாது. அதே போல மனைவி புள்ளையை அடிச்சா புருஷன் ஒதுங்கிடணும். யாருக்காவது ஒருத்தர் கிட்ட புள்ளைகளுக்கு பயம் இருக்கணும். '***பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான். அவன் மேல் அன்பாய் இருக்கிறவனோ அவனைத் தண்டிக்கிறான்***' – நீதி 13:24. '***பிள்ளையை தண்டியாமல் விடாதே. அவனைப் பிரம்பினால்***

அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதுனால் பாதாளத்திற்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே' – நீதி 23:13–14.

1. சமூக வாழ்வு

கே 87. கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களோடு பழகலாமா?

கண்டிப்பா பழகணும். அன்பு காட்டணும்., நாம கிறிஸ்துவுக்குள்ள வந்தாப் பிறகு நமக்குள்ளும், நம் வாழ்க்கையிலும் ஏற்பட்டு இருக்கும் சிறந்த மாற்றங்களை அவர்களும் புரிந்து கொள்ளும்படி நடந்து அவர்களுக்கும் 'இந்த இயேசு நமக்கும் வேண்டும்' என்ற ஒரு ஆசையை தூண்டும்படி நாம நடக்கணும். அவங்களோட நெருங்கிப் பழகணும். அவங்களையும் பரலோக பிரஜைகளாக மாத்துறதுக்கு அவங்களோட பழகினாத் தானே முடியும்? அவங்களை விட்டு விலகி, நாம பிரிஞ்சு இருந்தா இது சாத்தியமா? எல்லா மனுஷரையும் நம் தேவன் தானே படைச்சாரு? எல்லாருமே அவருக்கு சொந்தமானவங்க தானே. எந்த பாரபட்சமே இல்லாம எல்லாருக்குமாகத் தானே அவர் சூரிய ஒளியையும் மழையையும் தருகிறார் (மத் 5:45).

உலகத்தையும், அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினார் அவர். எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும் கொடுக்கிறவர் அவர் தான். மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் அவர் குடியிருக்கப் பண்ணி இருக்கிறார். அவருக்குள் நாம் அத்தனை பேருமே பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்னு வேதம் அப் 17:24–28ல சொல்லுதே. அவங்களோட பழகணும். நம்ம வழிகளை அவங்க பிடிச்சுக்கும்படியா நாம் பழகணும். அவங்களோட பொல்லாத வழிகளை நாம கத்துக்கிடாதபடிக்கு ரொம்ப ஜாக்கிரதையா, கவனமா இருக்கணும். நாமும் பாவிகளை நேசிக்கணும். பாவத்தை வெறுக்கணும். அதைத் தானே இயேசுவும் செஞ்சாரு. அதுனால தானே அவரை 'பாவிகளின் நண்பன்'னு பட்டப் பெயரையே கொடுத்தாங்க (லூக்கா 7:34). பாவிகளோடு அவர்களின் விருந்துகளிலும், கொண்டாட்டங்களிலும் அவர் கலந்துக்கிட்டாரே (மத் 9: 10–12).

'மாறுபாடுள்ள சந்ததியை விட்டு விலகி உன்னை இரட்சித்துக் கொள்'–அப் 2:40. அப்படின்னா அதுக்கு அர்த்தம் சங் 1:1ல் ***'துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில்***

*உட்காராமலும்...'*னு சொல்லப்பட்டு இருக்கே. இது போன்ற ஆட்களோட தான் நாம பழகக்கூடாதுன்னு வேதம் சொல்லுது. புற ஜாதி மக்களோடயும் நாம பழகினாத் தானே நாம சத்தியத்தை அவங்களுக்கு சொல்ல முடியும். *'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறியவும் அவர் சித்தமுள்ளவராக இருக்கிறார்'* (1தீமோ 2:4). *'எல்லா தேசத்து மனுஷரும், ஜாதிகளும், கோத்திரங்களும் பாஷைக்காரரும் அவருடைய சிங்காசனத்துக்கு முன்பாக நின்று நம்மைப் படைத்தவரை ஆராதிக்கும் பாக்கியம் பெற வேண்டும்'*னு வெளி 7:9 சொல்லுதே. ஆண்டவரோட சித்தத்தை நிறைவேற்ற, அவரோட இராஜ்யத்தை கட்டி எழுப்ப நாம எல்லா புற ஜாதிகளோடும் நட்போடு, அன்போடு பழகி ஆகணும்.

கே 88. இந்து நண்பர்கள், உறவினர்கள் தீபாவளி பலகாரம் கொடுத்தால் சாப்பிடலாமா?

நம்மைச் சுற்றி இருக்கிறவங்க எல்லாருமே இந்துக்கள் தான். அவங்களோட பழகி நாம அவங்களையும் இரட்சிப்புக்குள் வழி நடத்த வேண்டிய கடனாளிகளாக இருக்கிறோம். நம்ம வீட்டு விசேஷங்கள், பிறந்த நாள், திருமண நாள், கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்கு அவங்களை நாம கூப்பிடுகிறோம். அவங்க சந்தோஷமா வர்றாங்க. நாம கொடுக்கிறதை சாப்பிடுறாங்க. ஆனா நாம அவங்க வீட்டு விசேஷங்களுக்குப் போகும் போது நம்மை சாப்பிடச் சொன்னா, அந்த ஆகாரத்தை, பலகாரம், பட்சணங்களை விக்கிரஹங்களுக்கு படைச்சிருப்பாங்களோங்கிற தயக்கம், சந்தேகத்தில வேண்டாம்ங்கிறோம். அப்போ அவங்க மனசு புண்படுது. இவங்க அநியாயத்துக்கு ரொம்ப சுத்தம், பரிசுத்தம், புனிதம், தீட்டுன்னெல்லாம் பாக்குறாங்க. என்னமோ இவங்க கும்பிடுகிற தெய்வம் தான் உசத்தி. மத்ததெல்லாம் ஒண்ணுமே இல்லேன்னு நினைக்கிறாங்க என்ற ஒரு நெனைப்பு அவங்க மனசுல வரும்படியா நாம நடந்துக்கிடுறோம். இது சரியா தப்பா? உண்மை நிலை என்ன? வேதம் என்ன சொல்லுது பாப்போம்.

இது விஷயமா பவுல் 1கொரி 8,10 அதிகாரங்களிலே தெளிவாவே எழுதியிருக்காரு. அதை ரொம்ப சுருக்கமா, நட்ஷெல்லாத் தர்றேன்.

சரியா உண்மையா சொல்லப் போனா விக்கிரஹம்கிறது *'ஒண்ணுமே இல்லை'* (1கொரி 8:4, ஏசா 37:19, எரே 16:20). அது ஒரு சாதாரணக் கல்லு. உலோகம். அப்படின்னு நினைச்சுக்கிட்டு சாப்பிட்டீங்கன்னா விக்கிரஹத்துக்கு படைக்கப்பட்ட எதுவும் நம்மை கறைப்படுத்தாது. தீட்டுப்படுத்தாது. கடைகளிலே ஹோட்டல்களிலே செய்கிற பலகாரங்கள், இனிப்பு, உணவு வகைகளை அவங்க சாமி படத்துக்கு முன்னாடி படைச்சுட்டுத் தான் விற்பனைக்கே கொண்டு வர்றாங்க. *'பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது'*.

'விற்கப்படுகிற எதையும் ஒன்றையும் விசாரிக்காம நாம வாங்கிச் சாப்பிடலாம்' (1கொரி 10:25,26,27). கசாப்புக் கடையிலே நம் முஸ்லீம் சகோதரர்கள் கோழி, ஆடுகளை அறுக்கிறதுக்கு முன்னாடி ஓதுவாங்க. ஓதி ஹலால் பண்ணினாப் பிறகு தான் விக்கிறாங்க. அதை வாங்கி, சமைச்சு சாப்பிடும் போது நமக்கு ஒன்னும் ஆகாது. ஏன்னா படைப்பின்படி மிருகம், பறவைகள், செடி, கொடி, மரம் எல்லாமே நம்மோட ஆண்டவருக்கு சொந்தமானவைகள். நாம அவருக்கு சொந்தம்! அதுனால இவை எல்லாமே நாம அனுபவிக்கத் தான்! ***'எல்லாமே திருவசனத்தினாலும் துதி ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படுகிறது'*** – என வேதம் 1 தீமோ 4:4,5 சொல்லுது.

அதே சமயத்தில நாம இந்து கோவில்களுக்கு உள்ளே போகவும் கூடாது. அங்கே கொடுக்கிறதை வாங்கி சாப்பிடவும் கூடாது. விக்கிரஹங்கள் எல்லாமே ஒண்ணுமே இல்லைன்னு சொன்னாலும், பவுல் அவைகளை 'பேய்கள்' என்றே அழைக்கிறார். அந்த விக்கிரஹங்களுக்கு படைக்கப்பட்டவைகள் புனிதப்படுகின்றன என்ற நினைப்போடு உங்களுக்கு தர்றாங்க. அதுனால அதை 'ரொம்ப ரொம்ப பொல்லட்டா' வேண்டாம்னு சொல்லிடுங்க. அவங்க மனசை புண்படுத்த வேண்டாம்னு நெனைச்சீங்கன்னா அதை பேசாம வாங்கி, நீங்க சாப்பிடாம, உங்க வீட்டு புற ஜாதி வேலைக்காரங்களுக்கோ அல்லது ஏழை எளியவர்களுக்கோ, பிச்சைக்காரர்களுக்கோ 'கொடுத்தவர்களுக்கு தெரியாம' கொடுத்திடுங்க.

அந்த விக்கிரஹங்களுக்கு பலியிடப்பட்ட ஆடு, மாடு, கோழி, அதுல செஞ்ச பிரியாணி, குழம்பு, கறி வகைகளை சாப்பிடக் கூடாது. அவைகளுக்காக உடைக்கப்பட்ட தேங்காய், பழம், கல்கண்டு, தீர்த்தம், விபூதி, குங்குமம், சந்தனம் இவைகளைத் தொடாதீங்க. நமக்கு பரிமாறப்படுகிற எந்த ஆகாரத்தையும் அது விக்கிரஹங்களுக்கு படைக்கப்பட்டதுன்னு தெரியாம, உணராம இருக்கிற நிலையில நாம அதைச் சாப்பிடலாம். அதுல எந்தத் தப்பும், தீட்டும் கிடையாது. ஆனா இவ்வைகள் அந்த பேய்களுக்கு படைக்கப்பட்டதுன்னு தெரிஞ்சாப் பிறகோ அல்லது அப்படி நாம சாப்பிடுகிறது ஆவியில பலவீனப்பட்டு இருக்கிற மற்றொரு சகோதரனுக்கு இடறல் உண்டாக்குவதாக இல்லாதபடி பாத்துக்கிடணும் (1கொரி 8:9,12).

நாம எதைச் செஞ்சாலும், குடிச்சாலும் (மது அல்ல) புசித்தாலும் ஸ்தோத்திரத்தோட எல்லாத்தையும் தேவ மகிமைக்கென்றே செய்யுங்க. அப்ப நாம செய்யுறது நம்மோட சுய பிரயோஜனத்துக்காக இல்லாம, அனேகருடைய பிரயோஜனத்துக்காகவும், அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கும், எல்லோருக்கும் பிரியமாய் இருக்கும்படிக்கும், சபைக்கும் சபை மக்களுக்கும் எவ்வித இடறலும் உண்டாக்காதபடிக்கும் இருக்கட்டும் (1கொரி 10:30–33).

கே 89. பொங்கல், உழவர் திருநாளைக் கொண்டாடலாமா?

பொங்கல் திருநாள் என்பது ஒரு அறுவடைத் திருநாள். ஒரு விவசாயி தன் உழைப்பிற்கேற்ற பலனை பெற்றுக் கொண்டதை கொண்டாடும் நாள் அது. அதே போல தான் உழவர் திருநாள், மே 1ம் தேதியான தொழிலாளர் தினமும். இவைகளை நாம கொண்டாடுறதுல எந்தத் தவறும் கிடையாது. உழைப்பவர்களை உற்சாகப்படுத்துகிற நாள் அது. விளையச் செய்கிறவர் கர்த்தர். விளைஞ்சதைக் கர்த்தருக்கு காணிக்கையாக்குவோம். புற ஜாதி மக்களைப் போல விளைஞ்சதை சூரிய பகவான், 'அது இதுக்கெல்லாம் படைக்கப்படாது. சூரியனையும், சந்திரனையும் இந்த பிரபஞ்சத்தையும், அத்தனை கோள்களையும் படைச்சவரு நம்ம தேவன். அவருக்குத் தான் எல்லாத்தையும், முதற் பலனா படைக்கணும், காணிக்கையாக்கணும். *'தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனியிலும் தசம பாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது. அது கர்த்தருக்கு பிரியமானது'* என்று லேவி 16:2 சொல்லுதே.

கே 90. கிறிஸ்தவர்கள் நல்லநாள், நல்ல நேரம் எல்லாம் பாக்கலாமா?

நம்ம ஆண்டவர் படைக்கும் போது நல்ல நாள், கெட்ட நாள்னு ஏதாவது பிரிச்சு வைச்சு படைச்சிருக்காரா? இது நல்ல நேரம், அது கெட்ட நேரம்னு எங்கயாவது சொல்லியிருக்காரா? இதெல்லாம் சில பேரு பொழப்பு நடத்தணும்கிறதுக்காக கண்டுபிடிக்கப்பட்ட நியதிகள். தேவன் பூமியையும், வானத்தையும், இரவையும், பகலையும் உண்டாக்கினார். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், சமுத்திரம், புல் பூண்டு, மரம், செடி, கொடி, பறப்பன, ஊர்வன, நடப்பவை என எல்லா காட்டு, நாட்டு மிருகங்களையும், பறவைகளையும், மச்சங்களையும் படைச்சாரு. இப்படி ஒண்ணு ஒண்ணா படைச்சிட்டு மனுஷனையும் கடைசியில உண்டாக்கிட்டு எல்லாமே 'நல்லது' என்றும், நன்றாக இருக்கிறது என்றும் கண்டார்னு தானே வேதம் சொல்லுது.

கிறிஸ்தவர்கள் கல்யாணத்துக்கு, கிரஹப் பிரவேசத்துக்கு, இண்டர்வியூ, வேலைக்கு போறதுக்கு, பிள்ளைப் பெத்துக்கிடுறதுக்குன்னு நல்ல நாள், நல்ல நேரம்னு ஏதாவது பாத்தாங்கன்னா அதுலேந்து அவங்களுக்கு கெட்ட நேரம் ஆரம்பிச்சுடுச்சுன்னு அர்த்தம்.

கே 91. சகுனம் பார்க்கலாமா?

உதைக்கணும். சகுனம் ஏதாவது பாத்துக்கிட்டு போனியானா உனக்கு ஆக்சிடெண்ட் தான் நடக்கும். உருப்படியா கை கால்களோட திரும்ப மாட்டே. ஜாக்கிரதை. வெளியிலே போகும் போது நல்லா ஜெபம் பண்ணிட்டுப் போ. கர்த்தர் உன் கோணலான எல்லாப் பாதைகளையும் செம்மையாக்குவார். அவர் சமூகம் உனக்கு முன்னாடிப் போகும். உன் வழியெல்லாம் அவர் தன் தூதர்களைக் கொண்டு காப்பாரு.

கே 92. 'மணி பிளாண்ட்' செடியை வீட்டில வளர்த்தா பணம் நிறைய வரும்னு சில பேரு வச்சிருக்காங்களே.

மூட நம்பிக்கைக்கு ஒரு அளவே கிடையாதா? இதை நம்பிக்கிட்டு அதுக்காக அந்த செடியை வளர்க்கிறவங்களுக்கு பைபிள் எதுக்கு? ஆண்டவர் செல்வங்களையும் பொக்கிஷங்களையும் ஒரு சாதாரண செடியிலயா கொண்டு போயி வப்பாரு? சொல்றவன் தான் சொன்னான்னா கேக்கிறவனுக்கு புத்தி எங்கே போச்சு? கழுத்து வரைக்கும் கடன் வாங்கி, விழி பிதுங்கிப் போயி நிக்கிற நாலு பேருக்கு இந்த 'மணி பிளாண்ட்' செடியை வாங்கி பிரசெண்ட் பண்ணி அவங்க கடன் தொல்லை எல்லாம் தீருதான்னு செக் பண்ணுங்களேன். கொடுமைடா.

அழகுக்கு அலங்காரத்துக்கு, பாக்குறதுக்கு கண்ணுக்கு குளிர்ச்சியா, பசுமையா இருக்கிறதுக்காக வாங்கி வையுங்க. நிறைய பூச்செடிகள், மரம், தென்னை, மா, பலா, எலுமிச்சை, கொய்யா, வாழை, பப்பாளி, கருவேப்பிலை, துளசி போன்ற செடி கொடிகளை வச்சு தோட்டம் போடுங்க. வீட்டை சுத்தி இடம் இல்லைன்னா, மொட்டை மாடியிலேயே இப்பல்லாம் காய்கறி தோட்டமே போடுறாங்க. செய்யுங்க. உழைக்கிறதுனால உடம்புக்கும் தெம்பு, உள்ளத்துக்கும் உற்சாகம், காய்கறி செலவும் மிச்சப்படும். செய்யுங்க.

கே 93. திருமணத்திற்கு சபையின் சிறப்புக் கூட்டங்களுக்கு வாழை மரம், மாவிலை தோரணம் கட்டலாமா? கோலம் போடலாமா?

தாராளமா செய்யுங்க. செய்யக் கூடாதுன்னு பைபிள்ல எங்கயாவது சொல்லி இருக்கா? இல்லையே. ***'பரிசுத்த அலங்காரத்துடனே தொழுது கொள்ளுங்கள்'*** னு தான் வேதம் சொல்லி இருக்கு. இது இருதய பரிசுத்த அலங்காரம் மட்டுமில்லை, நடை, உடை போன்ற வெளி அலங்காரம், சபை அலங்காரம் எல்லாத்துக்கும் தான். புற ஜாதி மக்கள் அவங்க வீட்டு விசேஷங்களில் வாழைமரம், மாவிலை தோரணம் கட்டுறாங்கன்னா அது விக்கிரஹ ஆராதனை அல்ல. ஒரு அலங்காரத்துக்கு, அழகுக்கு வாழைமரம் வைக்கப்படுது. இந்த வாழை ஒண்ணுதான் காய், பழம், பூ, இலை, தண்டு, நார் வாழை மரத்தின் சாறுன்னு எல்லாமே பயனுள்ளதா, எதுவுமே வேஸ்ட் ஆகாம, முழுமையா உபயோகமாகிற ஒரு மரம். அப்படி இவங்க வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளும் மற்றவர்களுக்கு பயனுள்ளதா இருக்கட்டும்னு வைக்கிறது ஒரு தப்பா? அது விக்கிரஹ ஆராதனையா? கிடையாது.

அரிசி மாவுக் கோலம் பாக்குறதுக்கு அழகா இருக்கிறதோட, அது எறும்புகளுக்கும் உணவு ஆகுது. இது அத்தனைக்கும் மேல, நம்ம கிறிஸ்தவத்தை இன்னும் நிறையப் பேரு இது ஒரு வெளி நாட்டு மதம், இயேசு கிறிஸ்து ஒரு வெளி நாட்டுக் கடவுள் நினைச்சுக்கிட்டு இருக்காங்க. ஏன்

தெரியுமா? நாம கிறிஸ்தவத்தை நம்ம நாட்டு, தேசத்து கலாச்சாரத்தோட ஒட்ட விடலை. இந்தியாவில் கிறிஸ்தவம் இன்னும் வேகமா, அதிகமா எல்லா புற ஜாதிகளாலும் ஏற்றுக் கொள்ளப்படாம இருக்கிறதுக்கு இதுவும் ஒரு காரணம். சுவிசேஷம் பரவ நான் எல்லோருக்கும் எல்லாமும் ஆனேன்கிற (1 கொரி 9:20–23) பவுலுக்கு இருந்த அந்த ஆத்தும பாரம் நம்மகிட்ட இல்லை.

உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? சைவமும், வைணவமும் கி.பி.52ல புனித தோமா இந்தியாவுக்கு வந்து கிறிஸ்துவ நற்செய்தியை பரப்பியதை ஏற்றுக் கொண்டு நமது திராவிட கலாசாரம் முறைமையின் படி உருவாக்கப்பட்டது தான் என்று சொன்னால் நம்புவீர்களா? மாட்டீங்க. ஆனா அதுதான் உண்மை என்பதை பல ஆதாரங்களோடு ஒப்புவமையோடு *'சைவமும், வைணவமும் கிறிஸ்தவமே'* என்று ஒரு நூலை எழுதிக் கொடிருக்கிறேன். இந்துக்களின் வழிப்பாட்டு முறைகள், திரு நீறு பூசுதல், சந்தனம், குங்குமம் வைத்தல், நாமம் போடுதல், கோயில்களின் அமைப்பு, கோயில் பூசாரி மணி அடித்துக் கொண்டு போகுதல், தேங்காய் பழம் உடைத்தல், பலிபீடம் இருந்தும் பலி கொடாமல் இருத்தல், தேவன் ஒருவரே, அவர் திரியேக தேவனாக இருக்கிறார் என்ற கடவுட் கொள்கை, பாவம் போக்க கடவுள் மனித அவதாரம் எடுத்தல் போன்ற பல விஷயங்களை விளக்கி எழுதிக் கொண்டிருக்கிறேன். நீங்க பின்பற்றிக் கொண்டிருப்பது கிறிஸ்தவ உபதேசங்களையே, கும்பிடுவது கிறிஸ்துவையே. வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளதின் நிழலாக, நிழலாட்டமாக, அந்த அர்த்தத்தோடு செய்கிறீர்கள் என்று அவர்களுக்கு புரியவைத்தால், நீங்கள் டுப்ளிக்கேட்டை, நிழலைப் பின்பற்றுகிறீர்கள். ஒரிஜினல் இதோ இங்கே இருக்கிறது என அவங்களுக்கு விளக்கிச் சொன்னா அவங்களை எளிதாக இரட்சிப்பிற்குள் வழி நடத்தலாம். கூடிய விரைவிலேயே இந்த நூல் வெளிவர ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கிறிஸ்மஸ்க்கு வெறும் கேக்கு மட்டும் தான் செய்யணுமா? வெளி நாட்டுக்காரர்களுக்கு வேறு எதையும் செய்யத் தெரியாது. ஆனா நாம வேற எதைக் கண்டுபிடிச்சமோ இல்லையோ இந்த அரிசியிலும், பருப்பிலேயும் விதவிதமா வக்கனையா திங்கிறதுக்கு 108 வகை பலகாரம், பட்சணங்களை செய்ய முடியும்னு இந்த உலகுக்கே காட்டி இருக்கோமே. கிறிஸ்மஸுக்கு முறுக்கு, சீடை, தட்டை, அதிரசம், மைசூர் பாகு என நம்ம ஊர் பலகாரங்களை செஞ்சு அக்கம்பக்கத்தில கொடுத்தா இயேசு கிறிஸ்து ஒண்ணும் நம்மள கோவிச்சுக்கிட மாட்டாரு. பாராட்டவே செய்வாரு. இப்படி செஞ்சா கிறிஸ்தவ பண்டிகைகளை, கிறிஸ்தவத்தை புறஜாதிகள் அந்நியமாக நினைக்க மாட்டாங்க.

அப்படி கொடுக்கும் போது நான் எழுதியுள்ள *'என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும்'* என்ற நூலையோ, 'சித்தர்கள் கண்ட மெய்ப் பொருளை'யோ, என்னுடைய காட்சி VCD யோட சேர்த்துக் கொடுங்க. எல்லாமே பத்து ரூபாய் தான். அப்படி கொடுக்கிறதுக்கு முன்னாடி ஜெபியுங்க. கொடுத்திட்டு வந்தாப்

பிறகும் அவங்களுக்காக தினம் ஜெபியுங்க. கர்த்தர் கிரியை செய்வாரு. ***'தண்ணீரின் மேல் ஆகாரத்தைப் போடு. நீண்ட நாட்களுக்குப் பிறகு அதன் பலனைக் காண்பாய்'***னு பிரசங்கி 11:1 சொல்லுதே. ***'எவ்விதத்திலும் நீங்கள் சுவிசேஷத்துக்கு பாத்திரமாக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்'*** பிலி 1:27ம் வலியுறுத்துதே.

கே 94. உள்ளூர் இந்துக் கோயில் திருவிழாக்களுக்கு நன்கொடையை கட்டாயமாக கேக்கிறார்கள். என்ன செய்ய?

உண்மையைச் சொல்லப் போனா கிறிஸ்தவர்கள் இந்த மாதிரி இந்துக் கோயில் திருவிழாக்களுக்கு எதுவும் கொடுக்கக் கூடாது. நீங்கள் ஒரு டவுனில், சிட்டியில, பெரிய ஊர்ல குடியிருக்கிறீங்கன்னா, நீங்க ஃபிளாட்டா மறுத்து சொல்லலாம். எந்தப் பிரச்சனையும் வராது. ஆனா நீங்க ஒரு கிராமத்தில, கட்டுப்பாடுகள் உள்ள ஒரு சின்ன ஊர்ல குடி இருக்கும் போது, அதிகமான கிறிஸ்தவர்கள் இல்லாத அந்த ஊர்ல நீங்கள் நன்கொடை தர மாட்டேன்னு சொன்னா அது உங்களுக்கு பல பிரச்சனைகளை, எதிர்ப்புக்களை, வெறுப்புக்களை, விரோதத்தை, தள்ளி வைப்பு போன்ற பல துன்பங்கள் வருகிறதுக்கு வாய்ப்பு இருக்கு.

என்ன ஆனாலும் சரின்னு எதிர்த்து நிக்க உங்களுக்கு சக்தி, பெலன், தைரியம், தில்லு இருந்தா கொடுக்க முடியாதுன்னு வைராக்கியமா சொல்லுங்க. நீங்க எதிர்ப்பு, விரோதங்கள், தள்ளி வைப்பு போன்ற பல கஷ்டங்களை அனுபவிச்சாலும் கர்த்தரோட கிருபை உங்களோட இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கே 95. கிறிஸ்தவர்கள் தியானம், யோகா பழகலாமா?

எதை நோக்கி தியானம் செய்கிறோம்கிறது ரொம்ப முக்கியம். வேத வசனங்களை தியானிப்பது, ஆண்டவரோட மகிமைகளை, அவர் நமக்கு செஞ்சுள்ள நன்மைகள் எல்லாத்தையும் தியானித்து அமைதலாக இருப்பது ரொம்ப நல்லது. அதை விட்டுட்டு டிரான்சிடெண்ட்டல் மெடிடேஷன், வெட்டவெளி தியானம், குண்டலி சக்தியை மூலாதாரத்திலிருந்து சகஸ்ராரத்தில ஏற்றி வச்சோ அல்லது அவங்க சொல்ற வாதிரி ஆறு ஆதாரச் சக்கரங்களிலும் வச்சு தியானம் பழகுறதோ கூடாது. அதே சமயத்தில அங்க அவங்க சொல்லிக் கொடுக்கிற மூச்சுப் பயிற்சி (மூச்சை டீப்பா உள்ளே இழுத்து சில வினாடிகள் வச்சிருந்து, பிறகு கொஞ்சம் கொஞ்சமா வெளியே விடுறது) நம்மோட நுரையீரலுக்கு ரொம்ப நல்லது. ரெகுலரா இந்த மூச்சுப் பயிற்சியை செய்யுறது இரத்த ஓட்டத்தை சீராக்கும், ஆஸ்துமா, ஈஸ்னோபீலியா, சைனஸ், டஸ்ட் அலர்ஜி போன்ற சளித் தொல்லைகள் வராமலும் தடுக்க முடியும்.

நம் உடம்பில் உள்ள நரம்புகளை, உடல் உறுப்புக்களை, எலும்பு ஜாயிண்ட்டுகளை, இடுப்பை பலப்படுத்துகிற யோகாசனங்களை செய்யுறது

நல்லது. இதை ஒரு உடற்பயிற்சியாக நினைத்து செய்யலாம். உடம்பை டிரம்மாக, ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கு, நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துகிறதுக்கு ஏதுவான எதையும் நாம் செய்யலாம். வேறு எந்த நோக்கத்துக்காகவும் செய்யக் கூடாது.

கே 96. கர்னாடிக் மியூசிக் கத்துக்கிட்டு ஆண்டவரைப் பற்றி கர்னாடிக் ராகத்தில் பாடணும்னு ஆசை.

பேஷா கத்துக்கிட்டு பாடுங்க. கர்னாடிக், ஹிந்துஸ்தானி, வெஸ்டேர்ன், மெலோடி, டப்பாங்குத்து, நாடோடிப் பாட்டு, வில்லுப்பாட்டு, தெம்மாங்கு, கதா காலட்சேபம் என இப்படி எல்லா இசைகளிலும், பாணியிலும் நாம ஆண்டவரைத் துதிச்சு பாடணும். டப்பாங்குத்து, நாடோடிப் பாட்டு, தெம்மாங்கு, வில்லுப் பாட்டு, கதா காலட்சேபம் மூலமா ரொம்ப எளிதா கிராமத்து மக்களிடம், பாமர மக்களிடம் சுவிசேஷத்தை கொண்டு போக முடியும். கர்னாடிக் மியூசிக் கத்துக்கிடும் போது குரல் வளம் கூடும். கமகம் நல்லா இருக்கும். கீழ் ஸ்தாயியிலிருந்து மத்திமம், உச்சஸ்தாயிக்கு இலகுவா மேல ஏறி அழகா கீழே பிசுறு இல்லாம இறங்க முடியும். சுரம் போட்டு பாட முடியும்.

கர்னாடிக் மியூசிக் கத்துக்கிடும் போது கீர்த்தனை அளவுக்கு போகாம அதுக்கு முன்னாடியே நிறுத்திக்கோங்க. கீர்த்தனைகள் எல்லாமே விக்கிரஹங்களின் துதி தான். அதுல போயி மாட்டிக்கிடக் கூடாது. அதுகளைத் திரும்ப திரும்ப லயிச்சு பாடினதுனால தானே நல்ல குரல் வளம் உள்ள பாடகரான கிறிஸ்தவரான ஏசுதாஸ் பின் மாற்றமாகிப் போனாரு.

ஜெபத் தோட்டத்திலிருந்து மதுரைக்கு என்னைத் தன் காரிலேயே அழைத்து வந்த ஃபாதர் பெர்க்மென்ஸ் அவர்கள் தான் கர்னாடிக் மியூசிக் கத்துக்கிட்டதாக என்னிடமே கூறியிருக்கிறார். அவரும் கீர்த்தனைகளுக்கு முன்பாகவே நிறுத்தி விட்டார். இன்னிக்கு அவரோட பாடல்கள் எல்லாம் பிரமாதமா இருக்கிறதுக்கு இதுவும் ஒரு காரணம். நம்முடைய கிறிஸ்தவப் பாடல்களில் வீணை, தம்புரா, மோர்சிங், புல்புல் தாரா, ஜலதரங்கம், வயலின், நாதஸ்வரம், கிளாரிநெட், ஷெனாஸ், ஃபுலூட், மிருதங்கம், தபலா, டோல்கி, தவுல், நையாண்டி மேளம், ஜண்டை என இப்படி எல்லா வாத்தியங்களையுமே யூஸ் பண்ணணும். ஃபாதரோட பாடல்கள் இவ்வளவு இனிமையா இருக்கிறதுக்கு இதுவும் ஒரு காரணம். இது போன்ற வாத்தியங்களை அவர் அதிகமாகவே தமது பாடல்களில் பயன்படுத்துகிறார்னு அவரிடம் நான் சொன்ன போது, எல்லாத்தையுமே ரொம்ப மைனூட்டா கவனிச்ச இருக்கீங்கன்னு சொல்லி சந்தோஷப்பட்டாரு.

பரத நாட்டியம், குச்சுப்புடி, கதகளி, கோலாட்டம் என எல்லா நடனங்களின் மூலமாகவும் ஆண்டவரோட சுவிசேஷத்தை, நற்செய்தியைச் சொல்லணும். கர்த்தருடைய நாமத்தை பாடித் துதித்து மகிமைப்படுத்தணும். பல சபைகளில

டிரம்ஸ், பேடு, பேங்கோ இவைகளோட தபலா, டோல்கியையும் யூஸ் பண்ணி வொர்ஷிப் நடத்துறாங்க. வாவ்.... என்ன சூப்பரா இருக்குது தெரியுமா? தேவலோகமே அப்படியே கீழே இறங்கி வந்தா மாதிரி இருக்கும்.

பட்டரைவாக்கம் பகுதியில் வசிக்கும் (சென்னை ஆவடி பக்கம்) இன்கம்டாக்ஸ் ஆபீசராக பணி புரியும் ஃபிராங்க் என்பவர் கிர்ராம ஊழியங்களுக்கு போவாரு. மறைந்த புரட்சி தலைவர் எம்.ஜி.ஆரின் ஃபேமஸ் பாட்டான 'நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்...' ங்கிற டியூன்ல அழகா நம்ம ஆண்டவரைப் பத்தி பாட்டு எழுதி, அவரே மாதிரி க்கையை காலை ஆட்டி, ஆக்ஷன் பண்ணி பாட ஆரம்பிச்ச உடனே அது வரைக்கும் கொஞ்சம் டல்லா இருந்த கூட்டத்தில அப்படி ஒரு தீப்பத்திக்கிடுச்சு. மொத்த கூட்டமுமே சின்னவங்க, பெரியவங்க, லேடீஸ் எல்லாருமே கையைத் தட்டி, விசில் அடிச்சு, உற்சாகமா சேர்ந்து பாட ஆரம்பிச்சுட்டாங்க. ஒரு சினிமா டியூன்ல நம்ம ஆண்டவரைப் பத்தி பா்டுறதான்னு மூஞ்சியை சுளிக்காதீங்க. நாம ஜனங்களை கவரணும், இழுக்கணும். அவங்களுக்கு பிடிச்ச பாணியில, ரூட்ல போயி புடிங்க. அதுல எந்தத் தப்பும் கிடையாது. ***'கிரேக்கனுக்கு கிரேக்கனைப் போலவும், நியாயப் பிரமாணம் இல்லாதவர்களுக்கு அவர்களைப் போலவும் ... எல்லோருக்கும் எல்லாமும் ஆனேன்'***னுபவுல் சொல்றாரே (1கொரி 9:20–23). நமக்கு ஜனங்க இரட்சிக்கப்படணும். ஆர்வமா ஆண்டவரோட வார்த்தைகளைக் கேட்க வரணும். அவர் அப்படி பாட ஆரம்பிச்ச உடனே தெருவில ஆங்காங்கே நின்னுக்கிட்டு, தள்ளி உட்கார்ந்துக்கிட்டு இருந்தவங்கல்லாம் வந்து கூட்டத்தில உக்காந்திட்டாங்க. அது தானே நமக்கு வேணும். சும்மா ஜமாய்ங்க. பூந்து விளையாடுங்க. சுவிசேஷத்தை அறிவிக்க, அவங்க கெட்டு நரகத்துக்குப் போகாம இருக்க, ஆண்டவரோட இராஜ்யத்தைக் கட்ட நமக்கு எதுவுமே தடை கிடையாது.

கே 97. நான் கராத்தே, ஜூடோ எல்லாம் கத்துக்கிடக்கிடணும். அது தப்பா?

கத்துக்கிட்டு என்ன பண்ணப் போறே? நீ பெரிய பலசாலின்னு காட்டிக்கிடவா? உன் தற்காப்புக்காகவா? நீ பெரிய ரவுடின்னு ஊர் உலகத்தில காட்டவா? சினிமாவில ஸ்டண்ட் நடிகரா போகவா? இல்லை விளையாட்டுப் போட்டி, ஒலிம்பிக்கில் கலந்து கொண்டு நமது நாடு பெருமைப்படும்படி தங்கம், வெள்ளிப் பதக்கங்களை வாங்கிக் குவிக்கவா? எதுக்காக இவைகளை நீ கத்துக்கிடணும்கிறது இதுல முக்கியம். ***'நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாக இருக்கிறீர்கள்'*** – 2 கொரி 6:16 சொல்லுது. நாம் எல்லாருமே நம் உடம்பின் ஆரோக்கியத்தை நல்லபடியா பாதுகாத்துக்கிடணும். அதுவும் கிறிஸ்தவர்கள் இன்னும் அதிக அக்கறை எடுத்து பாதுகாத்துக்கிடணும். ஏன்னா, இந்த சரீரம் கர்த்தருக்குரியது. ***'தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாக இருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்'***னு 1 கொரி 3:17 சொல்லுகிறதே.

கிறிஸ்தவர்கள் கொஞ்சம் நேரம் ஒதுக்கி தினமும் ரெகுலரா உடற்பயிற்சி செய்து, விளையாட்டுப் போட்டிகள், நீச்சல், இவைகளில் கலந்து கொள்ளணும். மோசே ஒரு நல்ல குத்து சண்டை வீரனாக இருந்திருக்கணும் (யாத் 2:11,12). மலை ஏறுவதிலும் அவன் கில்லாடியா இருந்திருக்கணும். தாவீது குறி வச்சு எறிகிறதில ரொம்ப சிறந்தவனா இருந்தான் (1 சாமு 13:20,40, 48–50). உடம்பு நல்லா 'கிண்'ன்னு இருந்ததுனால ஆவியானவர் பிலிப்பு கிட்ட சொன்ன உடனேயே அவர் பி.டி. உஷா மாதிரி சல்லுன்னு ஓடி நிதி மந்திரியோட ரதத்தை எட்டிப் பிடிக்க முடிஞ்சது (அப் 8:29,30). கர்த்தருடைய கரம் எலியாவின் மீது வந்த உடனே அவன் ஆகாபின் இரதத்தை விட் வேகமாக ஓடினானே (1 இராஜா 18:44–46). ***'என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்'***னு தாவீது சங் 18:29ல மார் தட்டினானே. உடல்புலம் இருந்ததுனால சிங்கத்தின் வாயிலிருந்து ஆட்டுக்குட்டியை அவனாலே காப்பாத்த முடிஞ்சுது இல்லையா? சிங்கத்தின் வாயை சிம்சோன் கிழிச்செறிஞ்சானே.

விளையாட்டுப் போட்டிகள் நமக்கு நல்ல உடல் கட்டுப்பாட்டை கொடுக்கும். சட்ட திட்டங்களுக்கு கீழ்படியவும், ஒரு டீம் ஒர்க்கை கற்று அதன்படி விட்டுக் கொடுத்து, தட்டிக் கொடுத்து, பொறுமையோட, நிதானத்தோட, ஒரு இலக்கை குறி வச்சு ஓட நமக்கு அது கத்துக் கொடுக்குதே. இதெல்லாம் இன்னிக்கு தேதியிலே நம்ம சபைகளிலே, கிறிஸ்தவ வட்டாரங்களிலே ரொம்பவும் பஞ்சமா இருக்கே. சலிக்காம தாக்குப் பிடிச்சு முயற்சிப்பது, விளையாட்டு வீரர்கள் எப்பவுமே பதக்கத்தின் மீது கண் வச்சு ஓடுறது எல்லாமே நமது சபைகளுக்கு எவ்வளவு தேவையா இருக்குது. திருச்சபைகள், சபை விசுவாசிகள், இளைஞர்கள் மத்தியில இது போன்ற விளையாட்டுப் போட்டிகளை, கேம்ஸ்களை ஊக்குவிக்கணும். இது சபைக்குள், சபை மக்களுக்குள் ஒரு ஒற்றுமையை, ஒரு மனப்பாட்டை, டீம் ஒர்க்கை வளர்க்க உதவும்.

கே 98. கிறிஸ்தவர்கள் அரசியலில் ஈடுபடலாமா? தேர்தலில் நிக்கலாமா?

கந்தாகே அரசியின் நிதி மந்திரியையும் ஆண்டவர் தொட்டு இருக்கிறார். நூற்றுக்கு அதிபதியையும் அவர் தொட்டு இருக்கிறார். தேசத்தின் நிர்வாகம் ஆண்டவரோட பிள்ளைகளின் கைகளில் இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும். இந்த தேசத்துக்காக, தேசத்தின் அதிபதிகளுக்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய, மாநில அரசுகளுக்காக, பிரசிடெண்ட், பிரைம் மினிஸ்டர், சீப் மினிஸ்டர்களுக்காகவும், நாம தொடர்ந்து ஜெபிச்சுக்கிட்டு இருக்கோமே. தேர்தலில் நின்று ஜெயிச்சு ஒரு MLA, MP, மந்திரி ஆகிறதை தவறுன்னு வேதம் எங்கயும் சொல்லலை. ஆனா இன்னிக்கு தேதியில அரசியல் ஒரு சாக்கடையாட்டம் இருக்கு. நேர்மையானவங்க அதில நிலைச்ச நிக்க முடியுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கு.

அரசியலிலும் நீதியோடு, நேர்மையோடு, உண்மையோடு, எளிமையோடு, எந்த பந்தாவும் இல்லாத, எல்லா செயல்பாடுகளிலும் எந்த ஒளிவு, மறைவு இன்றி வெளிபடையா, ஓப்பனா, டிரான்ஸ்பேரண்டா எத்தனையோ பேரு இருந்தாங்க. பெருந்தலைவர் காமராஜ், பக்தவத்சலம், கக்கன், ராஜாஜி, சி.சுப்பிரமணியம் என இன்னும் எத்தனையோ பேரு இருந்திருக்கிறார்கள். ஆனா அவங்கெல்லாம் இப்போ இருந்தாங்கன்னா ஒரு பஞ்சாயத்து போர்டு எலெக்ஷன்ல கூட ஜெயிக்க முடியுமாங்கிறது சந்தேகந்தான். நல்ல புரிசுத்தவான்களை, நீதிமான்களை, கர்த்தருக்கு பயந்து நடக்கிற பிள்ளைகளை தேவன் தேசத்தின் அரசு நிர்வாகத்திற்கு என தேர்ந்தெடுத்து அரசியலையும், ஆளும் கட்சிகளையும் எதிர்கட்சிகளையும் சுத்தப்படுத்துவாராக!

கே 99. நான் முன்பு டாஸ்மார்க் ஒயின் ஷாப்பை ஏலத்தில் எடுத்திருந்தேன். இப்போ இரட்சிக்கப்பட்டு விட்டேன். தொடர்ந்து ஒயின் ஷாப்பை ஒரு தொழிலாக, நேர்மையோடு நடத்தலாமா?

குடிகுடியைக் கெடுக்கும். மது வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடுன்னு அரசாங்கமே அதில அடிச்சு ஒட்டி இருக்கு. பலரை பாவச் சேற்றில் புதையுண்டு போக வைக்கும் அந்த புதை குழியில் இருந்து ஆண்டவர் உங்களை தூக்கி எடுத்து விட்டார். பின்ன எதுக்கு மறுபடியும் அதுல ஈடுபடணும்னு சொல்றீங்க? நீங்க எவ்வளவு நீதியோட நேர்மையோட நடந்தாலும் அது பாவந்தான். வேண்டாம். தூக்கி எறியுங்க. *'எனக்கு லாபமான எல்லாவற்றையும் இயேசுவுக்காக நஷ்டமென்றும் குப்பை என்றும் தூக்கி எறிந்தேன்'*னு பவுல் சொல்லி தூக்கி எறிஞ்சது போல எல்லாத்தையும் தூக்கி கிடாசுங்க. கர்த்தர் உங்களை அபரிமிதமாக ஆசீர்வதிப்பார்.

கே 100. எந்த ஆசையுமே இல்லாம எப்படி வாழ்றது?

யாரு உன்னை ஆசைப்பட வேண்டாம்னு சொன்னா? ஆண்டவர் மே[illegible] அவரோட வார்த்தைகள் மேல, அவர் காட்டிய வழிகள் மேல, அவரோ[illegible] ஊழியத்தின் மேல, ஆசை வை. யாரு வேண்டாங்கிறா? இந்த உலகத்தி[illegible] மேலேயோ, உலகப் பிரகாரமான காரியங்களிலோ, அதோட கவர்ச்சிகளிலே[illegible] பணத்தின் பேர்லயோ, பொண்ணுங்க மேலேயோ, ஆசை வைக்காதே[illegible] இப்படிப்பட்ட ஆசைகளே சகல விதமா பாவங்களுக்கும் வேராக இருக்கிற[illegible] இந்த ஆசைகளே உன்னை பல பாவங்களை செய்ய வச்சு அழிவுக்கு கொண்[illegible] போகும். ஆண்டவரை நல்லா பற்றிப் பிடிச்சுக்கோ. தினம் வேதத்தை வ[illegible] ஜெபம் பண்ணு. ஆண்டவரோட வார்த்தைகளின்படி நட. ஆவியான[illegible] உன்னைப் பலப்படுத்தி, சகல விதமான ஆசைகள், இச்சைகள் இந்த உலகத்[illegible] அசுத்தங்களுக்கும் உன்னை விலக்கிப் பாதுகாப்பார்.

ஆசிரியர் குறித்து...

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 69 வயது என்று நம்ப மாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும், பின்னர் ஃபென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத்துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன்முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப்படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர, பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவரையும், இவர் குடும்பத்தாரையும் தெரிந்து கொண்ட விதம், மற்றும் இவரின் தனிப்பட்ட, குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த எண்ணி மாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும், 1800க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறி வருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும், மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.